# செம்மண்

நிலம் 1 துகள் 20 வள்ளுவர் ஆண்டு 2051, 28 கார்த்திகை - 04 மார்கழி 2020 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# நிறைவான நினைவேந்தல் அரசியல்!



● ஏகலைவன்

கடந்த வாரம் முழுவதும் மாவீரர் நாள் நினைவேந்தலைத் தடுப்பதற்கு எதிரான சட்டப் போராட்டங்களிலேயே கழிந்தது. வடக்குக் கிழக்கில் உள்ள பெரும்பாலான நீதிமன்றங்களில் மாவீரர் நாளுக்கு எதிரான தடை உத்தரவைக் கோரிக் காவல்துறையினர் குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்தனர்.

இதன் மூலம் கடந்த சில வருடங்களில் இல்லாத அளவிற்கு மாவீரர் நாள் ஒரு உத்வேகத்தைப் பெற்றிருந்தது. மாவீரர் தினங்கள் கடைப்பிடிக்கப்படுவதிலும் பார்க்க பரந்துபட்ட மக்கள் கவனத்தை மாவீரர் நாளுக்கு எதிரான சட்ட நடைமுறைகளால் ஈர்க்க முடிந்திருக்கின்றது.

அதற்கும் மேலதிகமாகப் போர்க் காலங்கள் போன்று ஆயுதங்கள் தாங்கிய தரைப் படையினர் அனைத்து முக்கியமான சந்திகளிலும் நீட்டிய துப்பாக்கிளுடன் காவல் இருந்தனர். இது போர்க் காலத்தின் இறுக்கங்களை மீண்டும் ஞாபகப்படுத்துவதாக இருந்தது. கடந்த இரண்டு வருடங்களாக மாவீரர் தினங்கள் கடைப்பிடிக்கப்பட்ட போது இத்தகைய இறுக்கங்கள் இருந்ததில்லை.

இப்போது தேவையற்று இத்தகைய இறுக்கங்கள் வலிந்து திணிக்கப்படுவது ஆட்சியாளர்களுக்கு எதிரான மனோநிலையைத் தமிழர்களிடம் வளர்க்க உதவுமே தவிர, அவர்களுக்கு ஆதரவான, சாதகமான விளைவுகளை அது ஏற்படுத்திவிடாது.

ஆட்சியாளர்களுக்கும் இது தெரியாததல்ல. மாவீரர் தினங்களைக் கடைப்பிடிக்காவிட்டால் அதை யார் பொறுப்பெடுத்துச் செய்வது என்பதில் தமிழ்க் கட்சிகள் தமக்குள்ளேயே அடிபட்டுக்கொண்டு மாவீரர் நாள் நிகழ்வுகளையே மதிப்பிழக்கச் செய்துவிடும் என்பதும் ஆட்சியாளர்களுக்கு தெரியாததல்ல.

ஆனால், மாவீரர் நாள் ஒளிப்படங்கள் பின்னர் சமூக ஊடகங்களில் வெளியாகும் நிலையில் அவற்றால் ஆத்திரமுறும் சிங்கள மக்களின் ஆதரவை இழந்துவிடாதிருக்கும் ஒரு நகர்வாகவே ராஜபக்சக்கள் மாவீரர் நாளைத் தடுத்துவிடுவதில் மும்முரமாக இருக்கின்றார்கள். அதனை ஓர் அரசியல் நடவடிக்கையாக முன்னெடுத்தால் உலக நாடுகளின் அழுத்தங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்ற காரணத்தால் நீதிமன்றங்கள் ஊடாக அவற்றைத் தடை செய்வதற்கான காய் நகர்த்தல்களை அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்



# தமிழர்களாக நாம் செய்யவேண்டியவை

மாவீரர் நாள் பொது நினைவேந்தல்கள் நீதிமன்ற உத்தரவுகள் ஊடாகத் தடை செய்யப்பட்டன. இந்த நிகழ்வுகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் இனங்களுக்கு இடையிலனா நல்லிணக்கத்தைக் குழப்பி கலவரங்களைத் தூண்டக்கூடியன என்றும் ஆட்சித் தரப்பினரால் நீதிமன்றங்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அத்தோடு நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துபவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யும் அரசிதழ் (வர்த்தமானி) அறிவித்தலையும் மீறும் குற்றத்தைப் புரிபவர்களாக இருப்பார்கள் என்றும் நீதிமன்றங்களில் சொல்லப்பட்டது.

சிங்கள, பௌத்த மேலாதிக்க ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களின் நிறுவனங்களில் இருந்து தமிழர்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், சட்டரீதியாக அதனை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறித்து தமிழ்த் தரப்பிலிருந்து பரிசீலிக்கப்படுவது அவசியம்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மைத்திரி - ரணில் ஆட்சிக் காலத்திலேயே நீக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தச் சட்டத்தை நீக்கி அதற்குப் பதிலாகப் புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான வரைவுகூடத் தயாரிக்கப்பட்டது. ஆனால், அது உள்ளிருந்து கிளப்பப்பட்ட எதிர்ப்புகள் காரணமாக நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக்கப்படவில்லை.

குறைந்தபட்சம் அதையாவது நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தை ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கொடுத்திருக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் தோல்வி கண்டதன் விளைவையே தமிழர்கள் இப்போதும் அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்று கூட்டமைப்பின் நடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது குரல் எழுப்பியதுடன் தமது கடமையை நிறுத்திக்கொண்டிராமல் ரணில் விக்கிரமசிங்க அதனை நிறைவேற்றும் வகையில் இறுக்கமான அழுத்தத்தை அவருக்குக் கொடுத்திருக்கவேண்டும். அதைச் செய்யவில்லை. இப்போது மாவீரர் நாள் நினைவேந்தல் நடத்தினால் அந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டப்படுகின்றது. சிலர் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

மற்றொரு விடயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை அகற்றுவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருப்பது. போர் முடிந்துவிட்டது புலிகள் இயக்கம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது அரசு அறிவித்த பின்னரும் தனக்குத் தேவைப்படும் போதெல்லாம் புலிகள் இயக்கம் மீள் எழுச்சி பெறப்பார்க்கின்றது என்கிற கதையை ஆட்சியாளர்கள் மீண்டும் மீண்டும் பாடி வருகின்றார்கள். தமிழர்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு சட்ட ஆயுதமாக அவர்கள் அதனைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான தடை கோரும் போதுகூட ஆட்சித் தரப்பு இந்த நிகழ்வுகளை நடத்தவிட்டால் புலிகள் மீளெழுச்சி பெற்றுவிடுவார்கள், அவர்கள் இன்னும் வெளிநாடுகளில் இருக்கிறார்கள் என்கிறார்கள். ஆனால் அந்த இயக்கம் யார் தலைமையில் எந்த நாட்டில் இயங்குகின்றது என்கிற தகவல் எதனையும் அவர்கள் வெளியிடுகிறார்கள் இல்லை.

இந்த நிலையில் இருந்து விடுபட புலிகள் இயக்கம் மீதான தடையை அகற்றக்கோரும் சட்ட நடவடிக்கை தொடங்கப்படவேண்டும். அத்தோடு உலக நாடுகளினதும் மனித உரிமைகள் அமைப்புகளினதும் துணையோடும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்படவேண்டும். அப்போதுதான் தமிழர்கள் இந்த நாட்டில் நிம்மதியாக வாழும் சூழலைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளத்தையாவது உருவாக்க முடியும்.

மேற்கொள்கிறார்கள்.

இது இனிவரும் காலங்களில் மே 18ஆம் நாளுக்கான தடையாகவும் விரிவாக்கம் பெறும் என்பதை எதிர் பார்க்கலாம்.

மாவீரர் நாளை மக்கள் மயப்படுத்தி அதனை தேசிய மீள் எழுச்சிக்கான கூர்ப்பாயுதமாகப் பயன்படுத்துவதற்கு வழிவகை தெரியாதிருக்கும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளால் இந்தச் சட் டப் போராட்டங்களைத் திறம்பட எதிர் கொள்ள முடிந்திருக்கவில்லை என்பது கண்கூடு.

தடை விதிக்கப்படுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஓர் அரசியல் எதிர்ப்புணர்வுப் போராட்டமாக வழிப்படுத்துவதற்கு வேண்டிய ஆற்றலோ சக்தியோ இந்தத் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளிடம் இருக்கவில்லை. அதன் விளைவாகத் தமிழ்த் தேசிய அரசியல் மயப்பட்டிருக்க வேண்டிய இந்த விடயம் அதன் வீரியத்தை இழந்து சட்டத்தை மதிக்கும் குடிமகன்களாகத் தமிழ் அரசியல்வாதிகள் தம்மைப் பறைசாற்றிக்கொள்ளும் நிகழ்வாக மாற்றம் பெற்றது.

வேடிக்கை என்னவென்றால், தமிழர்களின் பங்களிப்புடன் இயற்றப்படாத இன்றைய அரசமைப்பை நிராகரிக்கின்றோம் என்று கூறிக்கொள்ளும் இதே தமிழ்த் தேசியக் கட்சிகள்தான், அந்த அரசமைப்பின் வழி வந்த சட்டங்களுக்கூடாக நிறைவேற்றப்படும் கட்டளைகளைத் தலைமேற்கொண்டு மதிக்கின்றன. சட்டமறுப்புப் போராட்டங்களையோ சிறைநிரப்புப் போராட்டங்களையோ சிந்திக்கும் நிலையில் கூட அவை இல்லை என்பது தேசியப் போராட்டத்தை முன்கொண்டு செல்வதில் அவற்றுக்கிருக்கும் கரிசனையை வெளிப்படுத்துகின்றது.

**தடைக்கான காரணங்கள்**

காவல்துறையினரைப் பொறுத்தவரையில் அவர்கள் 3 விடயங்கள் ஊடாக இந்தப் பிரச்சினையை அணுகினர்.

முதலாவது பயங்கரவாதத் தடைச் சட்டம், இரண்டாவது இலங்கை அதிபரால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்படுவதாக வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிப்பு, மூன்றாவது தேசிய பாதுகாப்பு ஆகிய மூன்று விடயங்களுக்கு ஊடாகவும் இந்த விடயத்தை அணுகியது ஆட்சித் தரப்பு.

அதற்காக அது தேர்தெடுத்தது குற்றவியல் சட்டக்கோவை 106 பிரிவு 1. இது பொதுத் தொல்லைகள் தொடர்பில் நீதிவான் ஒருவர் தற்றுணிபின் அடிப்படையில் கட்டளை பிறப்பிப்பது தொடர்பான சட்டம்.

இதனடிப்படையில் கோப்பாய் காவல் துறைப் பிரிவின் பொறுப்பதிகாரி 37 பேருக்கு எதிராகவும் யாழ்ப்பாணம் காவல்துறைப் பொறுப்பதிகாரி அவர்களில் 14 பேருக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் "பி" அறிக்கையைத் தாக்கல் செய்து அவர்கள் பொது இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தக்கூடாது என்று தடை உத்தரவிடும்படி நீதிமன்றத்தில் கோரினர். தடை உத்தரவைப் பெறுவதற்கான காரணங்களில் ஒன்றாகக் கொரோனா, கொவிட் -19 பெருந்தொற்றுப் பரவலையும் ஆட்சித் தரப்பினர் சேர்த்துக்கொண்டனர்.

தடை கோரப்பட்டவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர், ஊடகவியலாளர், யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கியிருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல்வாதிகள்.

இறந்த உறவினர்களை நினைவேந்துவதற்கான உரிமை எமக்கு இருக்கின்றது என்று இவர்கள் சார்பில் மன்றில் வாதிட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர். பொதுத் தொல்லைகள் சட்டத்தின் கீழ் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கவேகூடாது என்று அவர்கள் வாதிட்டனர். இன்னும் ஒருபடி மேலேபோய், இந்த வழக்கை வேறு எந்தவொரு சட்டப்பிரிவின் கீழும் காவல்துறையினர் தாக்கல் செய்யலாம், ஆனால் 106இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருப்பது பிழை என்றார் சட்டத்தரணியும் அரசியல்வாதியுமான என்.சிறிகாந்தா. அவரும் எதிராளிகளில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டிருந்தார்.

**சட்டம் ஒரு இருட்டறை**

குற்றவியல் "பி" அறிக்கையின் கீழ் நீதிமன்றத்தில் காவல்துறையினர் ஒரு வழக்கைத் தாக்கல் செய்யவேண்டுமாயின் அதற்குக் குற்றம் நிகழ்ந்திருப்பதற்கான ஆதாரங்கள் மன்றில் முன்வைக்கப்பட்டிருக்கவேண்டும் என்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். நினைவேந்தல் தமிழ் மக்களின் உரிமை என்றும் அதனைத் தடுக்க முடியாது என்றும் தெரிவித்தனர். நிகழப்வோவதாகக் காவல்துறையினர் கற்பனை செய்யும் விடயங்களின் அடிப்படையில் நீதிமன்றம் தடை உத்தரவுகளைக் கொடுக்க முடியாது என்றும் வாதிட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக இந்த நிகழ்வுகள் நடந்தபோது ஏற்படாத தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் இந்த ஆண்டு மட்டும் எப்படி வந்தது என்றும் கேள்வி எழுப்பினர்.

நீண்ட நேரமாகச் சட்டத்தரணிகள் பலர் மீண்டும் மீண்டும் இந்த விடயங்களை வலியுறுத்தியபோதும் நீதிமன்றங்கள் பொது இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தலைச் செய்வதற்கு 106 பிரிவு ஒன்றின் கீழ் தடை உத்தரவுகளை வழங்கின.

பிரதிவாதிகளுக்கு எதிராக ஆதாரங்கள் எவையும் முன்வைக்கப்படாதபோதும், காவல்துறையினர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தினரின் கற்பனை வாதங்கள் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட நிலையிலும் (ஒரு கட்டத்தில் இத்தகைய நிகழ்வுகளை நடத்த அனுமதித்தால் தமிழகத்தில் இருந்தும் கடல் வழியாக வந்து ஆள்கள் கலந்துகொள்ளக்கூடும் என்ற கற்பனை வாதத்தைக் கூட கொழும்பிலிருந்து வந்திருந்த மூத்த உதவி மன்றாடி நாயகம் கரிப்பிரியா ஜெயசுந்தர நீதிமன்றில் தெரிவித்தார்) தடை உத்தரவுகள் வழங்கப்பட்டன.

பொது நிகழ்வுகளுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியபோதும் நேற்றிரவு பரவலாக மாவீரர்களுக்குத் தனித் தனியாக மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். ஒரு சிலர் உயிரிழந்த தமது உறவினர்கள் சாதாரண உடையில் இருக்கும் படங்களை முன்னிறுத்தித் தாம் இருந்த இடத்திலேயே அத்தகைய அஞ்சலியைச் செலுத்தினர். தலைவர்களுக்கு வழி வகை தெரியாவிடினும் மக்கள் தமக்கான வழிகளைக் கண்டறிந்துகொண்டே இருக்கின்றனர்.

அதற்கு மேலாகக் கெட்டதிலும் ஒரு நல்லதாக நீதிமன்றங்கள் பொது இடங்களில் மாவீரர் நிகழ்வுகளை நடத்துவதற்கு மட்டுமே தடை உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தன. அதன் மறுவளமாகப் பார்த்தால் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளில் மாவீரர் நாளைக் கடைப்பிடிப்பது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை அல்ல என்பதை ஏற்றுக்கொண்டது போலாகின்றது. எனவே இனிவரும் கார்த்திகை 27ஆம் நாளை ஒட்டுமொத்தத் தமிழர்களும் வீடுகளில் இருந்தபடி நினைவேந்துவதற்கு ஏதுவான திட்டமிட்ட ஒழுங்குபடுத்தல்களை உரிய தரப்பு ஒன்று முன்னெடுப்பது காலத்தேவை.

அதற்கு முன்பாக மாவீரர் நாளை மக்கள் மயப்படுத்துவதற்கும் இந்த நிகழ்வின் பால் மக்களை ஒன்று திரட்டுவதற்குமான நடவடிக்கைகளும் அவசியம். ■

**வாசிக்கக் காத்திருங்கள்!**

*[illegible] அந்த மாடு' என்ற தலைப்பில் வெளியாகிய சிறுகதையின் [illegible] 27 இல் வெளியாகும். வாசிக்கக் காத்திருங்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால்பந்தின் கடவுள்

## கல்லறையில் தூங்குகிறான்



● ரி.பி.அன்ரன்

அந்தச் சாவு அறிவிப்பு திடீரென செய்திகளை ஆக்கிரமித்திருந்தது. அவரைப் பற்றி அண்மைக் காலங்களில் வெளிவந்த செய்திகள் எவையும் ஈர்க்கும்படி இல்லை என்றாலும் அவரது சாவு 80களின் பசுமையான காலத்தை மீண்டும் மீட்டி கண்களை நனைத்தது.

இப்போது போன்று தொலைத்தொடர்பு சாதனங்களும் செய்தி ஊடகங்களும் நவீனமாய மாகிப் பரவிக் கிடந்த காலமல்ல அது. வானொலி அல்லது பத்திரிகை, கொஞ்சம் வசதி படைத்திருந்தால் தொலைக்காட்சி ஊடாகத்தான் அந்தப் பெயரும் முகமும் எமக்கெல்லாம் அறிமுகம். கால்பந்தாட்டத்தின் இளம் கடவுளாக அவரை மொத்த உலகமும் கொண்டாடிய மறக்கமுடியாத காலம் அது.

டியாகோ மரடோனா என்கிற பெயரே உழைக்கும் ஏழை மக்களின் உணர்வெழுச்சியாக இருந்தது. அற்புதமான வீரன், எந்தச் சவாலையும் முறியடித்து தனது அணியை எப்படியும் வெற்றிபெற வைத்து விடக்கூடிய சாதனையாளன். பணக்கார அணிகளுக்கு எதிராக வசதி குறைந்த அணிகளையும் வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்ற சூராதிசூரன்.

கால்பந்தாட்ட ரசிகர்களால் கடவுளாக மதிக்கப்பட்டவர். இந்த விளையாட்டின் பிதாமகனான பீலேயை விடவும் கொண்டாடப்பட்ட ஒரு வீரன். அதற்குக் காரணமும் இருந்தது. மரடோனா வெறும் விளையாட்டு வீரனாக மட்டுமல்லாமல் உழைக்கும் வர்க்கத்தின் பிரதிநிதியாகவும் இருந்தவர்.






### வரலாறு

ஆர்ஜென்ரீனா நாட்டின் லனூஸ் நகரில் 1960ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் நாள் பிறந்தவர் மரடோனா. மிக வறியது அவரது குடும்பம். 4 பெண்களுக்குப் பின்னர் பிறந்த முதல் ஆண் குழந்தை மரடோனா. அவருக்குப் பின்னால் 2 தம்பிகள் உள்ளனர். 3 வயதில் கால்பந்து முதன் முதலில் ஒரு பரிசாகக் கிடைத்தது மரடோனாவுக்கு. அது முதல் அதன் மேல் பைத்தியமானார் அவர்.

மிகச் சின்ன வயதிலேயே கால்பந்தாட்டத்தில் தானொரு அசகாயசூரன் என்பதை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டார் மரடோனா. தன்னுடைய பகுதியிலிருந்த உள்ளூர் கழகத்தில் அவர் விளையாடத் தொடங்கியபோது அவருக்கு வயது 8. மற்றவர்களைப் போலில்லை, அவன் வேறு தரம் என்பதை அடையாளம் கண்டுகொண்டனர் பயிற்சியாளர்கள். மரடோனா விளையாடிய காலங்களில் அந்த அணி இடைவிடாமல் 136 போட்டிகளில் வென்று தேசியப் போட்டியிலும் வெற்றிவாகை சூடியது.

அதுதான் மரடோனாவின் தனித் திறமை. சாதாரணத்திற்கும் குறைவான உயரமே இருந்தாலும் பந்தைக் கையாளுவதில் இருந்த அதீத வல்லமை, எந்த நெருக்கடியான சூழலிலும் தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் கோல் அடிக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும் சூசகம், எதிரணி வீரர்கள் பலருக்கு இடையிலும் புகுந்து, ஏய்த்து, நெளித்துச் சுழித்துப் பந்தைத் தள்ளிச் செல்லும் லாபகம் எல்லாமே வாய்க்கப் பெற்றிருந்ததால் 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற வீரனாகக் கொண்டாடப்பட்டான் மரடோனா.

14 வயதில் நாட்டின் இளவல்கள் (ஜூனியர்) அணியில் சேர்க்கப்பட்டார். 1976இல் தனது 16ஆவது வயது நிரம்புவதற்கு 10 நாள்கள் இருக்கையில் பிராந்திய ரீதியான முக்கியமான போட்டில் முதன் முதலாகக் களமிறங்கிக் கலக்கினார். விளைவு நான்கே மாதங்களில் தேசிய அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.



தனது கடைசி மகனுடன் (7 வயது) மரடோனா

ஆர்ஜென்ரீனா தேசிய அணியின் வரலாற்றில் மிக இளம் வயதில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஒரேயொருவர் என்கிற அவரது சாதனை இன்று வரை முறியடிக்கப்படவில்லை. தேசிய அணியில் இருந்தும் 1978ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்துப் போட்டியில் விளையாட அவருக்கு அனுமதியளிக்கப்படவில்லை. காரணம் உலகக் கிண்ணம் போன்ற பெரிய, அழுத்தம் கூடிய போட்டிகளில் பங்கேற்பதற்கான வயது முதிர்ச்சியை அவர் பெறவில்லை என்று கருதியமைதான். அந்த ஆண்டு ஆர்ஜென்ரீனாதான் உலகக் கோப்பையை வென்றது.

### அதி சிறந்த வீரர்

அடுத்த வருடமே 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக கால்பந்துப் போட்டியில் ஆர்ஜென்ரீனா அணிக்குத் தலைமை தாங்கினார். அவரது அதீத திறமையைக் கண்ட ஐரோப்பிய கழகங்கள் அவரைப் பெரும் தொகைப் பணம் கொடுத்து வாங்கப் போட்டி போட்டன. ஸ்பெயினின் பார்சிலோனா, இத்தாலியின் நப்போலி போன்ற பெரிய கழகங்கள் உள்ளிட்ட பல கழகங்களில் ஆடியிருக்கின்றார்.

அந்தக் காலத்தில் அணிப் பரிமாற்ற முறையில் வீரர்கள் கைமாற்றப்படும்போது ஆகக்கூடுதல் தொகைக்கு இரண்டு தடவைகள் கைமாற்றப்பட்ட சாதனையை நிகழ்த்தியவர் மரடோனா. பார்சிலோனா அணிக்கு மாற்றப்பட்ட போது அவருக்காகக் கொடுக்கப்பட்ட தொகை 5 மில்லியன் பவுண்டுகள். அங்கிருந்து நப்போலிக்கு மாற்றுவதற்குக் கொடுக்கப்பட்ட தொகை 6.9 மில்லியன் பவுண்டுகள்.

நப்போலியில்தான் அவர் அதிக காலம் விளையாடினார். மரடோனாவின் காலத்தில்தான் அந்த அணி ஆகக்கூடுதல் உயரங்களைத் தொட்டது. 1987 மற்றும் 1990 ஆண்டுகளில் லீக் போட்டிகளில் அணியை வெற்றிவாகைசூட வைத்தார்.

அளவுக்கு மீறிய பணம், புகழ் எல்லாமும் ஓர் ஏழை இளைஞனுக்கு கொட்டிக் கிடைத்தபோது அதை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் தடுமாறிய மரடோனா, 1990இல் கொக்கேய்ன் போதைப் பொருளைப் பயன்படுத்தியதற்காக ஆர்ஜென்ரீனாவில் கைது செய்யப்பட்டார். 15 மாதங்கள் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

தடைக்குப் பின்னர் விளையாட வந்த அவர் ஸ்பெயின் நாட்டின் செவில்லா கழகத்திற்காகவும் ஆர்ஜென்ரீனாவின் நிவெல்ஸ் ஓல்ட் போய்ஸ்

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னிப்பு கேட்க வைத்த புட்டின் கெத்து!

● கனிமொழி, குமரன்

தமிழ் மக்களின் பாரம்பரிய உணவுகளில் ஒன்றான புட்டு கடந்த வாரத்தில் தமிழர்களின் தேசிய உணவு, உணர்வு என்கிற மதிப்புக்கு உயர்ந்தது. அதிலும் இத்தாலிய பாரம்பரிய உணவான பிட்ஸாவுக்கு எதிரான உலக மதிப்பையும் சுவீகரித்தது.

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றத்தில் நடந்த வழக்கு ஒன்றில் யாழ். மாவட்ட தலைமைக் காவல் அதிகாரியான பிரசாத் பெர்னான்டோ புட்டையும் பிட்ஸாவையும் ஒப்பிட்டுத் தெரிவித்த ஒரு கருத்தே புட்டின் மதிப்பை இந்தளவிற்கு உயர்த்தி விட்டது. அத்துடன் நின்றுவிடாமல் புட்டின் மீதான தமிழர்களின் காதலையும் உலகமறிய வைத்து விட்டது.

கார்த்திகை 21ஆம் நாள் முதல் 26ஆம் நாள் வரையிலான காலப்பகுதி மாவீரர் வாரமாக விடுதலைப் புலிகளின் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. 27ஆம் நாள் மாவீரர் நாளாகத் துயிலுமில்லங்களில் விளக்கேற்றும் நினைவேந்தல் சடங்குகளோடு எழுச்சியாக நடத்தப்பட்டு வந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னரான காலத்தில் இந்த நிகழ்வுகளுக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் தமிழர்களின் ஆதரவோடு அதிகாரத்தில் அமர்த்தப்பட்ட மைத்திரி - ரணில் ஆட்சியின் காலத்தில் இறந்தவர்களை நினைவேந்துதல் என்கிற உரிமையின் கீழ் இந்த நிகழ்வுகள் மீட்டெடுக்கப்பட்டு மீண்டும் நிகழ்த்தப்படத் தொடங்கின. ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்ததும் தடை மீண்டும் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தடவை அத்தகைய தடையை காவல்துறையினர் நீதிமன்றங்களின் ஊடாகப் பெற்றனர். அவ்வாறான தடையுத்தரவைப் பெறுவதற்கான வழக்கு ஒன்றில் தமது தரப்பு மனு தொடர்பான வாதத்தை முன்வைத்த காவல் அதிகாரியான பிரசாத் பெர்னாட்டோ புட்டுடன் பீட்ஸாவை ஒப்பிட்டுப் பேசினார். அந்த ஒப்பீடும் அவரது கருத்தும் தமிழர்களின் மனங்களைக் காயப்படுத்திவிட சமூக ஊடகங்களில் அவர்கள் ஒரு புட்டுப் போரையே நடத்திவிட்டார்கள்.


போரை முடிவுக்குக் கொண்டு வந்ததன் ஊடாக, புட்டும் சோறும் சாப்பிட்டுக்கொண்டிருந்த யாழ்ப்பாண மக்களைப் பிட்ஸா சாப்பிடும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றோம், இவர்கள் (மாவீரர் நாளை செய்ய முயற்சிப் போர்) அவர் களைப் பழைய நிலைக்குக் கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார் பிரசாத் பெர்னான்டோ.

> **புட்டுக்கு ஒரு அவமரியாதை என்றவுடன் பொங்கியெழுந்த தமிழர்கள் அதற்காகச் சோற்றைக்கூட புட்டின் பின்னால் தள்ளிவிடப் பின்னிற்கவில்லை.**

அவரது கருத்து உடனடியாகவே சமூக ஊடகமான முகப் புத்தகத்தில் பகிரப்பட்டது. உணவு உணர்வோடு ஒன்றிப்போன தொன்று என்பதால் உடனடியாகவே சமூக ஊடகங்களில் இது தமிழர்களின் உணர்வைத் தீண்டிப் பற்றிக்கொண்டது. முகப் புத்தகங்கள், புலனங்கள் (வட்சப்), கீச்சங்கள் (ருவிற்றர்) போன்றவற்றில் பலரும் புட்டின் புகழ் பாடத் தொடங்கியதுடன் அந்த உணவைக் கீழ்மைப்படுத்திய காவல் அதிகாரியை வசைபாடவும் தொடங்கினர்.


சிலர் இன்னும் ஒரு படி மேலே சென்று பாற்சோறும் தேங்காய்ச் சம்பலையும் மூன்று நேரமும் உண்பவர்களுக்கு விதம் விதமான கறிகளுடன் தமிழர்கள் உண்ணும் புட்டின் சுவையைப் பற்றிக் கதைப்பதற்கு என்ன தகுதியுண்டு என்றும்கூடக் கேள்வி எழுப்பினர்.

அது முதற்கொண்டு புட்டு உண்பது தொடர்பான ஒளிப் படங்களும் புட்டை எந் தக் கறியுடன் உண்டால் சுவையாக இருக்கும் என்பது தொடர்பான


புட்டும் கோழி இறைச்சி கறியும்



அரிசி மா புட்டும் மரக்கறி வகைகள்



குரக்கன் புட்டும் மீன் கறியும்


புட்டும் பலாப்பழமும் சம்பலும்



புட்டும் நண்டு கறியும் பருப்பும்


ஒடியல் புட்டும் சொதியும் சம்பலும்


அரிசி மா புட்டும் பாலும் சம்பலும்


புட்டும் வாழைப்பழமும் கறியும்


புட்டும் ஆட்டு இறைச்சி கறியும்


அரிசிமா புட்டும் வாழைப்பழமும் தயிரும்


புட்டும் கணவாய் கறியும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










விளக்கக் குறிப்புக்களும் புட்டின் சுவை பற்றிய அனுபவப் பகிர்வுகளும் சமூக ஊடகங்களில் நிறையத் தொடங்கின. பலரும் புட்டின் மகிமையை இந்தத் தருணத்தில் தாங்கிப் பிடிப்பது தமது தலையாய கடமை என்று நினைத்தனர் போலும் தேடிப் போய் உண்மையிலேயே புட்டுச் சாப்பிட்டனர்.

புட்டு பீட்ஸா ஒப்பீட்டை ஒட்டிய நக்கல் நையாண்டிக் கதையாடல்கள் (மீம்ஸ்) சமூக ஊடகங்களை நிறைத்தன. ரஷ்ய அதிபர் புடினுக்குப் பெயர் வந்ததற்குக் காரணமே அவரது தந்தையார் புட்டின் மீது கொண்ட மோகமே என்ற வகையில் வந்த நக்கல் அவை எல்லாவற்றினதும் சிகரம்.

உண்மையில் புட்டு, இடியப்பம் ஆகிய மாப்பொருள் உணவுகள் தமிழர்கள் பலரின் உணவுப் பாரம்பரியத்தில் ஒன்றியிருந்தாலும் அது தமிழர்களின் தேசிய உணவு என்று கொள்ளப்பட முடியாதது என்பதே உண்மை. அது நடுத்தர வர்க்கத் தமிழ் மக்களில் பலராலும் விரும்பி உண்ணப்பட்டாலும் உடல் உழைப்பை நம்பியிருக் கக்கூடிய மக்களில் பலரும் இன்னும் சோற்றை மட்டுமே தமது மூன்று நேர உணவாக அருந்தி வருகின்றனர். புட்டு, இடியப்பம் உண்டவர்களும்கூட தமது மதிய நேர முதன்மை உணவாகச் சோற்றைத் தவிர்த்ததில்லை என்பதும் முழு உண்மை.

ஆனால், புட்டுக்கு ஒரு அவமரியாதை என்றவுடன் பொங்கியெழுந்த தமிழர்கள் அதற்காகச் சோற்றைக்கூட புட்டின் பின்னால் தள்ளிவிடப் பின்னிற்கவில்லை. கேவலம் என்றோ ஒரு நாள் உண்ணும் பிட்ஸாவுக்காக வாரத்தில் பல நாள்கள் உண்ணும் புட்டை எப்படி விட்டுக்கொடுப்பது என்கிறார் கே.தர்சன்.

இந்தப் புட்டுப் பிரச்சினையால் வீடுகளில் மனைவிமாருக்கு பெரும் மகிழ்ச்சி என்கிறார் நல்லூரைச் சேர்ந்தவரான க. சாம்பவி. ஒவ்வொரு நாளும் புட்டுத்தான் சாப்பாடா என்று சினக்கும் கணவர்கள், வயதுக்கு வந்த பிள்ளைகள் இப்போது சில நாள்களாக வாயை மூடிக்கொண்டு சாப்பிடுகிறார்கள், வீட்டில் அவித்த புட்டை ஒளிப்படம் எடுத்து முகப் புத்தகத்தில் பகிர்கிறார்கள் என்கிறார் அவர்.

அந்த வகையில் தமிழர்களின் உணவுப் பாரம்பரியத்தில் இருந்து கொத்துரொட்டி மற்றும் மேலைநாட்டு உணவுகளால் புட்டு எட்டி வந்த பின்னடைவு இந்தப் பீட்ஸாப் பிரச்சினையினால் சரிசெய்யப்பட்டு புட்டு ஒரு மீளெழுச்சியைப் பெற்றுள்ளது. அதன் வீச்சு எந்தளவிற்கு என்றால் மாமைட் போன்ற பெரு நிறுவனங்கள் இந்த எழுச்சியைப் பயன்படுத்தி அதற்குள் புகுந்து தமது பொருள்களை விற்பனை செய்யுமளவிற்கு பரந்து விரிந்திருந்தது. வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு புட்டோடு மாமைட் சேர்த்துண்பது தனிச் சுவை என்று அந்த நிறுவனம் விளம்பரம் செய்தது.


வயலுக்கு இறைத்த நீர் ஆங்கே புல்லுக்கும் பொசியுமாம் என்பதைப் போல, நீதிமன்றத்தில் பிரசாத் பெர்னான்டோ கூறிய வார்த்தைகளின் சுவையைக் கூட்டுவதற்காக யாரோ ஒருவர் புட்டோடு வடையையும் சேர்த்து இ[illegible] பெரு மையும் இ[illegible] வேக[illegible] பொருளாகியது. ஆனால், உண்மையில் நீதிமன்றத்தில் புட்டு, சோறு மற்றும் பீட்ஸாவின் பெயர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன என்று உறுதிப்படுத்தினார் அங்கிருந்த செய்தியாளர் ஒருவர்.

இருந்தாலும் புட்டோடு சேர்ந்து வடையும் நாடாளுமன்றம் வரைக்கும் சென்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் புட்டு மற்றும் வடையின் சுவை பற்றி அங்கு உரையாற்றியதுடன் முன்னாள் அதிபர் சந்திரிகா பண்டாரநாயக்கவின் கணவரான குமாரணதுங்க யாழ்ப்பாணம் வந்தபோது விடுதலைப் புலிகளிடம் சாப்பிட்ட வடையைப் பற்றிச் சிலாகித்த விதத்தைக் கேட்டுப் பாருங்கள் என்றும் ஒரு போடு போட்டார்.

புட்டுக்கு ஆதரவாக எழுந்த இவ்வாறான பரந்துபட்ட எழுச்சியின் விளைவாக 25ஆம் திகதி யாழ். நீதிவான் மன்றில் நடந்த மாவீரர்கள் நாள் தொடர்பான வழக்கில் பீட்ஸாவுடன் பிட்டை ஒப்பிட்டுப் பேசிய காவல் அதிகாரியின் சார்பில், கொழும்பிலிருந்து இந்த வழக் கிற்காக வந்திருந்த மூத்த உதவி மன்றாடியார் கரிப்பிரிய ஜெயசுந்தர வருத்தம் தெரிவித்த துடன் மன்னிப்பும் கேட்டார். அது ஒரு "மோசமான உதாரணம்" என்றார் அவர்.

காவல் அதிகாரியின் கருத்து யாழ்ப்பாண மக்களையும் நீதிமன்றத்தையும் சட்டத் தரணிகளையும் காயப்படுத்தியிருந்தால் அதற்காக அதிகாரி சார்பில் தான் மன்னிப்புக் கேட்கிறார் என்று அவர் தெரிவித்தார். அதற்கு முன்னராக தனது முகக்கவசத்தை அகற்றித் தான் யார் என்பதை அனைவரும் பார்த்துக் கொள்ளட்டும் என்றும் தெரிவித்தார். அவரது அந்த மன்னிப்பைத் தொடர்ந்து காவல் அதிகாரி பிரசாத் பெர்னான்டோவும் அதேபோன்று தனது முகக் கவசத்தை அகற்றிவிட்டு "சொறி" (மன்னித்துக்கொள்ளுங்கள்) என்று இரு தடவைகள் தலையைத் தாழ்த்தி தெரிவித்தார். ■

> மேலைநாட்டு உணவுகளால் புட்டு எட்டி வந்த பின்னடைவு இந்தப் பீட்ஸாப் பிரச்சினையினால் சரிசெய்யப்பட்டு புட்டு ஒரு மீளெழுச்சியைப் பெற்றுள்ளது










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "டீல்"களால் மக்களுக்கு லாபமில்லை

● வி.திருணாசலம்

ஆங்கிலத்தில் "டீல்" என அழைக்கப்படுவது கொடுக்கல் - வாங்கல் அல்லது ஏதாவது வகையிலான பரிமாற்றங்கள் மூலம் இலகுவாகவும் குறுக்கு வழியிலும் அதிக பணம் சம்பாதிக்கும் முறையையே. இது மிக இரகசியமாக நடந்தேறுவது.

இதைச் சிங்கள தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் நாடாளுமன்ற அரசியலில் மிக நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஆட்சியமைக்கும் கட்சியில் முக்கிய அமைச்சராக இருக்கின்ற ஒருவருக்கு அந்தப் பதவி மூலம் அதிக பணம் சம்பாதிக்க வாய்ப்புண்டு. பெரும் வெளிநாட்டு ஒப்பந்தங்கள், உள்நாட்டில் வேலை வாய்ப்புகளை வழங்குதல், எரிபொருள் நிரப்பு நிலை யங்கள், மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதிகள், பொருள்கள் இறக்குமதி, சுங்கத் தீர்வையின்றிக் கொள்கலன்களைத் துறைமுகத்திலிருந்து வெளியே எடுத்தல், மணல் - கிரவல், மர வியாபாரம் என நானாவிதத்தில் அமைச்சர்களுக்கு இந்த 'டீல்'கள் மூலம் அதிக வருமானங்கள் கிடைப்பதுண்டு. இவை குறுக்குவழி உழைப்புகளாகும்.

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வாறான பொருளாதார வாய்ப்புகள் இருப்பதில்லை. ஆனால், அவ்வப்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள், புதிய திட்டங்களை அனுமதித்தல் அல்லது நிராகரித்தல் எனப் பல்வேறு தேவைகளுக்காக பெரும்பான்மையினருக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாக்குகள் தேவைப்படும் பட்சத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் டீல்கள் மூலம் பணம் சம்பாதித்துக் கொள்வர். சிறுபான்மைக் கட்சி ஒன்றில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தால்கூட அவருக்கு இரகசியமாகப் பணம் செலுத்தி அவரது வாக்கைத் தேவைக்கேற்ப சாதகமாக அல்லது பாதகமாக ஆட்சியில் உள்ளவர்களால் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. இது வாக்களித்து அந்த உறுப்பினரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்களுக்குத் தெரியாத சங்கதி.

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றி ஜே.ஆரைப் பதவிக்குக் கொண்டு வந்ததற்காக அமிர்தலிங்கத்துக்கு இஸ்ரேல் நாட்டில் வைத்து இலஞ்சப் பணத்தை ஜே.ஆர் வழங்கினார் என்று ஒரு வதந்தி உண்டு. அண்மையில்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தாவுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனுக்குப் பெருந்தொகைப் பணம் கைமாற்றப்பட்டது என்றும் வதந்தி இருக்கின்றது. இவை எல்லாம் வதந்திகளாக இருப்பதற்கான காரணம் அவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை என்பதே. ஆதாரங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வைத்துக்கொண்டு இத்தகைய "டீல்"கள் முடிக்கப்படுவதில்லை என்பது எல்லோருக்குமே தெரிந்த உண்மை.

தமிழர் அரசியலில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின் தமிழீழம் ஒன்றை அமைக்க இருப்பதாகக் கூறப்பட்டபோது அமிர்தலிங்கம் மேடையில் ஏறியதும் ஆதரவாளர்கள் தமது கைகளைச் சவர அலகால் கீறி அதில் வழிந்த குருதியால் பொட்டு வைத்தார்கள். "அடுத்த மே தினக் கூட்டம் தமிழீழத்தில் நடக்கும் என்று ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்"என்று பல வருடங்களாக அமிர்தலிங்கம் கூறினார். இதே பாணியிலேயே பின் வந்த அரசியல்வாதிகள் அரசியல்தீர்வு அடுத்த பொங்கலுக்கு, வருடப்பிறப்புக்கு, தீபாவளிக்கு என்று சொன்னார்கள் என்பது ஞாபகத்திற்கு வருவதைத் தவிர்க்க முடியாது.

சிங்களத் தலைவர்களின் தேவைக்கு ஏற்ப நாடாளுமன்றில் ஒரு நிமிடம் கை உயர்த்தினால் அதிக பணம் கிடைக்கும் என்பதைவிடத் தமது வியாபார நடவடிக்கைகள், தமது பிள்ளைகளுக்கு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படிக்கும் வாய்ப்பு, அல்லதுபோனால் நல்ல வேலை வாய்ப்பு, வாகன வரி மற்றும் வாகனச் சலுகைகள், வியாபாரச் சலுகைகள் எனப் பல வழிகளிலும் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளுக்கும் கிடைக்கின்றது. இவையும் ஒரு வகையில் ஆட்சியாளர்களால் எதிர் தரப்பினருக்கு வழங்கப்படும் "டீல்" வடிவங்கள்தான்.

அப்படியில்லையேல் அரசியல்வாதிகளால் எப்படி ஒரு சாதாரண பொது மகனிலும் பார்க்க மேம்பட்ட வாழ்க்கையை வாழ முடிகின்றது என்கிற கேள்வி எழுவதை மறுக்க முடியாது.

2009இல் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தலைவர்களைக் கட்டுப்படுத்தும் தலைமைச் சக்தி ஒன்று இல்லாது போனதன் காரணமாக சிங்களத் தலைவர்கள் தமக்கு ஏற்றவாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிகம் கையாளும் நிலைமை இருந்தது. இதனால் "டீல்"கள் சிங்களத் தரப்புக்கு இலகுவானவையாக இருந்தன.




**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தாவுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனுக்குப் பெருந்தொகைப் பணம் கைமாற்றப்பட்டது**

### தமிழ்த் தலைவர்களுக்கான பாதுகாப்பு

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு குண்டு துளைக்காத கார் ஒன்றும் தனிப் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. ரணிலின் நல்லாட்சிக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பு ஓர் அமைச்சருக்குரியளவில் வழங்கப்பட்டது. ராஜபக்சக்களின் காலத்திலும் அவருக்கு இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டே வருகின்றது. இவையும்கூட ஒரு வகையில் "டீல்"களுக்கான அடிப்படைகளாகப் பார்க்கப்படவேண்டியவையே.

இத்தகைய "டீல்"களால் சிங்களவர்களும் முஸ்லிம்களும் நன்மையடைந்தார்கள். தவிர, அதிக உயிரிழப்புகளையும் சொத்திழப்புகளையும் உடல் அவயங்களையும் இழந்த தமிழ் மக்கள் நன்மையடையவில்லை. போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழை மக்கள். போர் முடிவுக்கு வந்தபின்னும் அவர்கள் பரம ஏழைகளாகவே இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● ஸஹேடோ ஸ்வாமி

**தொற்று வந்த பின் காக்கும் மருத்துவ முறைகள் ஏலவே பயன்பாட்டில் உள்ளன. அதேநேரம் தொற்றுவருமுன் காக்கும் தடுப்பு மருந்து தொடர்பிலும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.**

இலங்கையில் இனங்காணப்பட்டிருக்கும் கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த திங்கட்கிழமை 20 ஆயிரத்தை எட்டி இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது. கொவிட் - 19 தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும், தற்போதும் 200 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் நாளாந்தம் கண்டறியப்பட்டு வருகிறார்கள். கொவிட் - 19 உடன் தொடர்புடைய இறப்புகளிலும் ஒரு வகை சடுதியான அதிகரிப்பு பதிவாகியிருக்க, இயல்பு வாழ்க்கை குழப்பமடைந்த நிலைவரத்தினை நாடு எதிர்கொண்டிருக்கிறது.

கொரோனாத் தொற்றின் முதல் அலை இலங்கையைத் தாக்கிய வேளையில் காட்டப்பட்டதைப் போன்ற ஆர்ப்பரிப்பு, தற்போதைய



# கொரோனா தடுப்பு மருந்துக் கனவு!

நிலையில் காட்டப்படாததுடன் கொரோனாவைச் சகித்துக்கொண்டு வாழ்க்கையைக் கொண்டு நடத்த மக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். உலகெங்கிலும் பொருளாதார நிலையை ஆட்டங்காணச் செய்திருக்கும் கொரோனாத் தொற்று, இது வரை 14 லட்சத்துக்கும் அதிக உயிர்களை காவு கொண்டுள்ளது.

மருத்துவ அறிவியல் உலகினை சவாலுக்கு உட்படுத்தியிருக்கும் கொவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்த, தொற்று வந்த பின் காக்கும் மருத்துவ முறைகள் ஏலவே பயன்பாட்டில் உள்ளன. அதேநேரம் தொற்று வருமுன் காக்கும் தடுப்பு மருந்து தொடர்பிலும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

### மகேஷி இராமசாமியின் பங்களிப்பு

பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் முன்னெடுத்துவரும் கொவிட்-19 தடுப்பு மருந்தை கண்டறியும் முயற்சியில் இலங்கைத் தமிழ் பூர்வீகத்தினைக் கொண்ட மருத்துவர் மகேஷி இராமசாமி முதன்மை ஆய்வாளர்களுள் ஒருவராகப் பங்களிக்கிறார் என்று தெரிய வந்துள்ளது. இலங்கையைச் சேர்ந்த விஞ்ஞானியான ரஞ்சன் இராமசாமியின் மகளான இவர், தொற்று நோய்கள் தொடர்பில் பயிற்றப்பட்ட நிபுணராக விளங்குவதுடன் மூத்த விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகிறார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் குழந்தை மருத்துவ பீடத்தைச் சேர்ந்த இவரின் பங்கேற்புடன் நடந்தேறியிருக்கும் ChAdOx1 nCoV-19 தடுப்பு மருந்தை மனிதரில் பரிசோதித்துப் பார்க்கும் பரீட்சார்த்த சோதனையில் முன்னேற்றகரமான முடிவுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளுக்கு பெயர்போன 'தி லான்சற்' சஞ்சிகையில் இந்த ஆய்வின் விவரம் கடந்த 19ஆம் திகதி வெளியாகியிருப்பதுடன் அந்த ஆய்வு தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் மகேஷியே நியமிக்கப்பட்டுள்ளார்.

### நாடாளுமன்றில்...

கொவிட்-19 தொற்றிற்கான தடுப்பு மருந்து தொடர்பான விடயப் பரப்பு கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றிலும் மேலெழுந்திருந்தது. கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பு மருந்தின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளதென அங்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்தத் தடுப்பு மருந்தினை இறக்குமதி செய்ய ஆட்சியாளர்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என சஜித் பிரேமதாச கேள்வியெழுப்பியிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்குப் பதிலளித்துக் கருத்துத் தெரிவித்த இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, உலக சுகாதார நிறுவனம் ஒப்புதல் அளிக்கும் கொவிட்-19 கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பு மருந்தினை இறக்குமதி செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஆட்சியாளர்கள் எடுப்பார்கள் எனத் தெரிவித்திருந்தார். உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்காத தடுப்பு மருந்து ஒன்றிற்கு மக்களைப் பரிசோதனை விலங்குகளாக்க முடியாது எனவும் அவர் மன்றில் குறிப்பிட்டார்.

2021ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் குடிமக்களுக்குத் தடுப்பு மருந்தினை வழங்குவதற்கான ஒதுக்கீடுகள் எதுவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வில்லை என்பதை சுட்டிக் காட்டிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, அமெரிக்கா இந்த நடவடிக்கைக்காக 26 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளதையும் நினைவூட்டினார். மக்களுக்குத் தடுப்பு மருந்து வழங்குவதற்கான பொறி முறையை நடைமுறைப் படுத்துவதற்கு தகுந்த திட்டமிடலும் ஒருங் கிணைப்பும் வழங்கப்பட வேண்டும் எனவும் பொன்சேகா குறிப்பிட்டார். அது உண்மையும் கூட.

### தடுப்பு மருந்து தாமதமாகும்

கொரோனாவிற்கான தடுப்பு மருந்து தொடர்பில் பலரும் பலவாறு கருத்து வெளியிட்டிருக்கையில், தடுப்பு மருந்து மற்றும் தொற்றுநோய்கள் தொடர்பான இலங்கை அமைப்பு இது தொடர்பில் தனது கருத்தினை அண்மையில் வெளியிட்டிருக்கிறது.

பொதுநலன் கருதிய அறிவிப்பாக அதனை விடுத்திருக்கும் அந்த நிபுணர்கள் அமைப்பு, கொவிட்-19 தடுப்பு மருந்து (மற்ற நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து) இலங்கைக்கு கிடைப்பது தாமதமாகும் என அறிவித்திருக்கின்றது. கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், பைஸர் மற்றும் மொடேர்னா வகைத் தடுப்பு மருந்துகள் 95 வீதம் எதிர்ப்பு சக்தியை கொண்டுள்ளனவாகக் கொள்ளப் படுகின்ற போதிலும், அவை இன்னமும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தும் அமைப்புக்களிலோ அல்லது உலக சுகாதார நிறுவனத்திலோ பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மொடேர்னா ரக தடுப்பு மருந்து விரைவில் பாவனைக்கு விடப்படலாம் என எடுத்துக்கொள்ளப்பட்டாலும், அது விரைவில் இலங்கைக்கு கிடைக்க சாத்தியமில்லை என அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், இந்தத் தடுப்பு மருந்தின் மில்லியன் கணக்கான மருந்தளவுகளைப் பெறுவதற்கு ஒப்பந்தங்களை ஏற்கெனவே செய்துகொண்டு விட்டன. இந்த மருந்தின் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகள் முற்றுப் பெறாத நிலையில், முற்பணம் செலுத்தி மருந்தினைப் பதிவு செய்து வைக்கும் நிலையில் இலங்கை இல்லை எனச் சுட்டிக்காட்டியிருக்கும் அந்த அறிக்கை, கொவக்ஸ் (COVAX) என்னும் உலக சுகாதார நிறுவனத்துடன் சார்ந்த அமைப்பு ஊடாகவே இலங்கைக்கு கொவிட்-19 தடுப்பு மருந்து கிடைக்கச் சாத்தியமிருப்பதாக அறிவித்திருக்கிறது.

கொவக்ஸ் அமைப்பினுடைய வாக்குறுதியின்படி இலங்கைக்கு தடுப்பு மருந்து கிடைத்தாலும், அது முதலில் முன்னுரிமைக்குரிய தரப்பினருக்கே வழங்கப்படும் எனக் குறிப்பிட்டிருக்கும் அந்த அறிக்கை, சுகாதாரத்துறையினர், சமூக சேவையாளர்கள், வயது முதிர்ந்தோர் மற்றும் நாட்பட்ட தொற்றா நோய்த்தாக்கத்திற்குட்பட்டோர் போன்றோரை முன்னுரிமைத் தரப்பினுள் அடக்கியிருக்கிறது.

அதுவும் 2021ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே அவ்வகை தடுப்பு மருந்து இலங்கைக்குக் கிடைக்கச் சந்தர்ப்பம் உள்ளதாக அந்த அமைப்பு தெரிவிக்கிறது. குறிப்பிட்ட அளவு தடுப்பு மருந்துகளை இலங்கைக்கென ஒதுக்கி வைக்க, இலங்கை அவற்றைப் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்பாடு உள்ளது. எனினும், தடுப்பு மருந்தின் ஒரு மருந்தளவிற்கான செலவு 20 அமெரிக்க டொலரை தாண்டுமானால் எந்த ஒரு நாட்டுக்காகவும் கொவக்ஸ் அமைப்பினூடாகத் தடுப்பு மருந்துக் கொள்வனவு செய்யப்படாது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், கொவிட்-19 தடுப்பு மருந்து தொடர்பான உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியிருக்

(19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்முனைத் தமிழர்களின் கண்ணீர்க் கதை....!

● அகில்

கிழக்கு இலங்கையின் முகவெற்றிலை என்று வர்ணிக்கப்படும் வர்த்தக நகரமான கல்முனை மாநகரில் முஸ்லிம்களும் தமிழர்களும் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றார்கள். தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் எடுத்துக் காட்டான, முன்னுதாரணமான மாநகரமாகக் கல்முனை மாநகரை மிளிரச் செய்வோம் என்ற பலரது, குறிப்பாக அரசியல்வாதிகளின் வாய்ச் சவடால்களுக்கு மத்தியில் நீறுபூத்த நெருப்பாகக் கல்முனைத் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினை ஒன்று நீடித்து வருகின்றது.

ஆம்! கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக நீடித்துவரும் கல்முனை வடக்கு (தமிழ்) உப பிரதேச செயலகத்தை முழுமையான அதிகாரம் கொண்ட பிரதச செயலகமாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற கல்முனை வாழ் தமிழ் மக்களின் உணர்வுகளோடு ஒட்டிய, உயிர்நாடியான கோரிக்கையே அதுவாகும்.

கல்முனை மாநகர் வாழ் தமிழ் மக்கள் அற வழியிலும் அரசியல் வழியிலும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்வதற்குக் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாகப் போராடி வருகின்றபோதிலும் இந்த மக்களின் துன்பியலாக இன்றுவரை அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

"எல்லைப் பிரச்சினை" என்கிற போர்வையில் கல்முனை மாநகர் வாழ் முஸ்லிம்கள், குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினதும் அதன் பிரதேச அரசியல்வாதிகளினதும் சில முஸ்லிம் அமைப்புக்களினதும் கடும் எதிர்ப்புக் காரணமாகக் கல்முனைத் தமிழ்ப் பிரதேச சபை அமைவது தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.

முழு அதிகாரம் கொண்ட கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உருவாகுமானால், கல்முனை தரவைப் பிள்ளையார் கோயில் முன்வீதியிலிருந்து பெரிய நீலாவணை வரையுள்ள தமிழர்கள் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கிய எல்லை அதற்கு வகுக்கப்படுமென்பது முஸ்லிம் தரப்பினரது அச்சநிலையாகும். இதுவே அவர்கள் தமிழ்ப் பிரதேச செயலகத்தை எதிர்ப்பதற்குக் கூறும் முக்கிய காரணமுமாகும்.

இந்தப் பகுதிக்குள்ளேயே கல்முனை நகர வர்த்தகத் தொகுதியின் பெரும்பாலான பகுதிகளும் அடங்குகின்றன. தமிழ்ப் பிரதேச செயலகம் வந்தால் நகரம் மற்றும் இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள முஸ்லிம் குடியிருப்புக்களும் அதன் நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும். தமது அரசியல்வாதிகளின் முழு முயற்சியில் விரிவாக்கமும் அபிவிருத்தியும் கண்ட கல்முனை நகரத்தைத் தமிழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் எப்படிக் கையளிப்பது அல்லது ஏன் கையளிக்க வேண்டும் என்பதே முஸ்லிம்களில் பலரதும் நிலைப்பாடு.

தமிழர்களிடம் இதற்கான தெளிவான பதில் உண்டு. கடந்த 30 ஆண்டுகளாகத் தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவில்லை என்பதால் முஸ்லிம் பிரதேச செயலகத்தின் கீழ் தமிழர்கள் இருக்கும்போது ஏன் தமிழர்களின் நிர்வாகத்தின் கீழ் முஸ்லிம்களால் இருக்க முடியாது என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

தமிழர்களின் பாரம்பரியப் பகுதிகள், இடங்கள் 30 வருடங்களுக்கு முன்னர் ஏனைய இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டதை அடுத்தும் மூவின மக்களும் வாழும் இந்தப் பகுதியில் இருந்த மாவட்டச் செயலகம் மூலம் தமிழ் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் போதியளவில் முன்னெடுக்கப்படாமை காரணமாகவே தமிழர்களுக்கென ஒரு தனியான பிரதேச செயலகப் பிரிவு அமைக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கை எழுப்பப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கல்முனை தமிழ் உப பிரதேச செயலகப் பிரிவும் உருவாக்கப்பட்டது.

இந்த அடிப்படையிலேயே பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு **12.09.1989** அன்று **M/HA6/89** என்கிற அரசிதழ் அறிவிப்பு மூலம் கல்முனை உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து




**28.07.1993**ஆம் ஆண்டு கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் உள்ளிட்ட 28 உப பிரதேச செயலகங்களை முழுமையான பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதியளித்தது. ஆனால் 27 உப பிரதேச செயலகங்களும் தரமுயர்த்தப்பட்டுவிட அரசியல் தலையீடுகள் காரணமாக கல்முனை வடக்கு உபபிரதேச செயலகம் மட்டும் தரமுயர்த்தப்படவில்லை.

பனம்பலன ஆணைக்குழு, மொரகொட ஆணைக்குழு என்பவற்றின் முன்பாகவும் தமிழர்கள் இதுதொடர்பில் சாட்சியமளிக்கப்பட்டது. தரமுயர்த்தலை வலியுறுத்தும் கோரிக்கைகளும் போராட்டங்களும் வலுத்தன.

குறிப்பாகக் கடந்த வருடம் (2019) ஜூன் மாதம் 17ஆம் திகதி தொடக்கம் கல்முனை உ பபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித்தருமாறு கேட்டு நடந்த பெரும் பட்டினிப் போராட்டம் முழு நாட்டையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

காவி உடைகளின் ஆதரவுடனும் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் சில நாள்களுக்கு நீடித்த பின்னர் "வாக்குறுதிகளுடன்" முடிவுக்கு வந்தது. உடனடி நடவடிக்கையாகக் கல்முனை உப பிரதேச செயலகத்திற்கு ஒரு கணக்காளர் நியமிக்கப்படுகின்றார் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் ரணில் ஆட்சியில் அதுகூட நடக்கவில்லை.

பின்னர் அதிபர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் எல்லாம் வந்தபோது இந்தப் பிரச்சினை அங்கு மிக முக்கிய பேசுபொருளாக இருந்தது. நாட்டில் பெரும்பாலும் இனப் பதற்றத்தை ஏற்படுத்துபவரான பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர்கூட இந்த விவகாரத்தில் தலையிட்டார். "பொதுத் தேர்தல் முடிந்தவுடன் கல்முனைக்கே எனது முதல் படையெடுப்பு" என்றெல்லாம் வீரவசனம் பேசினார்.

கல்முனை வடக்குத் தமிழ் பிரதேச செயலகத்தைத் தமிழர்களுக்காகத் தான் பெற்றுத் தருவார் என்றும்கூட அவர் சூளுரைத்தார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் பரப்புரையின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக இந்த விடயம் மிகப் பெரியளவில் கையாளப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் தளபதியும் தற்போது ஆட்சியாளர்களுடன் ஒன்றியிருப்பவருமான கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் இந்தப் பிரதேச செயலகத்தை ராஜபக்சக்களின் மூலம் பெற்றுத்தருவார் என்று வாக்குறுதியளித்து அம்பாறை (திகாமடுல்ல) தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டுக் கணிசமான வாக்குகளையும் பெற்றுக்கொண்டார். இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த முறை அம்பாறை மாவட்டத்தில் தான் கொண்டிருந்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்தது.

ஆனால் தேர்தலின் பின்னரும் கல்முனை தமிழ் பிரதேச செயலகப் பிரச்சினை கிணற்றில் போட்ட கல்லாகவே இருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை திடீரென ஒலித்தது. கார்த்திகை 20ஆம் நாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இது தொடர்பில் ஒத்திவைப்புவேளை முன்மொழிவு ஒன்றைக் கொண்டு வந்தார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தில் தற்போது ஒரு நிர்வாக அலுவலரும், 29 கிராம அலுவலர்களும் 215 அரச பணியாளர்களும் கடமையாற்றுகிறார்கள் என்று குறிப்பீட்ட சார்ள்ஸ் நிர்மலநாதன், இந்த உப பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்துவது தொடர்பான பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றை ஆட்சியாளர்கள் முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தக் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் கலையரசன் ஆகியோரும் வழிமொழிந்தார்கள். கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று ஆளும் தரப்புடன் இணைந்து தற்போது பிரதி அமைச்சராகவும் இருக்கின்றவரான வியாழேந்திரனும்கூட இந்த

(17ஆம் பக்கம் பார்க்க)

> "முஸ்லிம் பிரதேச செயலகத்தின் கீழ் தமிழர்கள் இருக்கும்போது ஏன் தமிழர்களின் நிர்வாகத்தின் கீழ் முஸ்லிம்களால் இருக்க முடியாது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிக்கும் நத்தார்த் தாத்தா!


● சாலமன் ஜனனி




எதிர்வரும் மாதம் 25ஆம் திகதியன்று நத்தாரைக் கொண்டாடுவதற்குக் கிறிஸ்தவர்கள் தயாராகிவருகிறார்கள். கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் கொண்டாட்டங்கள், களியாட்டங்கள், பண்டிகைகள், சமய விழாக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என அனைத்துமே அமைதி கொண்டிருக்கும் தறுவாயில் இந்த நத்தார் வருகிறது. இந்த நிலையில் மத்திய ஐரோப்பிய நாடான ஹங்கேரியில் உள்ள கிராமம் ஒன்றில் தனது சிறிய தொழிலகத்தில் இனிப்பு விற்பனையாளரான லாஸ்லோ ரிமோசி என்பவர் முகமூடிகள் அணிந்த நத்தார்த் தாத்தாவைச் சித்திரிக்கின்ற இனிப்புகளைத் (சொக்லோட்) தயாரித்து விற்பனை செய்வது பிரபலமடைந்திருக்கிறது. ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்டுக்குத் தெற்கே 70 கிலோமீற்றர் தொலைவில் உள்ள லாஜோஸ்மிஸ் என்கிற இடத்தில் உள்ள கிராமத்தில் வசிக்கும் அவரது இந்தத் தயாரிப்புகளுக்குப் பெரு வரவேற்புக் கிடைத்துள்ளது. உலகம் முழுதும் பரவி உயிரிழப்புகளையும், பெரும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தி வருகின்ற பெருந்தொற்றான கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் இனிப்பு விற்கின்ற இந்த மனிதர் நகைச்சுவையுணர்வூட்டும் விதத்தில் நத்தார்த் தாத்தாவுருவில் இனிப்பை வடிவமைத்தமையும் அதற்கு அவர் முகக் கவசம் அணிந்தமையும் பிரபலமடைந்திருக்கிறது.

**கேள்வி அதிகரிப்பு**

நத்தார்க் கொண்டாட்ட நேரத்தில் அனைவரும் முகமூடிகளை அணிய வேண்டும். நத்தார்த் தாத்தாவும் முகமூடி அணியவேண்டும். அவ்வாறு நத்தார்த் தாத்தா முகமூடி அணிந்து மக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்துவதற்காகவே தனக்கு இந்த யோசனை தோன்றியது என்கிறார் இந்த இனிப்புத் தயாரிப்பாளரான லாஸ்லோ ரிமோசி. இவருடைய இந்த விநோத வடிவ இனிப்புகளுக்கு இணையத்தில் கேள்விகள் அதிகரித்திருக்கின்றன. ஒரு நாளைக்கு சுமார் 100வரையான நத்தார்த் தாத்தா இனிப்புகளை மாத்திரமே உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலுள்ள தனது தொழிலகத்தை இதன்காரணமாக அவர் மேம்படுத்தவேண்டியிருக்கிறதாம். அத்தோடு நத்தார்த் தாத்தா இனிப்பின் வடிவமைப்பையும் சற்று எளிமைப்படுத்த வேண்டியிருக்கிறது என்கிறார் அவர். ஒட்டுகின்ற பசைத் தன்மை இல்லாத இத்தாலியச் சொக்லேட்டைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட இந்த நத்தார்த் தாத்தா இனிப்பில் நத்தார்த் தாத்தாவின் தொப்பி சிவப்பு வண்ணத்தில் இருக்கிறது. சிறிய வெள்ளை மர்சிபான் கீற்றுகளிலிருந்து முகக் கவசங்களை உருவாக்கியிருக்கிறார். சில கலர் ரிபன் களை ஐசிங் கில் சேர்த்துள்ளார்.




**முகக் கவசம் அணிந்த இனிப்புகளைத் தாருங்கள்**



சொக்லேட் இனிப்புகளைச் சிறியளவில் தயாரித்து அவற்றைத் தனது வீட்டில் உள்ள சிறிய கடையில் வைத்து விற்று வந்த ரிமோசி இந்த வருடம் மார்ச் மாதம் கொரோனாத் தொற்றுக் காரணமாகக் ஹங்கேரி முடங்கிப்போனபோது பெரும் பாதிப்புக்கு முகம் கொடுத்துள்ளார். வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்குப் பெரும் சிரமப்பட்டுள்ளார். இந்த நிலையில்தான் அவருக்கு இந்த வித்தியாசமான சிந்தனை உதித்திருக்கிறது. முகமூடி அணிந்த நத்தார்த் தாத்தாவை இனிப்பாக்கியுள்ளார். இப்போதெல்லாம் தனது வாடிக்கையாளர்கள் முகமூடி அணிந்த நத்தார்த் தாத்தாவை மட்டுமே தாருங்கள் என்று கேட்கிறார்கள் என்கிறார் அவர். அத்தோடு கொரோனா காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த தனக்கு இந்த இனிப்புகள் உதவினாலும், இது நீடிக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. "அடுத்த ஆண்டு நான் இந்த இனிப்புகளில் ஒரு பகுதியை மட்டுமே விற்பனை செய்வேன். ஏனெனில் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டால் எனது நத்தார்த் தாத்தாவும் முகமூடி அணிய வேண்டியதில்லை" என்கிறார் அவர். ■

# பிரேசிலில் பிள்ளையார்...!



பிரேசிலைச் சேர்ந்த ஆடை தயாரிப்பு நிறுவனம் ஜோன் கோட்ரே பிராண்ட். பிரேசிலின் சாவ் பாலோ மாநிலத்தைத் தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் தனது வலைத்தளப் பக்கத்திலிருந்து சில விளம்பரங்களைத் திடீரென அகற்றியது. அந்த நிறுவனத்துக்கு என்ன நடந்தது? ஏன் இந்தத் திடீர்த் திருப்பம்? என்று கேள்விகள் எழ அது குறித்துத் தேடிப்பார்த்தபோதுதான் விடயம் தெரியவந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இந்த நிறுவனம் தயாரித்த தனது ஆடைகளில் இந்துக்கள் வணங்குகின்ற பிள்ளையாரின் உருவத்தைப் பதித்து விற்பனை செய்துள்ளது. இதை எவ்வாறோ நம்மவர்கள் மேப்பம் பிடித்து அதற்குக் கண்டனங்களையும் எதிர்ப்புகளையும் தெரிவித்ததால் அந்த நிறுவனம் தனது வணிகத்துக்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் சடுதியாக அந்த விளம்பரங்களை நீக்கியுள்ளது. அதோடு விடாமல் சந்தைக்கு அனுப்பிய தனது உற்பத்திகளையும் திரும்பப் பெற்றுள்ளது.

இதற்காக நிறுவனத்தின் சார்பாக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். எங்கள் நோக்கம் ஒருபோதும் மற்றவர்களைப் புண்படுத்துவது அல்ல - என்றும் அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருக்கல்லோ உபதேசம்...!

■கதிரேசன் காத்தவராயன்

"கந்தசட்டி விரதகாறர் பச்சைமட்டைப் பூசை பாத்தவையாமல்லே சன்னதியிலை?" எண்டபடி அதிலை வாசிசாலைக்குள்ள வந்தார் சண்முகத்தார். நான் தனிய இருந்து பேப்பர் பாப்பமெண்டு சந்தடியில்லாமல் உள்ளட்டு இருந்தும் சண்முகத்தாரிட்டை மாட்டியாச்சு. குளறிச் சண்முகமெண்டாத்தான் தெரியுற மனுசன். எனியென்ன! ஆள்கூடப்போகுது எண்டு நினைக்கவும் பரமண்ணையும் தம்பரும் வந்திட்டினம். சுப்பண்ணை அடுத்ததாய் வந்தார். வந்தவர் சுத்திவர எல்லாரையும் ஒருக்காப் பாத்துச் சிரிச்சார்.

"நான் வீட்டாலை வெளிக்கிடைக்குள்ள மேளும் மனிசியும் திரும்பத்திரும்பச் சொல்லி விட்டதுகள்... கூட்டமாயிராதைங்கோ பேந்து பிரச்சனையாகிப் போகும் எண்டு..." தான் சிரிச்சதுக்கு விளக்கம் சொன்னார் சுப்பண்ணை. "இஞ்சார் சுப்பு நீ உன்ரை மனிசி பிள்ளையளை வீட்டுக்கை பொத்தி வைச்சிருந்தால் அப்பிடித்தானே கதைக்குங்கள்? உலகமடிபட்டால்தான் கனக்க விசயம் தெரியவரும்" எண்டு சண்முகத்தார் புத்திகூறுகிற தொனியிலை சொல்ல சுப்பண்ணை நெளிஞ்சார்.

ஆனால் தம்பருக்கு அது பிடிக்கயில்லைப் போலை. "இஞ்சார் சண்முகம்! உலகம் படுகிற பாட்டைத்தான் அதுகள் சொல்லியிருக்கு. நாங்கள் வரேக்குள்ள நீதான் பச்சை மட்டைக்கதை சொல்லிக் கொண்டிருந்தனி. அதுதான் இப்பத்தே உலக நடப்பு... அதுகள் சொன்னதிலை பிழையில்லை" எண்டார். அதுக்கு சண்முகம் "அதுசரி... சமூக இடைவெளி அதுஇதுவெண்டு சனத்துக்குப் புத்தி சொல்லுற பெரியாக்களின்ரை கந்தோருகளை ஒருக்காப் போய்ப்பார்... சனம் திருவிழாவிலை கூடினமாதிரிக் கூடிநிண்ட இடிபடுகுதுகள்... அப்ப அவைக்கு அது பிழையெண்டு தெரியாதே?"

"இஞ்சார் உலகத்திலையுள்ள சுவமான தொழிலுகளிலை முதலாவது என்ன சொல்லுங்கோ பாப்பம்?" எண்டு நான் கேட்டன். ஆளையாள் பாத்தினமே தவிர பதில் வரயில்லை. "இஞ்சார்! அதுதான் புத்திமதி சொல்லுகிற தொழில். முதலும் தேவையில்லை கனக்க உழைப்பும் தேவையில்லை. இருந்த இடத்திலை நாக்குக்கும் நோகாமலுக்கு சொல்லலாம். அதுகும் பதவிக் கதிரையளிலை இருந்தால் நேரத்துக்கேற்றமாதிரி சொல்லலாம். ஐயாவின்ரை வாய்க்குள்ளாலை எதுவந்தாலும் அதை அப்பிடியே அள்ளி விசிற ஊடகக்காறர் தவங்கிடக்கிறாங்கள். அந்த ஐயா சொல்லுற விசயத்தை அவரோ அவற்றை ஆளணி- அம்பு - சேனையோ பின்பற்றுகிறாங்களோ எண்டதைப் பாக்காமல் ஐயா அடுத்தது என்ன சொல்லப் போகிறார் எண்டதிலையே காலத்தைப் போக்காட்டுறாங்கள்" எண்டதோடை நிப்பாட்டினன். இனியும் சொன்னால் பேப்பராலை என்னையும் நிப்பாட்டினாலும் நிப்பாட்டிப்போடுவாங்கள்.

"ஓமடாப்பா கதிரேசு..! நானும் இப்ப நீ சொன்ன விசயத்தைக் கொஞ்ச நாளாய்ப் பாத்துக் கொண்டுதான்வாறன்... தாங்கள் புத்திமதி மட்டுந்தான் சொல்லுவம் நீங்கள்தான் அப்பிடியே நடக்கவேணும்... இல்லையெண்டால் சட்டம் பாயும்... நாங்கள் வழக்கம் மாதிரியே நடப்பம்... எண்டிற மாதிரியல்லே நிலைமையள் போகுது? அண்டைக்கு அதிலை லைசென்சுக்கு சோதினையெடுக்க மேளைக் கூட்டிக்கொண்டு போனன். எனக்குப் பயம் பிடிச்சுப்போட்டுது.. யாழ்ப்பாணம் முழுதிலையும் இருந்தல்லே ஆக்கள்வந்து கூடி இடிபடுகுதுகள்" எண்டார் பரமண்ணை.

> ❝ இஞ்சார்..? தெரியாமலுக்குத்தான் கேக்கிறன்! உவை உந்த அரசியல்வாதியள் பசைவாழி தூக்கவும் கொடிகட்டவும் பாவிக்கிற பெடியளை காணிக்கு அப்பிளை பண்ணச் செய்யலாமல்லோ? ❞


"அது மட்டுமே வாகனம் பதியிறது... லைசென்ஸ் புதுப்பிக்கிறது எண்டுமல்லே சனம் அலைமோதுது. ஒரு ஒழுங்குமுறை ஒண்டுமில்லாமலுக்கு கதிரையளை ஒண்டின்ரை கைப்பிடியிலை மற்றதின்ரை கைப்பிடியைக் கொழுவினமாதிரி நெருக்கமாயல்லே போட்டுச் சனத்தை இருத்திவைச்சிருக்கிறாங்கள்... கோயிலுக்குப் போறது.. செத்தவீடு கலியாண வீடுகளுக்கு போறது எண்டு புத்தி சொல்லுகிற ஐயாவை அம்மாவை அலுவலகங்களுக்குப் போகாமல் வீடுகளிலை இருக்கினமோ என்னவோ? பரமண்ணை கண்ட காட்சியை நானும் முந்தநாள் கண்டு அனுபவிச்சனான்தான்" எண்டு நான் நிப்பாட்டினன்.

"அது மட்டுமில்லைக் கதிரேசு சனம் ஏன் அங்கை கனநேரம் மினைக்கெடவேண்டி வருகுதெண்டதைக் கவனிச்சனியோ? எண்டு என்னைக் கேட்டார் பரமண்ணை. ஓஓ... வடி வாய்க் கவனிச்சனான்.. அங்கை மட்டுமெண்டில்லை கன இடங்களிலை... அவ்வளவு சனத்தின்ரை நிரப்பின படிவங்களையும் ஓராளே எழுத்தெண்ணி வாசிச்சு வாங்கி அடுக்கினால் சனம் காத்திராமல் என்ன செய்யும்? மற்றாக்கள் கூடிக்கதைக்கிறதும் கொம்பியூட்டறை நோண்டுறதும் அடிக்கடி வெளியாலை போய்வாறது மாயல்லே இருக்கினம்..." எண்ட என்ரை அவதானத்தைச் சொன்னன்.

"அண்ணை! உதுகள் பொறுப்பான ஐயாமார் அம்மாமாருக்கு ஏனண்ணை விளங்கிறேல்லை? தனிமைப்படுத்தல் சமூக இடைவெளி அது இதுவெண்டு விளாசிறவைக்கு இந்தச் சின்ன விசயத்தை பாக்க முடியேல்லையோ? இல்லாட்டில் நேரமில்லையோ?" எண்டு வழமைமாதிரியே அப்பாவியாய்க் கேட்டார் தம்பர்.

"ஏனில்லையடா தம்பு? பிரதேசக் கந்தோருகளிலை பங்கிட்டுச் செய்யலாமில்லே? சோதினையையும் அங்கங்கை பிரிச்சு நடத்தலாம்... போமுகளை வாங்கிறதையும் பிரதேசக் கந்தோருகளிலையே வாங்கலாமில்லே? அப்பிடிச் செய்யிறதாலை அங்கை சனத்தைக்குறைக்கலாம். அதோடை முக்கியமானது ஒரு பிரச்சினை வருமெண்டாலும் முழு இடமும் பாதிக்காமல் பாக்கலாம். அப்பிடி கையை மீறி பிரச்சினை வந்தாலும்குறிப்பிட்ட பிரதேசத்துக்கையே தீர்க்கலாமில்லே? எண்டு பரமண்ணை சொல்லிப்போட்டு கதிரேசு நீ இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்" எண்டு என்னை இழுத்தார்.

"சொல்லக்கனக்கக் கிடக்குது பாருங்கோ. கொரோனாவைப் பாக்கிற காக்கி உடுப்புக்காறரும் அங்கை வந்து போனவை, பாத்தவை. அதைவிட ஐயாவுக்கு அடுத்தது தாங்கள்தான் எண்டிறவையும் வந்துபோனவை. இதுகளை விடவும் விளக்கமாய்ச் சொல்லலாம்... ஆனால் சொல்லத்தான் நினைக்கிறேன் சொல்லாமல் தவிக்கிறேன்.. அதிகாரம் பொல்லாதது..." எண்டு பாடினபடியே அங்கையிருந்து வந்திட்டன். ■



## தாத்தாவின் அழகி நான்...!

மலேசியாவின் தலைநகர் கோலம்பூரில் வசித்து வருகின்ற தமிழ் மருத்துவர் ஒருவர் அழகிப் போட்டிகளில் பங்குகொண்டு அசத்தி வருவது ஊடகங்களையும், சமூக வலைத்தள அரட்டையர்களையும் ஈர்த்திருக்கிறது. மருத்துவரான அவர் 2019ஆம் ஆண்டு மிஸ் மலேசியா அழகிப் போட்டியில் முதற்தடவை கலந்துகொண்டுள்ளார். அந்தப்போட்டியில் இறுதிச் சுற்றுவரை முன்னேறிய அவர் அதன் பின்னர் மலேசியாவில் நடக்கின்ற அழகிப் போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டுவருகிறார். அந்த வகையில், கடந்த செப்ரெம்பர் மாதம் மலேசியாவில் நடந்த மிஸ் ஏர்த் மலேசியா அழகிப்போட்டியில் பங்குபற்றினார். அதில் அவர் மகுடமும் சூடினார். இந்த வெற்றியால் அடுத்த ஆண்டு பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் நடக்கவுள்ள உலக அளவிலான மிஸ் ஏர்த் அழகிப் போட்டியில் பங்கேற்பதற்குத் தகுதி பெற்றுள்ளார் அவர். இத்தனைக்கும் முழுநேர மருத்துவராகத் தொழிலாற்றி வருகின்ற அவர் அதற்கு நேர்மாறான அழகிப் போட்டித் துறையில் கால்பதித்ததற்குத் தனது தாத்தா தான் காரணம் என்ன என்று மனம் திறந்துள்ளார். தனது தாத்தாவுடன் அமர்ந்திருந்து தொலைக்காட்சி பார்க்கும் காலத்தில் அதில் வருகின்ற கலை நிகழ்வுகள், அழகிப்போட்டிகளில் பங்குபற்றும் பெண்களைப் பார்த்து அவர்களைப் போல வரவேண்டும் என்று சொல்வாராம் அவரது தாத்தா. அத்துடன் உறவினர்களுக்குத் தனது பேத்தி பெரிய அழகி என்றும் சொல்லிக்கொள்வாராம். அவரது அந்த எண்ணமும் சிந்தனையுமே மருத்துவரான தன்னை இவ்வாறு அழகியாக ஆக்கியிருக்கிறது என்கிறார் மருத்துவரும் அழகியுமான நிஷா தயானந்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் அறிஞன்

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை...?

8

வழிகாட்டுநர் அல்லது வழிப்படுத்துநர் மீதான ஒரு மதிப்பீட்டினை அவரது சமூகத்தொடர்பு, சமூகம் பற்றிய பட்டறிவு தொடர்பாக மேற்கொள்வது அவசியமானது எனினும் அவ்வாறான ஏதும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. கடந்த வாரம் தனியன் அல்லது குழு என்கின்ற ஒன்று இருப்பதற்கான அல்லது சுய தீர்மானங்களுடன் இயங்குவதற்கான சாத்தியப்பாடின்மை அல்லது அழுத்தம் தொடர்பாகப் பார்த்திருந்தோம். எனவேதான் சமூகம் அதனது எண்ணப்பாங்கு செயல்முனைப்பு இயங்குநிலை என நீளமாகப் பட்டியலிடத்தக்க விடயங்களுடன் பரிச்சயமான ஒருவனாக வழிப்படுத்துநர் அல்லது ஆலோசகர் இருக்கவேண்டியுள்ளது என்பது யதார்த்தமானது. இது நடைமுறையில் எவ்வாறிருக்கிறது என்பது அவதானத்திற்கும் கவனிப்புக்கும் உரியதாகிறது.

கடந்த பகுதிகளில் பார்த்தவாறு இன்றுள்ள அனேகமான வழிப்படுத்துநர்கள் அல்லது ஆலோசகர்கள் பாடசாலைகள் மற்றும் (அரச - தனியார் - அரசுசார்பற்ற) நிறுவனங்களில் எவ்வாறு நியமனம் பெறுகின்றனர்? நியமனத்தின் பின்னராகத் தமது பணிக்காக மேற்கொள்ளும் தயார்படுத்துதல்கள் மற்றும் இற்றைப்படுத்துதல்கள் எவ்வாறானவை? அவர்களது வினைத்திறன் மற்றும் இயங்குநிலை (உடல் - உள) போன்ற குறித்த துறைக்கு இன்றியமையாத விடயங்கள் தொடர்பான தொடர் அவதானிப்பு மற்றும் மதிப்பீடுகள் உள்ளனவா? அவ்வாறானவற்றினது நம்பகம் எத்தகையது? என நீளும் வினாக்களிற்காக குறித்த துறைசார்ந்த நேர்மையான பதில்கள் அவசியமாகின்றன.

முன்கூறப்பட்ட நிறுவனங்களுக்கான நியமனங்கள் அனேகமாக (அல்லது முற்றிலுமாக) சான்றிதழ்களின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. அவர்கள் தமது பட்ட அல்லது பின்பட்ட நெறிகளில் ஒரு பாடமாக உளவியல் அல்லது சமூகவியலைக் கொண்டிருந்தால் போதுமானது என்பது நியாயமாக உள்ளது. அவர்களது பாடநெறிகளிலுள்ள கோட்பாடுகளை ஒப்புவித்துப் பெறுகின்ற சான்றிதழ்கள் அவர்களுக்கு ஒரு தொழிலை வழங்கியுள்ளது என்பதற்கப்பால் ஒரு பட்டறிவாலான அறிகையுடனான அறிவை வழங்கியிருக்கிறதா என்ற வினாவிற்கு விடை தேடுவது அவசியமானது. அனுபவத்திற்கூடான அறிவை வழங்கும் நிலையில் கல்விக்கூடங்கள் இங்கு அனேகமாக இல்லை.

பட்ட நிறைவுக்காகச் செய்ய வேண்டிய ஆய்வு விடயப்பரப்புகள் அவற்றிற்கான மதிப்பீடுகள் புள்ளியிடல்கள் என விவரிக்கப் புறப்பட்டால் அது தனியாக ஒரு நீண்ட விவரிப்பாக மாறிவிடும் என்பதால் அந்த ஆய்வுக்கட்டுரைகள் புள்ளிகளை இலக்கு வைத்த சமரச அறிக்கைகள் என்கின்ற அளவோடு பிரதியெடுத்தல் காலாசாரத்தைப் பின்பற்றியதாக மட்டுப்படுத்தப்பட்டவையேயன்றி புதிய சிந்தனை மற்றும் ஆய்வு விரிவுக்கான வழிகளாக இல்லை என்பது அவதானிக்கக்கூடியது. இத்தகைய தகைமைகளுடனான சான்றிதழ்களால் வழிப்படுத்தப்பட்ட ஒரு தொகுதி சான்றிதழ் நோக்கியதாகவே அனைத்தையும் பார்க்கிறது. அதனை நோக்கியதாகவே வழிநடாத்துகிறது.

சமூகத்தினது பொதுவான பலமான எதிர்பார்ப்பு என்பது பணமீட்டலை அடிநாதமாகக் கொண்டதாகவே உள்ளது. அதுவும் உயர்வானதென காலாகாலமாகக் கற்பிதம் செய்துள்ள துறைகளுக்கூடாகவே என்பது மேலதிகமானது. எனவே எப்படியாவது குறித்த துறைகளுக்குள் நுழைந்துவிடுதல் பின்னர் குறித்த துறையினூடாகப் பணமீட்டுதல் என்பதுதான் குறி. குறித்த துறைக்கான தார்மீகப்பொறுப்புகள், பண்புகள், இயல்புகள் அதற்கூடாக ஆற்றக்கூடிய சேவைகள் போன்ற எதனையும் உணர்ந்துகொள்ளவதோ மதித்து நடப்பதோ கிடையாது என்பதே இன்றைய பிரதான சமூகம்சார் அவலமாக மாறியுள்ளது.

இவ்வாறான ஒரு தொகுதிக்குள்ளேதான் அலோசகர்கள் வழிகாட்டுநர்களும் அடங்குகின்றனர். சமூகத்துள்ளிருந்து பிரித்து மூடிய ஓர் இயந்திரத்தனமான வகுப்புச் சூழலினுள் அடைக்கப்பட்டு பின்னர் மீண்டும் சமூகத்துள் கக்கி விடப்படுகின்றனர். அவர்கள் இளவயதில் அறிந்திருந்த சமூகமாக அது இப்போது இல்லை என்பதைக் கூட உணர முடியாதவர்களாக உள்ளமை ஒருபுறமிருக்க நவீன உலக ஒழுங்கு என்பது தொடர்பான தவறான புரிதல்களுடன் ஒரே இரவுக்குள் சமூகத்தை முழுதுமாக மாற்றலாம் என்பது போன்ற கற்பனைகளுடன் உள்ளனர்.

தவறான புரிதல்கள் என்பது யதார்த்தத்தை மீறிய மேலைத் தேசங்களால் திணிக்கப்படுகின்ற (எம்மவர்களால் பெரிதும் கொண்டாடப்படுகின்ற) அவர்களுக்கேயான புவியியல் - கலாசார - அரசியல் பின்னணியுடனான விடயங்களை பகுத்தாராய்ந்து எமக்கான புவியியல் - கலாசாரம் - அரசியலைப் புரிந்துகொண்டு கற்பதற்குப் பதிலாக மனனம் செய்து சிறப்பாக ஒப்புவித்த அனுபவம் சமூகத்தினது எண்ணப்பாட்டு மாற்றத்தைச் செய்யப்போதுமானதா?

இவ்வாறான நிலைக்கு நல்லதொரு (தவறான) எடுத்துக்காட்டாக தரம் -5 புலமைப்பரிசில் தேர்வை எடுத்துக்கொள்ள முடியும். வறுமைக்கோட்டின்கீழுள்ள பிள்ளைகளைத் தெரிவு செய்து உதவிப்பணம் வழங்கி கல்வியைத்தொடர வாய்ப்பளித்தலுக்கான ஒரு செயற்பாடு மட்டுமே என்பதை நாம் எவ்வாறு விளங்கி வைத்துள்ளோம்? இங்கு நாம் என்று குறிப்பிடப்படுவது சமூகத்தையே.

ஒரு விடயத்தை அதன் நோக்கத்தை சரிவரப் புரிந்து கொள்ள முடியாத சமூகம் செய்துகொண்ட தவறான கற்பிதமாக தரம் - 5 தேர்வு முடிவுகள் இடம்பிடித்துள்ளன. தற்போதைய சித்தியடைதல் என்பதற்கான முக்கியத்துவம் குறைக்கப்பட்டு புள்ளிகளின் மீது முழுக்கவனமும் குவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்வினது அழுத்தங்கள் எதிர்மறை விளைவுகள் குறித்த கண்டனங்களை வெளியிடுகின்ற அறிஞர்(?)களும் தமது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் விடயத்தில் எதைச்செய்கிறார்கள்? ஊடகங்கள் கண்டனங்களை வெளியிடுகின்ற அதேவேளை பெறுபேறுகளையும் வாழ்த்துக்களையும் வெளியிடுவதில் அதீத கவனத்துடன் உள்ளன. அதனைவிட உயர்புள்ளிபெற்ற மாணவர்களைப் பேட்டிகாண்பது... அதிலொரு கேள்வி. உங்களது எதிர்கால இலட்சியம் என்ன? இந்தகைய கேள்வியொன்றும் அதற்கான பதிலும் எமது சமூகத்தையும் அதனது மனோநிலையையும் மதிப்பிடப் போதுமானது.

இத்தகைய சூழலினாலாக்கப்பட்டிருக்கின்ற எமது சமூகத்தை அதன் எண்ணப்பாடுகளை கையாண்டு வழிகாட்டுதல் என்பதன் கருத்தினை வலுப்படுத்துவதற்கான ஆற்றல் என்பது அறிவினால் உண்டாக்கப்படக்கூடியதா? சுயசிந்தனையாற்றலுடன் கூடிய பட்டறிவினால் உண்டாகக் கூடியதா? தற்போதைய நியமன முறையில் உள்வாங்கப்படும் ஒருவரினால் எந்தளவிற்குச் சாத்தியப்படும்?

(தொடரும்....)

# உழுதுண்டு வாழ்வோம்!

சாம் - ரமேஸ்குமார்

ஒரு தேசமானது சகலவற்றிலும் தன்நிறைவு காணவேண்டும் என்றால் அத்தேசத்தினுடைய இதயத் துடிப்பாக விவசாயம் விளங்கவேண்டும். அதன் முதுகெலும்பாக நெற்கதிர்கள் தலை நிமிர்ந்து புன்னகைக்கவேண்டும். இல்லை என்றால் அத்தேசமானது பட்டினிச்சாவு எனும் இருண்ட யுகத்துக்குள் தன்னை அறியாமலேயே தன் மக்களைச் ஆழிப்பேரலை(சுனாமி)போல் இழுத்துச் சென்றுவிடும்.

செங்கோல் தாங்கிய ஒரு தேசத்தினுடைய ஆட்சியாளரின் கடமை படைத்துறையையும் துப்பாக்கிகளையும் பெருக்குவதல்ல. அத்தேச மக்களுடைய இரப்பையைப் பட்டினி எனும் நிர்வாணம் சூழ்ந்து கொள்ளாமல் 'விவசாயப் புரட்சி' செய்து தேசத்தில் தன்நிறைவு காண்பதாகவே இருக்கவேண்டும்.

சட்ட திட்டங்களாலும், நீதிமன்றங்களாலும், ஆயுத முனைகளாலும் ஒரு தேசத்தினுடைய குற்றங்களைப் பெரும்பாலும் குறைக்கலாம். ஆனால் குற்றமே இல்லாத அத்தேசத்தினுடைய மக்களின் வயிற்றுப் பசியை ஒருபோதும் அவற்றால் தீர்க்கவே முடியாது என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஒரு குழந்தையின் முழு வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படி அவசியமாகின்றதோ, அதேபோல் பயிர் எனும் குழந்தை வளரவும், விவசாயம் செழிக்கவும் மழை அவசியமாகின்றது. மழை பெய்யவேண்டும் என்றால் காடு பாதுகாக்கப்படவேண்டும். காட்டைப் பாதுகாப்பது ஆட்சியாளர்களின் கைகளில் மட்டும் தங்கியிருப்பதல்ல. அது மக்களின் கைகளிலேதான் பெரிதும் தங்கியுள்ளது. அது அவர்களின் உரிமையும், கடமையும்கூட.

அதனால்தான் திருக்குறளில் திருவள்ளுவர் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்று அறத்தின் குறளாகக் குறிப்பிடுகின்றார். உழவுத் தொழிலான விவசாயத்தைச் செய்து அதனால் கிடைப்பதைக் கொண்டு வாழ்பவரே இவ்வுலகில் உரிமையோடு வாழ்கின்றனர். பிறரெல்லாம் உரிமையிழந்து அவர் பின் செல்கின்றனர் என்ற கருத்தானது விவசாயத்தின் மகத்துவத்தையும் அதன் உரிமையையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

விவசாயி சேற்றுக்குள் தன் காலை வைத்தால்தான் நாமெல்லாம் சோற்றுக்குள் கையை வைக்க முடியும் என்ற நிலை மாறி, நம் இளம் தலைமுறையினர் எல்லோரும் சேற்றுக்குள் காலை வைக்க முன்வரவேண்டும். அப்போதுதான் அந்நிய நாடுகளில் உணவு இறக்குமதிக்காக நாம் கையேந்த வேண்டிய நிலை ஒருபோதும் ஏற்படாது.

விவசாயமும் இறை வழிபாடும் வேறு வேறு அல்ல இரண்டும் ஒன்றேயாகும். மண்ணை பண்படுத்த தெரிந்தவனுக்கே தன் மனதையும், புத்தியையும் பண்படுத்தும் பரிபக்குவம் வந்து வாய்க்கின்றது. அதனால் அவன் இறை ஞானத்தையும், மோட்சத்தையும் நோக்கி வீர நடைபோடுகின்றான். விவசாயம் ஒரு புனித தவமாகவும் விவசாய நிலம் ஒரு குருவாகவும் அவனுக்கு அமைந்து விடுகின்றது.

எதிர்காலத்தில் ஒரு வல்லரசின் கனவைக்கூட ஒரு தேசம் இழக்கலாம். ஆனால் கனவில்கூட விவசாயத்தை ஒரு தேசம் இழந்துவிடக் கூடாது என்பதே ஒவ்வொரு மனிதனின் ஆத்மார்த்த விருப்பமாகவும் இனி வரும் காலங்களில் இருக்க வேண்டும். அதுவே உலகில் மனித இனத்தை தலை நிமிர்ந்து வாழ வழி அமைக்கும்.

சிவபூமியாகிய இலங்கையில் தமிழர்கள் தங்களுக்குள் தாங்களே ஒற்றுமையில்லாமல் தங்கள் தலைகளை வெட்டிக் கொண்டு தலைப்புச் செய்தியாய் வருவதை விட, எதிர்காலத்தில் 'விவசாயப் புரட்சி' செய்து 'நெல்' மணிகளை அறுவடையாக்கி பக்கச் செய்தியாய் வருவதே மேலான செயலாகும். அதுவே ஒற்றுமையையும், பொதுநலத்தையும் எமக்குள் வளர்க்கும். விவசாயம் எமக்கு பக்க பலமாய் என்றும் இருக்கும்.

(கடந்த வாரப் பத்திரிகையில் 9ஆம் பக்கத்தில் வெளியான "மெஞ்ஞானத்தால் வெல்வோம்" என்கிற ஆக்கமும் இதே பத்தியாளரால் எழுதப்பட்டதே. அதில் அவரது பெயர் இடம்பெறத் தவறிவிட்டது. அதற்காக வருந்துகின்றோம் (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமணன், வந்தாறுமூலை.





# தாயத்துகள், கூடுகள் என்பவற்றுக்குச் சக்தி உண்டா...?

கதை 13

மந்திரவாதிகள், பூசாரிகள் போன்றவர்களால் மந்திரித்துச் செய்யப்படுகின்ற தகடுகள், மந்திர எண்ணை, மூலிகைகள் என்பவற்றை அடைத்து வைக்கும் நீள் உருண்டை வடிவிலான குப்பியே தாயத்து எனப்படுகின்றது. பேய் பிடித்த ஒருவருக்கு அந்தப் பேயைக் கலைத்துவிட்டு மறுபடியும் அவரைப் பேய் அணுகாமல் காவல் செய்வது, செய் தொழிலில் விருத்தி ஏற்படச் செய்வது, தான் விரும்பும் பெண்ணை வசியப்படுத்தி அடைவது எனப் பல்வேறு நோக்கங்களுக்காக இந்தத் தாயத்துகள் அணியப்படுகின்றன.

சிலர் இதைக் கழுத்தில் தொங்கவிடுவர். சிலர் முழங்கைக்கு மேலுள்ள பகுதியில் கட்டுவர், சிலர் இதை இடுப்பில் கட்டியிருப்பர். இந்தத் தாயத்தை வழங்குகின்ற மந்திரவாதி குறிப்பிடுவதற்கு இணங்கக் கட்டி அதைப் பராமரிக்காது விட்டால் அது கட்டப்பட்ட நோக்கத்துக்கு எதிரான வினைகளைச் செய்யும் என்று வழங்கியவர்கள் மிரட்டுகின்றனர். இதைவிடத் தாயத்து அல்லது மந்திரத் தகட்டில் மந்திரித்து எடுத்து அதைக் காலின் தொடைப்பகுதிச் சதையைப் பிளந்து அதற்குள் மந்திரித்தவற்றை வைத்துத் தைத்து விடுகின்ற வழமையும் உள்ளது. பல அரசியல்வாதிகள், தலைவர்கள்கூட இவ்வாறு நிரந்தரமான மந்திரங்களைச் செய்திருப்பதாகக் கூறப்படுவதுண்டு.

முன்னாள் அதிபர் பிரேமதாசவின் காலத்தில் பொலன்னறுவை - திம்புலாகல பௌத்த பிக்கு ஒருவர் சிங்களக் குடியேற்றங்களை நிறுவிப் போர்க் காலத்தில்கூட அந்த மக்களை அந்த இடத்தைவிட்டுப்போய் விடாதவாறு பார்த்துக் கொண்டவர். இதனால் புலிகளின் தாக்குதலுக்கு அவர் பல தடவைகள் முகம் கொடுத்துள்ளார். அவரைப் புலிகளால் கொல்ல முடியவில்லை. ஒருதடவை அவர் பயணித்த வாகனத்துக்குப் புலிகள் கண்டபடி சுட்டபோதிலும்




பிக்குவுக்கு ஒரு துப்பாக்கிக் குண்டுகூடப் படவில்லை எனவும் இறுதியில் அவரைப் புலிகள் வெட்டிக் கொன்றனர் எனவும் செய்திகள் வெளிவந்தன. அதற்குக் காரணம் அவர் தனது தொடையில் பொருத்தியிருந்த மந்திரத் தகடு என்று நம்பப்பட்டது.

அதேவேளை மட்டக்களப்பு - வெல்லா வெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட புலிகளின் தளபதிகளில் ஒருவரான ராமின் தந்தையார் ஒரு மிகச் சிறந்த மந்திரவாதி என்றும் அவரால் மந்திரிக்கப்பட்ட .தகடு ஒன்று ராமின் தொடையில் வைக்கப்பட்டிருந்ததால் அவருக்குத் துப்பாக் கிச்சூடு காரணமாக உயிராபத்து ஏற்படவில்லை எனவும் கூறப்பட்டது.

இந்தத் தாயத்துகள் அல்லது மந்திரத் தகடுகளுடன் பிரேதத்துக்கு அருகில் செல்லக்கூடாது என்று மந்திரவாதிகள் அறிவுறுத்தல்களை வழங்குகின்றனர். இதன் மெய் - பொய் தெரியவில்லை. என்றாலும் இந்தத் தாயத்துகள் சம்பந்தமான செயற்பாடுகள் இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என எல்லோரிடமும் காணப்படுகிறது.

பல விற்பனை நிலையங்கள், வீடுகளின் முக்கிய பகுதிகளில் இந்தத் தாயத்துகளும் தகடுகளும் மந்திரித்த எண்ணெய்க் குப்பிகளும் தொங்கவிடப்பட்டிருப்பதைச் சாதாரணமாகக் காணமுடியும். இது ஏழை - பணக்காரர், படித்தவர்கள் - படிக்காதவர்கள் என்பவற்றுக்கு அப்பால் இன்னொருவரைக் கட்டுப்படுத்தவும் வேறொருவரால் ஏற்படவுள்ள பாதிப்புகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் பல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பொதுவாகவே பயந்த மனநிலையை உடையவர்களால், தமக்கு ஏற்படுகின்ற கஸ்ர துன்பங்களுக்கான சமூகக் காரணிகளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியாதிருக்கும் வரை இவ்வகைத் தாயத்துகளையும் மந்திரங்களையும் மேற்கொள்பவர்கள் உழைத்துக்கொண்டேயிருக்கிறார்கள்.

# ஒஸ்காருக்குக் காத்திருக்கும் ஜல்லிக்கட்டு...!




ஜல்லிக்கட்டு என்கிற மலையாளத் திரைப்படம் சிறந்த வெளிநாட்டுத் திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாம்.

லிஜோ ஜோஸ் பெல்லிசேரி என்பவரின் இயக்கத்தில் கடந்த ஆண்டு புரட்டாதி மாதம் 4ஆம் திகதி வெளியாகிய இந்தப் படத்தில், கேரளாவின் இடுக்கி என்கிற பகுதிக்கு அருகில் ஒரு மலைக் கிராமத்து இறைச்சிக் கடைக்கு இறைச்சி யடிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட எருமை மாடு ஒன்று வெட்டப்படப்போகும் நேரத்தில் அங்கிருந்து தப்பி விடுகிறது. இதன்பின் அது செய்யும் அட்டகாசமும், அதைப்பிடித்தே தீர வேண்டும் என்று அந்தக் கிராமமே அதன் பின் அலைவதும்தான் கதை. மலையாளப் படமானாலும் ஜல்லிக்கட்டு என்ற தலைப்பால் இந்தப் படம் மீதான எதிர்பார்ப்பு தமிழ்நாட்டிலும் அதிகமாக இருந்தது. இந்த நிலையில் தான் ஒஸ்காருக்குப் பரிந்துரைக் கப்பட்டுள்ளது இந்தப்படம்.




# இரவுப்பாடல்

1
மழைக் கேங்கும் பூமியாய் இருக்கிறேன்...
நினைவுகளால் என்னை நனை..............
சில நட்சத்திரங்கள் போதும்
இந்த இரவின் வருகையை அறிவிக்க .....
மூங்கில் துளைகளில் இறங்கும் காற்றிடம்
சொல்லியிருக்கிறேன் என் காதலை..
இந்த இரவின் இன்னிசை முடிவதற்குள் வந்துவிடு....

2
எழில் இரவே
குளிர் மழையே
நிழல் மரமே
நெடும் கடலே
வளர் நிலவே
இவள் கண்ணுறும் காதலைப்படி
சந்தம் சிக்காத தமிழ் கொண்டு
இதன் ரகசியத்தைப் பாடு
வானில் எழுகிற நிலவு விழுவதற்குள்
வாழ்ந்து விட வேண்டும் இவள்

3
இந்த இரவு மட்டும் விடிந்துவிடட்டும்
ஊரடங்கு நீக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள்
நீ வரும்போது உன் வீட்டு முற்றத்தில்
பூத்திருக்கும் மல்லிகை மலர்களை அள்ளிவா
நகர மறுத்த இந்த கறுத்த நாட்களை
உன் நினைவாலே நிரப்பினேன்
உன்னைப்பற்றி நான் எழுதிய கவிதைகளை
உனக்குக் காட்ட வேண்டும்
அதற்கு முன் ஒன்று சொல்லவேண்டும்
பல நாளாய் நீ கேட்ட முத்தத்தை தர
இப்போது தயாராய் இருக்கிறேன் .....

- அஞ்சு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மன மாற்றத்தின் முதல் சமிக்ஞை...?

**"தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து எதிர்ப்பேன் என அவர் கூறியதிலிருந்து பைடனுக்குச் சார்பான தேர்தல் முடிவுகளை எதிர்க்கும் சட்ட நடவடிக்கைகளில் அவரது அணியினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்."**

● பொன்வண்டு

கார்த்திகை மாதம் 3ஆம் திகதி அங்கு அதிபர் தேர்தல் நடந்தது. அதன் முடிவுகளில் இன்னமும் நிலையற்ற தன்மை இருக்கவே செய்கிறது. உலகின் வல்லரசும் மிகப் பெரும் மக்களாட்சித் தேசமும் ஆகிய அமெரிக்காவின் நிலைதான் இது. இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளின்படி மக்களாட்சிக் கட்சி வேட்பாளரும், அமெரிக்காவின் முன்னாள் துணை அதிபருமான ஜோ பிடென் முன்னிலையிலுள்ளார்.

தபால் மூலமான வாக்குப் பதிவுகளில் அவருக்கு அதிக வாக்குகள் கிடைத்திருந்தன. அத்தோடு அரிசோனா உட்படப் பல மாநிலங்களில் அவருடைய கட்சி புதிய வாக்காளர்களை அதிகம் பெற்றிருந்தது. இதைவிட அண்மையில் மிக் ஷிகன் மாகாணத்தில், ஜோ பிடென் வெற்றி பெற்றார் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப் பட்டது.

இவை சக போட்டியாளரும் தற்போதைய அதிபருமாகிய ட்ரம்புக்குப் பேரிடி மாத்திரமல்ல 24ஆம் திகதிவரை அங்கு 98சதவீத வாக்குகள் எண்ணிமுடிக்கப்பட்டிருந்த நிலையில், அதிபராவதற்குத் தேவையான 270 ஆசனங்களை விடவும் பிடென் அதிக ஆசனங்களை (306) பெற்றிருந்தார். இந்த நிலையில் வாக்களிப்பில் மோசடி நடந்துள்ளது என்று தெரிவித்து சட்ட நடவடிக்கைகளில் ட்ரம்ப் இறங்கப்போவதாக தெரிவித்தார். உத்தியோகபூர்வ முடிவுகளுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைக்கு வந்தது அமெரிக்கத் தேர்தல் களம்.

தேர்தலில் மோசடி நடந்துள்ளது என்று கூறியதோடு பிடெனின் வெற்றிக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவுள்ளேன் என்றும் ட்ரம்ப் தெரிவித்ததால், இந்த விவகாரம் நீதிமன்றம் - விசாரணை - தேர்தல் திணைக்களம் என்று இழுபறிப் பட்டு முடிவுக்கு வருவதற்கு இன்னும் சில காலம் எடுக்கும் என்று எதிர்வு கூறப்பட்டது. இதனால் தேர்தல் முடிந்து, காலம் மாதத்தை அண்மித்துக்கொண்டிருந்தாலும் அதிபர் யார் என்பதை முறைப்படி அறிவிக்க முடியவில்லை.

வெள்ளை மாளிகையை விட்டு ட்ரம்ப் வெளியேறி... அதிபர் மாற்றம் ஒன்று முறைப்படி நிகழ்வதாக இருந்தால்கூட அதற்கு எதிர்வரும் தை மாத நடுப்பகுதி வரையில் காலம் இருக்கிறது. என்றாலும்கூட




ட்ரம்பின் பிடிவாதத்தால் அந்தக் காலம் நீடிக்கலாம் என்றும் வெள்ளை மாளிகையிலிருந்து அவரை வலுக்கட்டாயமாகவே வெளியேற்றவேண்டியிருக்கும் என்றும் அரசியல் புலங்கள் கருத்து வெளியிட்டிருக்க... என்ன நடக்குமோ என்று பதற்றத்துடன் காத்திருக்கின்றது உலகம்.

### மனம் இழகினாரா ட்ரம்ப்...?

தேர்தல் முடிவுகளை ஏற்காமலும், அந்த முடிவுகள் மீது மீள் பரிசோதனைகளைக் கோரியும், நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் தெரிவித்து வந்த அதிபர் ட்ரம்ப், அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள சக போட்டியாளர் பிடெனுக்கு முறைப்படி ஆட்சி அதிகார மாற்றத்தை வழங்குவதற்குரிய வழிவகைகளைச் செய்வதற்கு இப்போது சம்மதம் தெரிவித்திருக்கிறார் என்று செய்திகள் வருகின்றன.

தனது கீச்சகப் பக்கத்தில் கடந்த 24ஆம் திகதியன்று அவர் இட்ட பதிவில் இந்த விடயம் தெரியவந்தது. பிடென் பதவி ஏற்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜெனெரல் சேர்வீசஸ் அட்மினிஸ்ட்ரேஷன் என்கிற அமைப்பினரிடம் தான் வலியுறுத்தியுள்ளார் என்ற தகவலைத் ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இந்தத் தகவலை அந்த அமைப்பின் தலைவர் எமிலி மெர்பியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

### அதிபர்களை முறைப்படி மாற்றும் அமைப்பு

அமெரிக்க அதிபர் தேர்தலின் பின்னர் நிகழ்கின்ற அதிபர் மாற்றங்களுக்கான உத்தியோக பூர்வப் பணிகளை முன்னின்று செய்வது ஜெனெரல் சேர்வீசஸ் அட்மினிஸ்ட்ரேஷன் என்கிற அந்த நாட்டின் அரச அமைப்புத்தான். தற்போதைய அதிபர் ட்ரம்பால் நியமிக்கப்பட்டிருந்த இந்த அமைப்பின் உறுப்பினர்கள், நடந்த தேர்தலில் ஜோ பிடன் வெற்றி பெற்றதாகத் தெரிகிறது என்று ஊடகங்கள் மத்தியிலும் பொதுவெளியிலும் சொல்லி இருந்தாலும் பிடெனை அவர்கள் வெற்றியாளராக உறுதிப்படுத்தவில்லை.

உத்தியோகபூர்வமாகப் பிடெனை வெற்றியாளராகக் குறிப்பிடவும் இல்லை. இந்த நிலையில் தற்போது அந்த அமைப்பிடம் அதிபருக்கான அதிகார மாற்றங்களை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார் ட்ரம்ப். அதற்குரிய நடவடிக்கைகளை அது தொடங்கும் என்றும் ட்ரம்ப் கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

இதையடுத்து இந்த ஆட்சி மாற்ற அமைப்பு ட்ரம்ப்பிடமிருந்து அதிகார அமைப்புகளைப் பிடெனுக்கு மாற்றம் செய்யும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. தேசிய பாதுகாப்பு உட்பட முக்கிய துறைகளின் நிர்வாகப் பொறுப்புகளைப் பிடெனிடம் ஒப்படைக்கும் நடைமுறைகளை அது தொடங்கியுள்ளது.

### ஆனாலும் வேதாளம்...!


ட்ரம்ப்பின் இந்த மாற்றத்தையும், அறிவிப்பையும் வரவேற்பதாகப் பிடென் அணியினர் தெரிவித்திருக்கின்றனர். தேர்தல் முடிவுகளுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தும் முரண்டுபிடித்தும் வந்த ட்ரம்ப் தான் தேர்தலில் தோல்வி அடைந்து விட்டார் என்பதை இதுவரை முறைப்படி ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வாறிருக்கவே அதிபர் மாற்றத்துக்குரிய நடவடிக்கைகளுக்கு அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

இந்தத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து எதிர்ப்பேன் என அவர் கூறியதிலிருந்து பிடெனுக்குச் சார்பான தேர்தல் முடிவுகளை எதிர்க்கும் சட்ட நடவடிக்கைகளில் அவரது அணியினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இருவேறு நிலைப்பாடுகளில் ட்ரம்ப் தரப்பு இருக்கின்றது என்று அரசியலவதானிகள் கணிக்கிறார்கள்.

வேதாளம்போல ட்ரம்ப் மீண்டும் மீண்டும் முருங்கை ஏறுவார் என்ற எதிர்பார்ப்பும் அவர்களில் சிலருக்கு இருக்கிறது. ஆனாலும் ட்ரம்பின் இந்தப் புதிய அறிவிப்பை அவரது தோல்வி ஏற்பின் முதல் படியாகவே பலரும் கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவசம் பல பெயர்கள்...?



வங்காளவிரிகுடாவில் தோன்றிய தாழமுக்கப் புயலுக்கு நிவர் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் புயலுக்கு நிவர் என்று பெயரிட்ட நாடு எது தெரியுமா? பூமியின் வெப்பமண்டலப் பகுதியில் உருவெடுக்கின்ற சூறாவளிகள் குறித்து அறிவிப்பது, அவற்றுக்குப் பெயர் சூட்டுவது ஆகியவை சில வானிலை நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வானிலை ஆராய்ச்சி நிறுவனத்தில் பங்களாதேஷ், இந்தியா, ஈரான், மாலைதீவுகள், மியன்மர், ஓமன், பாகிஸ்தான், கட்டார், சவூதி அரேபியா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், யேமன் ஆகிய 13 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. வங்காள விரிகுடா, அரபிக் கடல் ஆகிய இந்து சமுத்திரத்தின் வடக்குப் பகுதியில் உருவாகும் வெப்பமண்டலப் புயல்களுக்கு இந்த நாடுகளே பெயர் சூட்டுகின்றன. இவ்வாறு சூட்டும் பெயரில் எவ்வித அரசியல், அரசியல் பிரபலங்களின் பெயர்கள், கலாசாரம், மத நம்பிக்கை, இனம் போன்றவை பிரதிபலிக்கக் கூடாது, உலக அளவில் வாழும் மக்களில் எவ்விதத்தவரின் உணர்வை காயப்படுத்தும்படி பெயர் இருக்கக் கூடாது: மிகவும் கொடூரமானதாக பெயர் இருக்கக் கூடாது, சிறியதாகவும், உச்சரிக்க எளிதாகவும் யாரையும் காயப்படுத்தாத வகையில் பெயர் இருக்க வேண்டும். பெயரின் அளவு அதிகபட்சமாக 8 எழுத்துகளில் இருக்க வேண்டும். பரிந்துரைக்கப்படும் பெயரை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட நாடுகள் குறிப்பிட்டிருக்க வேண்டும்., ஒருமுறை பயன்படுத்தப்பட்ட பெயர்கள், மீண்டும் வைக்கப்படக்கூடாது ஆகிய சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே இந்த நாடுகள் பெயர் சூட்டுகின்றன. இந்த வகையில்தான் தற்போதைய புயலுக்கு நிவர் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் பெயரை வைத்த நாடு ஈரான். ஈரான் மொழியில் நிவர் என்றால் வெளிச்சம், வருமுன் காப்பது என்றும் அர்த்தம். நிவர் புயலைத் தொடர்ந்து, அரபிக் கடல், வங்காள விரிகுடாவில் ஏற்படும் புயலுக்கு மாலைதீவின் பரிந்துரைப்படி புரேவி என்ற பெயர் வைக்கப்படும். இதுபோல, அடுத்த 25 வருடங்களில் ஏற்படும் புயல்களுக்கான பெயர்களும் இறுதி செய்யப்பட்டுள்ளது எப்போது புயல் வந்தாலும் அவற்றுக்குப் பெயரைச் சூட்டுவதற்கான தயார் நிலையில் இந்த நாடுகள் கையில் பெயர்களுடன் இருக்கின்றனவாம்...!

# "டிஃப்ரெட்"



கடந்த வாரம்தான் கவனம்பெற்றது எதியோப்பியா. அந்த நாட்டின் மத்திய அரசின் படைகளுக்கும் எதியோப்பியாவின் மாநிலங்களில் ஒன்றான டீக்ரே மாநில ஆளும் கட்சியின் படைகளுக்கும் இடையே வெடித்திருக்கின்ற மோதலால் உலக நாடுகளின் பார்வை எதியோப்பியாவின் பக்கம் திரும்பியுள்ளது. அதேநேரம் எதியோப்பியாவிலிருந்து 2014ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் ஒன்று இந்தத் தருணத்தில் கவனம்பெற்றது. ஷெரிசெனேய் பெர்ஹான் மேஹாரி என்பவர் இயக்கிய நாடகப் பாணியிலமைந்த 'டிஃப்ரெட்' என்கிற இந்தத் திரைப்படம் எதியோப்பியாவிலிருந்து வெளியாகிய சிறந்த திரைப்படம் என்று இற்றைவரை பேசப்படுகிறது.

வெளியாகியவுடன் சன்டான்ஸ் திரைப்பட விழாவில் காட்சிப்படுத்தப்பட்டு உலக சினிமா பார்வையாளர் என்கிற விருதை வென்றது. பின்னர் 64ஆவது பெர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அதன்போது பார்வையாளர் விருதை வென்றது. 87ஆவது ஒஸ்கார் விழாவில் சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படமாகத் தெரிவுசெய்யப்பட்டது.




உண்மையான சம்பவத்தைப் பிரதிபலிக்கின்ற இந்தப் படம் எதியோப்பியாவில் தடை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. ஹிந்தியில் 'பிங்' என்ற பெயரிலும் தமிழில் 'நேர்கொண்ட பார்வை' என்ற பெயரிலும் வெளியாகிய தென்னிந்தியத் திரைப்படங்களின் பிதாமகராக இந்தப் படம் இருந்திருக்கலாம் என்கிற சந்தேகத்தையும் இது ஏற்படுத்தத் தவறவில்லை.

**கதை**

எதியோப்பியாவின் அந்தக் கிராமத்தில் பெண்கள் பாடசாலைக்குச் செல்வதோ, கல்வி கற்பதோ எதுவாயினும் பெருங்குற்றம். அதை மீறிப் படிக்கிறாள் 12 வயதுச் சிறுமி ஒருத்தி. பாடசாலை முடிந்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த அவளைக் குதிரையில் வந்த சிலர் கடத்திச் செல்கிறார்கள். அந்தக் குதிரைக் கூட்டத்தின் தலைவன் சிறுமியை வன்புணர்கிறான். பெண்ணை வன்புணர்ந்தால், வன்புணர்ந்தவனுக்கே அவளைத் திருமணம் செய்து வைத்து விடுவார்கள். இது அந்தக் கிராமத்தின் சட்டம்.

இப்படியிருக்க, மறுநாள் அந்தப்பெண் அந்தக் கூட்டத்தினரிடமிருந்து தப்பிச்சென்று விடுவாள். அவள் போகும்போது அங்கிருந்த ஒரு துப்பாக்கியையும் எடுத்துச் சென்றுவிடுவாள். அவள் தப்பிச் செல்வதைக் கண்டுவிட்ட அந்தக் கூட்டம் அவளைத் துரத்துகிறது. தப்பித்து ஓடிக்கொண்டிருந்த அந்தப் பெண் தன்னால் இனியும் ஓட இயலாது என்கிற கட்டத்தில் தனது கையிலிருந்த துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடுகிறாள். அவளை வன்புணர்ந்தவர் இறக்கிறார். சிறுமி சிறை வைக்கப் படுகிறாள்.

இந்தச் செய்தி அறிந்து, நகரத்திலிருந்து பெண் சட்டத்தரணி ஒருத்தி சிறுமியை மீட்க வருகிறார். சிறுமியைச் சிறையிலிருந்து மீட்பது கடும் போராட்டமாக இருக்கிறது. ஒருவாறு சிறையிலிருந்து சிறுமியை மீட்டுத் தனது வீட்டில் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்.. ஒரு சமயம் சட்டத்தரணி வீட்டை விட்டு வெளியே போய்விடத் தொலைபேசி மணி அடிக்கிறது. அதற்குச் சிறுமி பயந்து நடுங்கி றாள். (இதற்கு முன்னர் அவள் பொலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டிருந்தபோது அங்குள்ள தொலைபேசி மணி அடிக்கிறது. பொலிஸ் அதிகாரி பேசுகிறார். பேசிய பின்னர் வந்து அவளை மிருகத்தனமாகத் தாக்குகிறார்). இப்போது தொடர்ந்து தொலைபேசி மணி அடித்துக்கொண்டு இருக்க.. சிறுமி பயந்து வீட்டை விட்டே ஓடுகிறாள்.

**உண்மைச் சம்பவம் இது**

பாடசாலையிலிருந்து வீட்டுக்குச் செல்லும் வழியில் கடத்தப்படுகின்ற 14 வயதுச் சிறுமியான ஹிருத் அஸெஃபாவின் (அபெராஷ் பெக்கெலை அடிப்படையாகக் கொண்டது) கதை இது. அந்தக் கிராமத்தில் சிறுமிகள் திருமணத்துக்காக் கடத்தப்படுவது சாதாரணமானது. அத்தோடு எதியோப்பிய மரபுகளில் ஒன்று அது.

எதியோப்பியன் பெண்கள் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறுவனர் மீசா அஷெனாபி இதில் நகரத்திலிருந்து வந்து அந்தச் சிறுமிக்காகக வாதாடுகிறார். அவர் தற்காப்புக்காகச் சுட்டார் என்று வாதிடுகிறார். அஷெனாபிக்கு அதிக பணம் கொடுத்ததாகக் கூறி 2014 செப்டம்பரில் இந்தப் படம் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டது. சில வழக்குகளில் படத்தின் இயக்குனர் மேஹாரி, மன்னிப்புக் கேட்டார். பின்னரே இந்தப் படம் எதியோப்பியாவில் திரையிடப்பட்டது.

குழந்தைத் திருமணம் குறித்த விழிப்புணர்வையும், எதியோப்பியப் பெண்கள் சட்டத்தரணிகள் சங்கத்தின் முயற்சிகளையும் பொதுவெளியில் பேசியது இந்தப் படம்.. எதியோப்பியாவில் தடை செய்யப்பட்ட இந்தத் திரைப்படத்தின் மாந்தர்கள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். அதில் இந்த 'ஆபிரிக்க நோபல்' பரிசு பெற்ற சட்டத்தரணியும் அடக்கம். அரசையும், எதேச்சதிகார மனிதர்களையும் எதிர்த்துப் போராடும் அந்தப் பெண்மணிதான் இந்தத் திரைப்படத்தின் முக்கிய கதாபாத்திரம். நேர்கொண்ட பார்வையில் வரும் நாயகன் அஜித்தைப்போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூரையைப் பிய்த்துக்கொண்டு.....!

● தர்சி தர்மு

கொடுக்கிற கடவுள் கூரையைப் பிச்சுக்கொண்டு கொடுப்பார் என்கிற சொலவடை புழக்கத்தில் உண்டு. உண்மையிலேயே கூரையைப் பிய்த்துக்கொண்டு விழுந்த விண்கற்களால்



இந்தோனேஷியாவில் ஒருவருக்கு அவர் எதிர்பார்க்காதளவிற்குப் பணம் கிடைத்திருக்கின்றது.

அவருக்குக் கிட்டத்தட்ட 18 லட்சம் அமெரிக்க டொலர்கள் பணம் கிடைத்ததாக சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவினாலும் அந்தளவு தொகையை அவர் பெறவில்லை என்பதே உண்மை. ஆனால், கணிசமான, நியாயமானதொரு தொகை அவருக்குக் கிடைத்திருக்கிறது. இது அவர் எதிர்பார்க்காமல் கூரையைப் பிய்த்துக் கொண்டு கடவுள் கொடுத்த கொடை தான்.

இந்தோனேசியா நாட்டின் சுமத்திரா தீவில் வாழ்கின்றவர் ஜோஷ்வா ஹூடாகாலுங். சவப் பெட்டிகள் செய்யும் தொழிலாளி அவர். கடந்த ஒகஸட் மாதம் அவரது வீட்டுக் கூரையைப் பிய்த்துக் கொண்டு ஒரு பெரிய கல்லும் சிறிய கற்களும் திடீரென விழ்ந்தன.

திடீரென தனது கூரையைப் பிய்த்துக்கொண்டு வீழ்ந்த அந்தக் கற்களால் கதிகலங்கிப் போன ஹூடாகாலுங், பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அதனை எடுத்துப் பார்த்தார். அத்தோடு நின்றுவிடாமல் அதன் படத்தை முகப் புத்தகத்திலும் பகிர்ந்தார்.

அந்தக் கற்களைத் தான் தூக்கிப் பார்த்தபோது அவை சூடாக இருந்தன என்கிறார் ஹூடாகாலுங். அவரிடம் விண்கற்கள் இருப்பதை முகப் புத்தகம் ஊடாக அறிந்த அமெரிக்கர்கள் சிலர் அவற்றை அவரிடமிருந்து வாங்குவதற்கு விருப்பப்பட்டனர். இந்தோனேஷியாவில் இருக்கும் விண்கல் ஆர்வலரான ஜேர்ட் கொலின்ஸ் இரு தரப்பினருக்கும் இடையில் தொடர்புகொண்டு விண்கற்கள் விற்கப்படுவதற்கு உதவினார்.

விண்கற்கள் 400 கோடி ஆண்டுக்கும் மேற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. சூரியக் குடும்பம் தோன்றியபோதே தோற்றம் பெற்றவை என்று கருதப்படுகின்றது. பூமியைவிடவும் அவற்றுக்கு ஆயுள்



அதிகம். சில விண்கற்களில் அரிய வகை உலோகங்கள் இருக்கும். அப்படிப்பட்டவற்றின் விலை அதிகமாகவும் இருக்கும்.

சுமத்திராவில் கிடைத்த விண்கல்லில் 70 சதவீதத்திற்கும் மேல் களிமண்ணால் ஆனது, அதில் இரும்பு, உயிர்வாயு (ஒட்சிசன்), அலுமினியம், கல்சியம், மக்னீசியம் ஆகிய தாதுப் பொருள்கள் மிகச் சொற்பளவில் இருந்தன என்கிறார் அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் உள்ள பூமி மற்றும் விண்வெளி ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கார்வி.

பூமியைவிட வயதில் அதிகமான விண்கற்களை வாங்கித் தமது உடமையாக வைத்துக்கொள்வதில் சிலர் ஆர்வம் காட்டுதால் அவற்றுக்கு ஒரு மதிப்பு இருக்கிறதே தவிர, விண்கற்களுக்கான திட்டவட்டமான மதிப்பு எதுவும் கிடையாது என்கிறார் அவர்.

அப்படியிருக்கும் போது ஹூடாகாலுங் வீட்டில் விழுந்த விண்கற்களால் அவருக்குக் கோடிக் கணக்கில் பணம் கிடைத்ததாக எப்படிக் கதைகள் வெளிவந்தன?

ஹூடாகாலுங் வீட்டில் விழுந்த விண்கற்களில் பெரியது 2 கிலோ நிறையுடையது. மற்றையவை சிறு குறுனிகள். அவற்றில் இரண்டு அமெரிக்காவின் ஈபே இணைய விற்பனைத் தளத்தில் விற்பதற்காக விளம்பரப்படுத்தப்பட்டது. அதில் 0.3 கிராம் நிறையுடைய கல்லின் விலை 285 டொலர்கள் எனவும் 33.68 கிராம் நிறையுடைய கல்லின் விலை 2 ஆயிரத்து 120 டொலர்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்து. இதனடிப்படையில் ஒரு கிராம் விண் கல்லின் விலை 860 டொலர்கள் எனக் கணித்த யாரோ சிலர் ஹூடா காலுங் வீட்டில் கிடைத்த கற்களின் நிறையை இதனால் பெருக்கி கிட்டத்தட்ட 18 லட்சம் டொலர்கள் அவருக்கு வருமானம் வந்தது என்று கதையைக் கிளப்பிவிட்டனர்.

ஆனால், அவ்வளவு பெரிய தொகை கைமாற்றப்படவில்லை, நியாமான ஒரு விலையே கொடுக்கப்பட்டது




என்று கூறும் ஜேர்ட் கொலின்ஸ் அதன் உண்மை விலையைச் சொல்ல மறுத்துவிட்டார்.

## ஊசலாடுயிர்

அப்போதையைப்போல
இருக்கமுடியவில்லை
என்பது
கவலையைவிடவும்
கோபத்தையே அதிகமாய்க்
கிளர்த்துகிறது.

சாவினைநோக்கி
நடந்தநாள்களிலெல்லாம்
எனது
நிழலிலும் முட்டாது
கைகட்டிவந்தபயம்
என்னைமுந்திச் சென்று
சாவின் தோழேறியிருக்க
சாவுமிரண்டு
ஓடிப்போகிறது.

அந்தரத்தில்
முனைகள் சரியாகக்
கட்டப்பட்டிருக்காத
கயிற்றின்துணையுடன்
எரிகுழிகளையும்
முரட்டுமுதலைத் தடாகங்களையும்
இருட்புள்ளியாயொடுங்கும்
பள்ளத்தாக்குகளையும்
கடந்துபயணித்த
நாள்களின்
நினைவுகள்
குத்துகின்றன.
கைகொட்டிச் சிரிக்கின்றன.

என்னசெய்ய?
ஒளிப்பொட்டுகள் யாவும்
புல்லிதழின் பனித்துளிகள்.
தண்ணீர்த் தடாகங்கள்
கானல்திட்டுகள்.

புத்திபேதலிப்பது
தவறில்லை
என்பதேநிலைப்பாடு
தவறா?

- வானவன்

## கறுப்புச் சிந்தனை....

கருமுகிலின் கருமை போக்கினால்
வெண்முகிலாய் அது பிரகாசிக்குமா...
அல்லது
கருமுகில் என்ற பெயர் துடைத்து
ஒருநாமம் இல்லாமல்
உருக்கொண்டு அலையுமா..?
ஏன் இந்தக் கேள்வி..?
மண்டைக்குள் குடையும் கோட்பாட்டுப் பூச்சிகளின்
சண்டைக்குப் பயந்து
நான் சும்மா பிதற்றுகிறேனா..?
அல்லது
கவியெழுத வென்றே மூளையைப் பிசைந்து
கலியுகக் கவியொன்று படைத்துக்
கள்ளும் ஊட்டி
முன்னே நின்று மூக்குச் சொறிய முனைகிறேனா...?
ஏன்... ஏன்.. நான் புலம்புகிறேன்..?
நான் ஆர்...? என் உள்ளமார்...?
கருமையா... வெண்மையா...
அல்லது
இரண்டும் கலந்த
கருவெண்மையா, வெண்கருமையா
போதுமப்பா..
கொஞ்சம் சும்மாயிரு
மூலாதாரத்தில் மூத்திரம் முட்டப்
புருவமத்தியில் மின்னலொன்று தெறிக்கும்
மண்டையின் மையத்துளையால்
பாம்பாய் அது புறப்படும்
கவிக்கோமான் எனப்
பட்டங்கள் சூட்ட அது படமெடுக்கும்
சிலிர்க்கும், சீறும், கொத்தும், சுழற்றி
வாலால் தூக்கி அடிக்கும்
சிலர் கழுத்தில் மாலையாய்ப்புரளும்
கடும் கறுப்பு நிறமடிக்கும்
வெண்மை நிறமெனக் கறுப்பு மனத்தார்
கூவிக் குதூகலிப்பர்;....
நிப்பாட்டு
தேக்கி வைத்திருக்கும் உன்
பைத்தியங்களுக்குள் இறங்கி
நாற்றமெடுக்கும் சிந்தனைகளை
ஏன்.. நீ மேடையேற்றுகிறாய்...
நீ யார்... உன் உள்ளம் எத்தகையது,
நீ ஒரு வெண்பிறவி
கறுப்புப் பற்றி ஏன் கத்துகிறாய்..
அப்ப என் கவிதை...
ச்சு... ச்சு...
மெதுவாகக் கண்களை மூடு
அமைதி... அமைதி... அமைதி..

- நா.நவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையின் அருமை... இனிமேல் தெரியும்...

● சாமந்தி தவராசா

இம்முறை புழுதி விதைப்பி லீடுபட்டிருந்த விவசாயி களின் பெருங்கவலையாக மழையில்லாமை இருந்தது. பிர தேசந்தோறும் பிரதேச செயலகத்தி னராலும் கிராம அலுவலர்களாலும் வழங்கப்பட்ட ஊக்கமும், கொரோனா முடக்கத்தால் பொருளாதார இறுக் கம் ஏற்படலாம் என்று விவசாயிகள் மத்தியில் நிலவிய எதிர்பார்ப்பும் இந்த முறை விதைப்பில் கவனம் செலுத்தியோரின் தொகையை அதி கரிக்கச் செய்திருந்தது. இதனால் விதைப்பு நிலப் பரப்புகள் பன்மடங்கா கின. ஆனால், முடிவில் எல்லாமே மழையின் கையில் தங்கியது. விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் பலரும் மனச் சஞ்சலத்திலும், பெரும் மன உளைச் சலுக்கும் ஆளாகினர். முற்கூட்டியே விதைத்த ஒருசிலரின் பயிர்கள் அப்போதே பெய்த சிறிய மழை காரணமாகத் துளிர்விட்டி ருக்க, பின்னர் அவற்றின் வளர்ச்சிக் குத் தேவையாகவிருந்த மழை பொய்த்துப் போனதால் அந்தப் பயிர்கள் மஞ்சள் வண்ணம்பூண்டு மூச்சிழுத்தன. அதன் பின்னர் விதைத்தவர்களின் விதைகள் புழுதி மணலில் மழையை எதிர்பார்த்தபடி மூச்சிழுத்துக் கொண்டிருந்தன. அவற்றின் உரி மையாளர்கள் பெரும் ஏக்கத்தில் இருந்தனர். இப்படியான நிலை யில்தான் பருவம் பிந்திய மழை கிடைக்கத் தொடங்கியது. தாழமுக் கம் என்ற பெயரிலும் அது பெய்கிறது.





**மழைய நம்பி...**

இலங்கையின் வடபகுதிக்கு மழை கிடைக்கும் பருவம் என்று வரு டத்தில் 3 மாதங்களையே வரையறுக்க முடியும். ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களை மையப்படுத்தி வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று மூலம் வடக்குக்கு மழை கிடைக்கி றது. இதுபோக வருடத்தில் ஏனைய மாதங்கள் முழுதும் வெயில்தான். வருடத்தில் மழைப் பருவம் என் பது வெயில் காலத்துடன் ஒப்பிடு கையில் குறைந்திருக்க, அதிலும் இம்முறை பருவம் தப்பி - பிந்தியி ருக்கிறது மழை. ஆனால், சித்தி ரைக்குப் பின்பிருந்தே குடநாட்டின் பல பகுதிகளில் வறட்சியும், நீர்த் தட்டுப்பாடும் நிலவத் தொடங்கி விட்டன. இதனால் விவசாயிகள் மாத்திரமன்றி இம்முறை பலரும் மழையை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தனர். ஆனாலும் ஐப்பசி தாண் டிக் கார்த்திகையின் முடிவில்தான் தூறல்போட ஆரம்பித்திருக்கிறது மழை. இந்தக் காலப்பகுதியில் வங் காள விரிகுடாவில் தாழமுக்கங்கள் உருவாகிக் காற்றும் மழையும் கிடைப்பதால் அதனாலும் மழை பெய்யத் தொடங்கியிருக்கிறது. பிந் திக் கிடைத்தாலும் வயல் விதைத்த வர்களுக்கும், பூநகரி, புங்குடுதீவு போன்ற நீர்த் தட்டுப்பாடு நிலவுகின்ற பகுதி மக்களுக்கும் இது பெரும் மனக்குளிர்ச்சிதான்.

**மழையைப் பயனுள்ளதாக்குங்கள்**

வருடத்தில் பெரும்பகுதி முழுதும் வெயில் கிடைத்துச் சிறியளவில் மழை கிடைத்தாலும் மழையைத் தூற்றுபவர்களே அதிகம். மழைய எதிர்பார்த்துத் தவம் கிடப்பதும் அது தொடர்ந்து பெய்கையில் "வெயிலை எவ்வளவு வேண்டுமானாலும் தாங் கலாம் மழையைச் சமாளிக்க ஏலாது" என்று ஆதங்கிப்பவர்களுமே நம்மில் பலர். பின்னர் வெயில் காலத் தில் மழைக்காகக் காத்துக் கிடப்பதும் இவர்களே. மழை பொய்த்துப் போவதற்கும், பிந்திப் போவதற்கும், மழைவீழ்ச்சி குறைவடைந்து வரு வதற்கும் காரணம் மனிதர்களின் இயற்கை அழிப்பும், காபன் வெளி யேற்றமும், சூழல் மாசடைவுமே. அத னால் வருடம்தோறும் மழை வீழ்ச்சி குறைந்து செல்கிறது. அவ்வாறு குறைந்து செல்கின்ற மழை நீரையும் கூட மனிதர்கள் பயன்படுத்தாமல் விடுவதுதான் இங்கு பிரச்சினை.

**அழகு முக்கியமல்ல...**

இவ்வாறு வருடத்தில் அரிதாகக் கிடைக்கின்ற மழை நீரைச் சரிவர வும், முறையாகவும் பயன்படுத்து வது முக்கியமாக இருக்கையில், மழையைக் கண்டவுடன் அழகுத் தாவரங்கள், பூஞ்செடிகள் விற்பனைக் கூடங்களில் பலரும் நிரம்பி வழி வதைக் காணமுடிகிறது. இயற்கை யாகப் படைக்கப்பட்ட - இயற்கை யாகவே அழகு கைவரப்பெற்ற தமது தேகத் தோலுக்கும், உடலுக்கும் செயற்கைத் திரவியங்கள், ஒப்பனை களைத் திணித்து அழகு காண்பதற்கு ஒப்பானதே தாம் வாழும் இயற்கைச் சூழலையும் இவ்வாறு அழகுபடுத்து வது. இயற்கையைச் சரிவரப் பரா மரிப்பதற்கு முதன்மையளிக்கத் தவ றிச் செயற்கையான இத்தகைய விட யங்களில் கவனம் செலுத்துவது அத்தியவசியமில்லையல்லவா? இயற்கையும், இயற்கையாக அமை யப்பெற்றவையும் அழகானவை யாக இருக்கையில் மனிதர்கள் செயற்கை அழகுக்கு முண்டியடிக்கி றார்கள். முதலில் வீட்டுத்தோட்டங் கள், பயன்தரு தாவரங்கள் உட்பட விவசாயப் பயிர் நடவடிக்கைகளுக்கு முக்கியமளித்துப் பின்னர் இத்தகு விடயங்களில் கவனம் செலுத்தி னால்கூடப் பரவாயில்லை. ஆனால், வீட்டுத்தோட்டப் பயிர்கள், மற்றும் காய்கறிகளை வளர்த்து விற்பனை செய்கின்ற நிலையங்களில் அந்தப் பயிர்கலெல்லாம் தேடுவாரற்றுக் கிடந்து வாடிக்கொண்டிருக்க இத்தகு அழகுச் செடிகள் மீது மனிதர்கள் ஆர்வம் காட்டுவது வேதனைக்குரி யதே. பெருமரங்களையோ, கற்ப கதருக்கள்போன்ற எத்தகு சூழ லையும் தாக்குப்பிடித்து வளர்கின்ற மரங்களையோ நாட்டினால் மழை வீழ்ச்சியைத் தக்கவைத்துக்கொள்வ துடன் சூழலுக்கும் பெருந்துணை யாக அமையும். அல்லதுபோனால் அன்றாட வாழ்வுக்குத் தேவையான விதத்தில் வீட்டுத்தோட்டப் பயிர் களை வளர்ப்பது தமக்கும் சக மனி தர்களுக்கும் பயனுள்ளதாக அமை யும். இத்தைகய அத்தியவசியங் களை விடுத்து மழை நீரையோ, தரைக்கீழ் நீரையோ அழகுபடுத் தல் போன்ற ஆடம்பரங்களுக்குச் செலவிடுவதன் விபரீதம் தற் போதைய பருவநிலை மாற்றத்தை - மழைக் குறைப்பைப்போல எதிர் காலத்தில் தெரியவரும். ■

**இயற்கையாக அமையப்பெற்ற வையும் அழகா னவையாக இருக்கையில் மனி தர்கள் செயற்கை அழகுக்கு முண்டியடிக்கி றார்கள்.**

விஷால் - ஆர்யா இணைந்து நடிக்கின்ற புதிய படம் 'எனிமி'. 'அவன் இவன்' படத்துக்குப் பிறகு இதில் இணைகிறார்கள் விசாலும் ஆர்யாவும். மிருணாளினி, கருணாகரன், தம்பி ராமையா உள்ளிட்ட பலர் இதில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். தனுஷின் பழைய மேலாளரான வினோத் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார். ஒளிப்பதிவாளராக ஆர்.டி.ராஜசேகர், இசையமைப்பாளராக தமன், கலை இயக்குநராக டி. ராமலிங்கம் ஆகியோர் பணிபுரிகிறார்கள். ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் உருவாகிவருகிறது இந்தப் புதிய படம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நாளும் நலம் வாழ

மருத்துவம்

## வேம்பு - கைக்கின்ற இனிப்பு

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்



*இது*
*அன்னையின் நிழல்*
*இயற்கையின் இன் மருந்து*
*மரமாய் இருக்கிற வரம்.*

எமது கிராமங்களை பொறுத்தவரை வேம்பு அநேகமாக ஒவ்வொரு வீட்டிலும் காணப்படுகின்ற மரம் குளிர்ந்த சுத்தமான காற்றையும் நிழலையும் தருகிற மரம் என்பதைத் தவிர நிறைய மருத்துவ குணங்களை தன்னத்தே கொண்டதாகக் காணப்படுகிறது. சித்த மருத்துவத்தில் இதன் பயன்பாடு அதிகம் எனலாம். இதனுடைய இலை, பூ, காய், பழம், விதை என அனைத்துப் பாகங்களும் மருந்தாவது இதன் சிறப்பு

**வேப்பம் இலை**

வெந்நீரில் வேப்ப இலைகளைப் போட்டு சிறிது நேரத்துக்குப் பிறகு குளித்தால் தோல் வியாதிகளிடமிருந்து தப்பிக்கலாம். நீரிழிவு நோயாளிகள் வேம்பு இலைகளை காசயமிட்டு அருந்தலாம், இது குருதியில் உள்ள கூடுதல் குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்துகிறது.

அதிகாலையில் வேப்பங் கொழுந்தை சிறிது பறித்து சாப்பிட்டு வர வயிறு சம்மந்தமான பிரச்சினைகள் தீரும்.

காலில் பித்த வெடிப்பு உள்ளவர்கள் வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்து மைபோல் அரைத்து, அதனை வெடிப்பின் மேல் நன்றாகத் தடவி மறுநாள் காலையில் தேய்த்துக் கழுவிவிட வேண்டும். இப்படி செய்து வந்தால் பித்த வெடிப்புகள் மறையும்.

**வேப்பம் பூ**

கொஞ்சம் வேப்பம் பூவுடன் இரண்டு அல்லது மூன்று மிளகை வைத்து அரைத்து சுண்டைக்காய் அளவு குழந்தைகளுக்கு கொடுத்தால் வயிற்றுப் பூச்சிகள் நீங்கும்...

வேப்பம் பூவை நிழலில் உலர்த்தி சம்பிராணியுடன் சேர்த்து தூபம் போட்டால் காற்றில் உள்ள கிருமிகளை அழித்துவிடும்.

**வேப்பெண்ணெய்**

மூட்டுவலி, தசை வலி நோயாளிகளுக்கு வேப்ப எண்ணெய் பயனுள்ளதாக இருக்கிறது. வேப்பெண்ணெய்யுடன் மற்றும் பிற மருந்துப் பொருள்களைச் சேர்த்து காய்ச்சப்படும் தைலங்கள் தோல் புண், சொறி, சிரங்குகளுக்கான சிகிச்சையில் சித்த மருத்துவர்களால் பயன்படுத்தப்படுகிறது.

**வேப்பம் பழம்.**

நகச்சுத்தி ஏற்பட்டால் எலுமிச்சம் பழத்தில் துளையிட்டு அதை விரலில் சொருகிக் கொண்டால் குணமாகிவிடும். இருப்பினும், இந்த நோய் வந்ததும் வேப்பிலையை மைபோல் அரைத்து அதனுடன் மஞ்சள் சேர்த்து, அதை நோய் கண்ட இடத்தில் வைத்துக் கட்டி வந்தால் விரைவில் குணமாகும்.

**வேப்பம் விதை**

வேப்பம் விதையுடன் வெல்லம் சேர்த்து காலை மற்றும் மாலை என ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் உள் மூலம், வெளி மூலம் தீரும்.

**வேப்பம் பட்டை**

முதிர்ந்த வேம்பின் வேர்ப்பட்டைப் பொடியுடன் முதிர்ந்த பூவரசம் பட்டைப் பொடி சம அளவில் கலந்து அதனுடன் சிறிது தேன் சேர்த்து காலை, மாலை என 48 நாள்கள் சாப்பிட்டு வரத் அனைத்துத் தோல் நோய்களும் குணமாகும்.

வேப்பம் பட்டை 5 பலம், கஸ்தூரி மஞ்சள், பூண்டு, மிளகு, சீரகம் இவை வகைக்கு 50 கிராம் எடுத்து இவற்றை இடித்துத் தூளாக்கி, ஒரே மாட்டின் பசும்பால் ஒரு படி நல்லெண்ணெய் ஒன்றரைப்படி எடுத்து இவையனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து காய்ச்சி

இந்த எண்ணெயைத் தேய்த்துக் குளித்து வந்தால் வாதரோகங்கள், பாரிச வாயு, சீதளரோகம் சம்பந்தமுடையவர்கள், விரைவில் குணம் பெறுவார்கள்.

# கல்முனை....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்மொழிவுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் பேசினார்.

இந்த முன்மொழிவு மீதான வாதத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டு முரண்பட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மு.காவின் தலைவர் ரவூப் கக்கீம் தனது உரையில், இந்த விடயத்தில் முக்கியமானதாகக் காணப்படும் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நீண்டகாலமாகப் பேச்சு நடத்தி வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

தமது முயற்சிகளின் விளைவாக இதற்கான எல்லை நிர்ணயக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். விவாதத்தின் இறுதியில் பேசிய உள்ளகப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சமல் ராஜபக்ச, எல்லை நிர்ணயக் குழுவின் மூலம் விரைவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தரப்படும் என்று உறுதியளித்தார்.

இதையடுத்து இந்தப் பிரச்சினை மீண்டும் சூடு பிடித்துள்ளது. மாகாண சபைத் தேர்தல்களுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அதிபர் கோட்டாபய ராஜபக்ச உத்தரவிட்டிருக்கிறார் என்று செய்திகள் வெளியாகிவரும் நிலையில், இந்த விவகாரத்தின் சூடு மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களே காணப்படுகின்றன.

ஆனால், எல்லை நிர்ணயக் குழுக்கள், ஆணைக் குழுக்கள் எல்லாமே காலத்தை இழுத்தடிக்கும் உத்திகளே தவிர பிரச்சினையைத் தீர்க்கும் வழிவகைகள் அல்ல என்று நிராகரிக்கிறார்கள் கல்முனை வாழ் தமிழ் மக்கள். இருக்கின்ற உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு வேறு எங்குமே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டதில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

தமது பிரதேச செயலகத்தைப் பெற்றுத் தராதது குறித்து அவர்கள் அரச மற்றும் தமிழ்க் கட்சிகள் அனைத்தினது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், துணை அமைச்சர்கள் மீதும் கடும் கோபமுற்றிருக்கிறார்கள்.

தமது 30 வருடக் கண்ணீர்க் கதை எப்போது முடிவுக்கு வரும் என்று கேட்கிறார்கள் அவர்கள்?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகராதி பிடிச்சவன் பதில்கள்

**கே: பாலேந்திரன்,** *தெல்லிப்பளை*
ஒரு மாதமா விரதம் விரதம் எண்டு எல்லாம் முடிஞ்சு போய்ச்சுது. இனியாச்சும் மாமிசம் கண்ணில படுமா?

**ப:** எப்படா மச்சம் சாப்பிடுவம் என்டிற ஏக்கத்திலயே விரதம் இருந்ததைவிட, அதைச் செய்யாமல் அளவா தேவையானதைச் சாப்பிட்டுச் சந்தோசமா இருந்திருக்கலாமே! என்ன இருந்தாலும் வடக்கு, கிழக்கு போன்ற வறண்ட பூமியில் மீன் தவிர்த்த மாமிச உணவுகளைப் பெறுவதற்கான மறைநீர் கணக்கைப் பார்க்கும்போது மரக்கறிகளே எமக்குகந்த உணவு என்றே படுகிறது. சில காலங்களுக்கு முன்னரைப் போன்று வாரத்தில் ஒரு நாள் இறைச்சி என்றால் பரவாயில்லை. ஆனால், இப்போதெல்லாம் நாளாந்தம் இறைச்சி என்கிற நிலை எமது கால நிலைக்கு தவிர்க்கப்படவேண்டியதே!

**கே: கபீசன்,** *சாவகச்சேரி.*
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கடந்த காலங்களில் புலிகளுக்கு எதிராகப் பேசி வாங்கிக் கட்டிக் கொண்டதால் திருந்திவிட்டாரோ? கப்டன் பண்டிதரின் நினைவேந்தலில் எல்லாம் கலந்துகொண்டிருக்கிறார்?

**ப:** ஒருவேளை பழக்கதோசம் காரணமாக இருக்கலாம். முன்னர் சுமந்திரனைத் தோற்கடித்தே ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சுமந்திரனும் இப்போது நல்ல நண்பர்களாமே! எந்தப் பொது இடத்தில் கண்டாலும் இருவரும் அளவளாவாமல் போவதேயில்லையாமே! ஒருவேளை அந்தப் பழக்கத்தால் இந்த மாற்றம் வந்திருக்குமோ?

**கே: கலைச்செல்வன், திருநகர்.**
கிளிநொச்சி மட்டும் கொரோனா வந்திட்டுதாம். யாழ்ப்பாணத்துக்கு எப்ப வரும்..?

**ப:** சமூக இடைவெளி பேணுதல், முகக் கவசத்தை எப்போதும் அணிந்திருத்தல், கைகளை அடிக்கடி சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் போன்ற சுகாதார நடைமுறைகளை உளமார உண்மையாகப் பின்பற்றுவதில் இருந்து நாம் கடும் தூரத்தில் நிற்பதைப் பார்க்கும்போது கூடிய விரைவிலேயே யாழ்ப்பாணத்திற்கும் கொரோனாவைக் கூட்டிவந்துவிடுவோம் என்றுதான் படுகிறது.

**கே: நிரோஜன்,** *நல்லூர்.*
மரம் நடுகை மாதம் முடிய போகுது, இப்ப நான் ஏதும் மரம் நடுவம் எண்டிருக்கன் என்ன மரம் நடலாம்..?

**ப:** நல்ல யோசனை! மரங்களைத் தெரிவு செய்து நடும்போது சூழலுக்கும் இயற்கைக்கும் பயனுள்ளவைகளாக இருந்தால் மிகவும் நல்லது. எல்லா மரங்களும் பகலில் கரியமில வாயுவான கார்பனீரொட்சைட்டை உள்ளெடுத்து உயிர் வாயுவான ஒக்சிசனை வெளிவிடும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், வேம்பு மற்றும் அரசு போன்ற மரங்கள் இரவிலும்கூட இந்தப் பணியைச் செய்யும். அதனால் இந்த மரங்களின் இருப்பை அதிகரிப்பது சுத்தமான காற்றையும் இயற்கையையும் உறுதிப்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும். (அரச மரத்துக்குக் கீழ் புத்தர் வந்தமர்ந்தால் என்னைக் கேட்கக்கூடாது) அதேபோன்று துளசி மற்றும் கற்றாளை போன்றனவும் இரவிலும் உயிர் வாயுவை வெளியிடக்கூடியன அவற்றின் அளவையும் நீங்கள் அதிகரிப்பது பயனுள்ளதாக அமையும்.

**கே: சேக்னா,** *குருநகர்.*
மோட்டார் சைக்கிள் இறக்குமதி இல்லாததால காட்சியறையள் எல்லாம் வெறிச்சோடிப்போய் கிடக்கு அது பற்றி என்ன நினைக்கிறீங்க..?

**ப:** அதனால மோட்டார் சைக்கிள் விலை எல்லாம் கூடிப்போச்சுது என்டிறது ஒரு பக்கம் இருக்க, தமிழர்கள் எல்லாரும் மீண்டும் மிதிவண்டிகளுக்கே (சைக்கிள்) திரும்பினால் உடலுக்கும் இற்கைக்கும் நல்லது. ஆனால் நடக்கக்கூடிய கனவா அது?

**கே: பார்த்தீபன்,** *யாழ்ப்பாணம்.*
மாவீரர் நாளை ஒரு வழியாகத் தடை செய்துவிட்டார்களே, என்ன செய்யப் போகிறீர்கள்?

**ப:** இந்தக் கேள்வியை நீங்கள் இன்றைக்கு ஆட்சியாளர்களுடன் இருக்கும் அரசியல்வாதிகளைப் பார்த்துக் கேட்டிருக்க வேண்டும். அவர்கள்தான் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்தாலும் இந்த நிகழ்வுகளுக்குத் தடை வராது என்று அடித்துச் சத்தியம் செய்தவர்கள். புலிகள் பயங்கரவாதிகள் அவர்களை நினைவுகூர அனுமதிக்கமாட்டேன் என்று யாழ்ப்பாணத்துப் பத்திரிகை ஒன்று கோட்டாபய ராஜபக்சவின் கருத்தை வெளியிட்டபோது, அது பிழையானது அப்படி அவர் சொல்லவேயில்லை என்று அவரது பெயரில் தமிழில் முகப் புத்தகக் கணக்கை வைத்திருக்கும் அரசியல்வாதிகள் அறிக்கை எல்லாம் வெளியிட்டார்கள். பொதுத் தேர்தலில் தமக்கு வாக்குப் போய்விடும் என்பதற்காக அப்படி விழுந்துகிடந்து அரசியல் செய்தவர்களிடம்தான் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும். முச்சந்திக்கு இழுத்து வந்து அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டீர்களானால் ஒருவேளை நல்ல பதில் கிடைக்கக்கூடும்.

*உங்கள் கேள்விகளை*
**551 A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
என்கிற தபால் முகவரிக்கு
அல்லது
**shemman.redsoil@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேடை ஏற மறுக்கும் அதுல்யா

'அடுத்த சாட்டை', 'நாடோடிகள் 2' உள்ளிட்ட பல படங்களில் நடித்துப் பிரபலமானவர் அதுல்யா ரவி. சில ஆண்டுகளுக்கு முன்பு 'என் பெயர் ஆனந்தன்' என்ற படத்தில் அவர் நாயகியாக நடித்தார். ஸ்ரீதர் வெங்கடேசன் இயக்கிய இந்தப் படத்தில் சந்தோஷ் பிரதாப் நாயகனாக நடித்தார். இந்தப் படம் சில சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுச் சிறந்த படத்துக்கான விருதை வென்றது. இந்த மாதம் 27ஆம் திகதி இதை வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்த விளம்பரங்களும் இணையத்தில் வெளிவந்துள்ளன. இந்த நிலையில், இதன் வெளியீட்டு விழாவில் படத்தின் நாயகியான அதுல்யா ரவி பங்கேற்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். இதற்கு அவர் தெரிவித்துள்ள காரணம் என்ன தெரியுமா...? நான் இந்தப் படத்தில் நடிக்கும்போது குண்டாக இருந்தேன். இப்போது ஒல்லியாகிவிட்டேன். இந்த நிலையில் எனது மார்க்கெட் போய்விடும் என்றுள்ளார் அதுல்யா ரவி. இதனால் தானாம் அவர் இந்தப் படத்தின் வெளியீட்டு விழாவில் பங்கேற்க மறுக்கிறார். இதைச் சொன்னது இந்தப் படத்தின் இயக்குநர். இதற்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும் என்று எனக்குத் தெரியவில்லை என்றும் இயக்குநரே சொல்கிறார். ஆகவே அதுல்யா ரவியின் உடல் மெலிவு பற்றிப் பல கதைகள் உலாவ ஆரம்பித்து விட்டன. கிசு கிசுப்புகளுக்கும் பஞ்சமில்லை.

எது எப்படியிருப்பினும் பட வெளியீட்டுக்கு வராததால் நாயகி மீது முறைப்பாடளிப்பதற்குப் படக்குழுவினர் முடிவு செய்யுமளவுக்கு நிலமை சென்றிருக்கிறது. பட வெளியீட்டில் தாமதம்தான் நாயகியின் கோபத்துக்குக் காரணம் என்று எண்ணிய இயக்குநர், படம் எடுக்க ஆரம்பிக்கும்போதே அதைத் திரைப்பட விழாக்களுக்கு எல்லாம் அனுப்பிவிட்டுத் தாமதமாகத்தான் வெளியிடுவேன் என்று நாயகிக்குக். கூறியிருந்தேன் என்றும் சொல்கிறார். எது எப்படியே நாயகி வாய்திறந்தால் தான் இனி ஏதாவது தெரியவரும்.



## ஆட்டம் 1

| | | | |
|---|---|---|---|
| ன் | ய | மை | ஆ |
| செ | தீ | ரி | பு |
| ய | ய் | ல் | தி |
| கை | வ | ரி | கா |

மேலே பெட்டிகளில் தரப்பட்டுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி 2 முதல் 4 எழுத்துக்களில் உள்ள சொற்களைக் கண்டுபிடிக்கவேண்டும். குறைந்தது 11 சொற்களைக் கண்டுபிடிப்பவர்கள் வெற்றியாளர்கள். அதற்கு மேலும் கண்டுபிடிப்பவர்கள் சாதனையாளர்கள். முக்கியமான நிபந்தனை, உருவாக்கப்படும் சொற்கள் அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களாக இருந்தல்வேண்டும். பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதாக இருத்தல் கூடாது. சொற்கள் அனைத்தும் 2 நிமிட நேரத்திற்குள் கண்டுபிடிக்கப்படுதல் வேண்டும். சரியான விடையை எழுதியனுப்புவர்களில் வெற்றியாளர்கள் ஐவரின் பெயர்கள் பத்திரிகையில் வெளியிடப்படும்.

## இந்த வார சுடோக்கு - 18

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | | 7 |
| | 6 | | | | | | 9 | 8 |
| 1 | | | 4 | | 2 | | 3 | |
| | 4 | 9 | | 6 | 7 | | 5 | |
| | 1 | | | | | | 6 | |
| | 3 | | 8 | 9 | | 4 | 7 | |
| | 2 | | 5 | | 1 | | | 4 |
| 5 | 8 | | | | | | 2 | |
| 6 | | | 3 | | | | | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங்கள். சரியாக எழுதி வெற்றிபெரும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 7 | 3 | 6 | 9 | 8 | 2 | 4 |
| 8 | 4 | 9 | 7 | 1 | 2 | 6 | 5 | 3 |
| 6 | 2 | 3 | 8 | 5 | 4 | 7 | 1 | 9 |
| 4 | 9 | 8 | 5 | 2 | 3 | 1 | 6 | 7 |
| 3 | 6 | 5 | 1 | 4 | 7 | 2 | 9 | 8 |
| 1 | 7 | 2 | 9 | 8 | 6 | 4 | 3 | 5 |
| 7 | 8 | 1 | 6 | 3 | 5 | 9 | 4 | 2 |
| 2 | 5 | 6 | 4 | 9 | 8 | 3 | 7 | 1 |
| 9 | 3 | 4 | 2 | 7 | 1 | 5 | 8 | 6 |

## கொரோனா....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் அந்த அறிக்கை, பொதுச் சுகாதார விதப்புரைகளை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு மக்களிடம் வலியுறுத்தியிருக்கிறது. கூடவே, பாதிக்கப்படக்கூடிய தரப்பினரை விரைவாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுதல் மற்றும் கொவிட்-19இனால் ஏற்படக்கூடிய சிக்கல் தன்மைகளை முகாமை செய்து தேவையற்ற இறப்புக்களைத் தவிர்க்கும் பொறிமுறைகள் நடைமுறைக்கிடப்படவேண்டுமென அந்த அறிக்கை கோரியிருக்கிறது.

**அமைச்சரும் ஆமோதிப்பு**

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டிருந்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி, கொவிட்-19 இற்கான தடுப்பு மருந்தை கொள்முதல் செய்வதற்கான பேச்சு கொவக்ஸ் உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார். இலங்கை சனத்தொகையில் 20 வீதம் பேருக்குத் தடுப்பு மருந்தினை பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளதாகவும் அவர் உறுதிப்படுத்தினார்.

தடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுகள் மற்றும் அவை சந்தைக்கு வருவதற்கான அறிகுறிகள் என்பவை வரவர பிரகாசமாகின்ற போதிலும் உலகளாவிய கேள்வி மற்றும் முற்போக்கற்ற சிந்தனைத்தன்மை என்பன இலங்கைக்கு அது கிடைப்பதனை தாமதப்படுத்தலாம். கொரோனாவிற்கான தடுப்பு மருந்துக் கனவில் திளைத்திருப்பதை விடுத்து பொதுச் சுகாதார நடைமுறைகளை சரிவரப் பின்பற்றுவதே இப்போதைக்கு நம்மைக் காக்கும்.

## கார்ட்டூன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● காயா

# “களத்தில் இறங்கி... நிலத்தில் கால் வைத்து... வேலை செய்யவேணும்...!”



## என்ன சொல்கிறார் சச்சிதானந்தன் ஐயா...?

“ அலுவலர்கள் இறங்கிச் சென்று செய்முறையாகச் செய்து காட்டினாலேயே அவர்களுக்கு அறிவூட்டல் களையும், இது குறித்த விளக்கங்களையும் அளிக்க முடியும். ”

சாரமும், வேட்டியுமாக அந்தக் கிராமத்து மனிதர்கள் சிலர் கந்தோரில் ஒன்றுகூடினர். அவர்களை வரிசைப்படுத்திக் கதிரைகளில் ஒளிப்படங்களுக்கு முகம்காட் டும் விதத்தில் அமரச் செய்த அலுவலர்கள் அவர்களுக்கு ஒளிப்படக் கருவிகளால் பெரிய திரையில் வர்ணப் படங்களைக் காட்டி விளக்கங்களை அளித்தனர்.

நாற்றுமேடை அமைப்பது, அதிலிருந்து சிறந்த நாற்றுக்களைப் பெறுவது, அவற்றை வளர்த்து அதிக விளைச்சலைப் பெறுவது ஆகிய பயன்தரு விளக்கங்களையே அந்த அலுவலர்கள் தரப்பு அந்த விவசாயிகளுக்கு அளித்தது. ஆனாலும், அலுவலர்கள் விளக்கமளித்த படங்களைப் பார்த்து அந்தக் கிராம மனிதர்கள் முகம்சுழித்துக் கொண்டனர்.

அதில் ஒருவர் எழுந்து, “நாங்கள் செய்யிற பெரியளவான பரப்புக்குத் தேவையான கன்றுகளைப் பெறுவதற்கு நீங்கள் சொல்வது போல நாற்றுமேடையைப் போட்டுச் சரிவராது - உப்பிடி மினக்கட்டுக் கொண்டும் இருக்க ஏலாது” என்றார். இது இப்பிடிப் படத்துக்கும் விளங்கப்படுத்தவும்தான் சரி, செய்முறைக்குச் சரிவராது என்பதாக அவரது வாதம் இருந்தது.

அவரது வாதத்துக்குச் சரியான பதிலையோ, அல்லது அவருக்குரிய தெளிவூட்டல்களையோ வழங்காத அலுவலர்கள் மறு கேள்விக்கும், விடயப்பரப்புக்கும் நகர்ந்தனர். ஆனால், இதற்குத் தீர்க்கமான பதிலைத் தந்தார் “செம்மண்” அணுகிய சச்சிதானந்தன்.

கொக்குவிலைப் பூர்வீகமாகக் கொண்ட சச்சிதானந்தன் தற்போது இருபாலையில் வசித்து வருகிறார். விவசாய விரிவாக்க சேவையாளராகவும், விவசாயப் போதனாசிரியராகவும், பண்ணை முகாமையாளராகவும் 1976ஆம் ஆண்டு தொடங்கி 2010 ஆம் ஆண்டு வரை பணியாற்றி ஓய்வு பெற்ற அவரை அவரது வீட்டில் சந்திக்கக் கிடைத்தது.

விவசாயிகளுக்கு விளக்கப்படங்களைக் காட்டி விளக்கமளிப்பதை விடவும் நேரடியாகச் செய்துகாட்டுவதே சிறந்ததும் உகந்ததும் என்றார். இளைப்பாறிய அரச அலுவலரான அவர். தனித்துவமான மொழியில் எம்மோடு உரையாடினார்.

“விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு மாதிரிச் செய்கையளைச் செய்து காட்டவேணும். விளக்கப் படங்களைக் காட்டுவதை விடவும் அவர்களினுடைய வீட்டிலேயே வரிசைப்படுத்திய நாற்றுமேடையைப் போட்டு அவ்வாறு வரிசையில போடுறதாலை கிடைக்கிற நன்மையளைக் காட்டலாம். வீரியமான நாற்று, குறைஞ்ச விதையோட கூடின பரப்பளவுக்கு நாற்றைப் பெறுவது, நோயற்ற நாற்றுகள், இடம்விட்டு நடுவதால் அவற்றின் அடிப்பாகத்துக்குக் காத்துப் பிடிக்கிறதால அடித் தண்டுகள் வீரியமாக இருப்பது என இதனால் நிறைய நன்மைகள் இருக்கு. அதை அவர்களுடைய காணியிலையோ, வயலிலையோ ஒரு பக்கமாகச் செய்து காட்டவேணும்.

*நீங்கள் சொல்வது போல நாற்றுமேடையைப் போட்டுச் சரிவராது - உப்பிடி மினக்கட்டுக் கொண்டும் இருக்க ஏலாது. படத்துக்கும் விளங்கப்படுத்தவும்தான் சரி, செய்முறைக்குச் சரிவராது...*



அதை நாங்கள் முன் மாதிரித் துண்டங்களாச் செய்து காட்டினம். ஒரு பகுதியில நாங்கள் வரிசையாகப் போட்ட நாற்றுகளையும் மற்றப் பகுதியில விவசாயி சாதாரணமாகப் போட்ட மெல்லிய ஈர்க்கு மாதிரியான வீரியம் குறைஞ்ச நாற்றுகளையும் நட்டு வளர்த்து, வளர்ச்சியைப் பார்க்கேக்குள்ள பிறகு அவர் இதையே விரும்பிச் செய்தார்”

ஆம் விவசாயிகளைக் கந்தோருக்கு அழைத்து ஒப்பிப்பதை விடுத்து அவர்களின் தோட்டம் துறவுக்குள் அலுவலர்கள் இறங்கிச் சென்று செய்முறையாகச் செய்து காட்டினாலேயே அவர்களுக்கு அறிவூட்டல்களையும், இது குறித்த விளக்கங்களையும் அளிக்க முடியும் என்கிறார் சச்சிதானந்தன் ஐயா.

அத்தோடு தனது பணிக் காலத்தில் அத்தகைய நடைமுறைகளில்தான் அதிகம் ஈடுபட்டார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

“நான் மன்னாரில நெற்செய்கைக்குப் பொறுப்பான உத்தியோகத்தராக் கடமையாற்றேக்குள்ள செயற்கைப் பசளைகளையும் பார்க்க வைக் கோலைத் திரும்பிப் பாவிக்க வேணும், உமியைக் கருக்கி சாக்கோலாயும் நெல்லுக்குப் பாவிக்க வேணும், வைக்கோலை வயலிலையே திரும்பவும் பசளையாக உழுது பாவிக்க வேணும், குமிச்சு வைச்சு உக்கப் பண்ணி வயலோடை சேர்க்கவேணும் எண்டு சொல்லிக் கொண்டு வந்தன். அது விவசாயிகளால ஏற்றுக்கொள்ளப்படயில்லை. அவர்கள் வைக்கோலைக் கொழுத்திறதும் உழவில சிக்கிறதுமாக இருந்தது. பிறகு என்ன செய்தம் எண்டால் முதல் போகத்து வைக்கோலை வரம்புகள் நீளம் குவிச்சு வைக்கப் பண்ணினம். அடுத்த போகத்தை விவசாயி செய்தார். அதற்கு அடுத்த போகத்துக்கு அந்த வைக்கோலைப் பிரிக்கேக்குள்ள எல்லாம் உக்கித் தூளாகிரும். அதுக்குப் பிறகு அதை வயலிலை பரவி அவரை விதைக்கப் பண்ணினம். அதே மாதிரி உமியையும் இப்பிடி பரல் ஒண்டு கொண்டு போய்க் குடுத்து அதுக்குள்ள போட்டுக் கருக்கி வயலிலை தூவப் பண்ணினம். அந்த வருடம் அவருக்குக் கூடுதலான விளைச்சல். கிட்டத்தட்ட ஏக்கருக்கு 200 புசல் நெல் எடுக்கக் கூடிய மாதிரி இருந்தது.

பிறகு எல்லா விவசாயிகளும் அதைச் செய்திச்சினம். நாங்கள் எதையும் செய்து காட்டி, அதுவும்

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2021 பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு

● சுகுமாரன்

அடுத்த வருடத்துக்கான பாதீட்டில் நாட்டின் பாதுகாப்பு விடயத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தனது காட்டமான கண்டனத்தை நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். விக்னேஸ்வரன் மட்டுமல்ல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகள் பலரும் ஒவ்வொரு பாதீட்டின் பின்னரும் இவ்வாறு பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதிக்கு எதிராகக் கடுமையான கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

ஆனால், இவ்வாறு வருடம்தோறும் பாதுகாப்புக்காக ஒதுக்கபட்டுவருகின்ற நிதிகளுக்குக் கடந்த காலங்களில் என்ன நடந்தது என்பது பற்றி அவர்களில் ஒருவர்கூட ஆராய்ந்து பார்த்ததில்லை. அல்லது அந்த விடயம் தெரிந்தால்கூட அதை வெளியே கூறாது தமிழர்களை அழிப்பதற்கே இந்த நிதி பயன்படுகிறது என்று கூறுவதன் மூலம் தம்மைத் தமிழினத்தில் பற்றுள்ளவர்களாகவும், அக்கறையுள்ளவர்களாகவும், சிங்கள நாடாளுமன்றில் தனித்து நின்று கருத்துக்கூறிய வீரத் தமிழனாகவும் (பெரும்பாலும் தமிழ்ப் பிரதிநிதிகள் பேசும்போது சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருப்பதில்லை. அவ்வாறு இருந்தாலும் மொழி பெயர்ப்புக் கருவியைக் காதில் மாட்டி இவர்களின் பேச்சைக் கேட்க விரும்புவதில்லை என்பது வேறுவிடயம்) காட்ட முனைகிறார்கள். இதனால் பயன் ஏதும் உண்டா என்றால்... இதுவரை காலமும் எவ்வித பயனும் இருக்கவில்லை என்பதே யதார்த்தம்.

**பாதுகாப்பு நிதிப் பயன்பாடு**



கடந்த காலங்களில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் கணிசமான பகுதி போர்க் காலத்தில் வாங்கப்பட்ட ஆயுதங்களுக்கான கடனை அடைக்கவும் படைத்துறை அதிகாரிகளுக்கான வெளிநாட்டுப் பயிற்சிகள், உட்கட்டுமான வசதிகள், நவீன தொலைத் தொடர்பு, கண்காணிப்புக் கருவிகளைக் கொள்வனவு செய்தல், ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனங்களை அமைத்தல், துறைசார் விற்பன்னர்களுக்கு அதிக கொடுப்பனவுகளை வழங்குதல் எனப் பல்வேறு விடயங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் படைத்துறை உயரதிகாரிகளுக்கான விசேட வெளிநாட்டுக் கற்கை நெறிகள் தொடங்கப்பட்டன. அதிலிருந்து அவ்வகை நிகழ்ச்சித் திட்டம் முடுக்கப்பட்டு வருகிறது. வெறும் படைமயமாக்கலாக அல்லாமல் பன்னாட்டுச் சட்ட திட்டங்களுக்கு முகம் கொடுக்கும் வழிமுறைகளும் படையினருக்குப் போதிக்கப்பட்டன.

இப்போது அதிபர் கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியில் படைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துத் தொல்லியல்துறை உட்படப் பல துறைகள் மறுசீரமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புதிய கட்டமைப்புகளுக்கு அதிக பணம் தேவைப்படுவதால் அவை ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

போர் முடிந்து 11ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏன் அதிக ஒதுக்கீடு என்று விக்னேஸ்வரன் கேட்பதைப் பற்றி ஆட்சியாளர்கள் அலட்டிக் கொள்ளப்போவதில்லை. அவர்களது தேவை விக்னேஸ்வரன் போன்றவர்களுக்குப் பதிலளிப்பதற்கு அப்பால் தமது இரகசியச் செயற்பாடுகள் வெளியில் வந்துவிடக்கூடாது என்பதே.

**ஆயுதக் கொள்வனவு அவசியமில்லை**

இலங்கை அரசுக்கு உலகிலுள்ள பல்வேறு நாடுகள் ஆயுத உதவிகளையும் படைத்துறை கூட்டுப் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றன. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா, சீனா, ஜப்பான், பாகிஸ்தான், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பல முன்னணி நாடுகளும் அடக்கம். இறுதிப் போரில் இதையே நாம் கண்டிருந்தோம். இத்தகைய ஒரு சூழலில் இலங்கையின் பாதீட்டில் பணம் ஒதுக்கி ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவேண்டிய அவசியம் இலங்கை அரசுக்கு இருப்பதாகத் தெரியல்லை. இது விடயத்தில் தமிழ் மக்கள் மேலும் தெளிவாக இருக்க வேண்டும். தமிழ் அரசியல்வாதிகளின் பேச்சுகளுக்கு எடுபட்டு விடக்கூடாது. அதேநேரம் படைத்துறைக்கு என ஒதுக்கப்படும் இவ்வளவு பெருந்தொகைப் பணம் எப்படிச் செலவிடப்படுகின்றது, அதன் இரகசிய நோக்கங்கள் என்ன என்பன பற்றித் தமிழர்கள் தெரிந்து கொள்ள வேண்டியதும் மிக அவசியம். ■

## ஐ.நாவை மீறி அடிபாடு...!



ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் டீக்ரே மக்கள் விடுதலை முன்னணிக்கும் எதியோப்பிய அரசுக்கும் இடையில் மோதல் அதிகரித்திருக்கும் நிலையில், அங்குள்ள மெக்கெல்லி நகரில் இறுதிக் கட்ட இராணுவ நடவடிக்கையை அறிவித்திருக்கிறார் எதியோப்பியப் பிரதமர் அபீ அகமது. இதனால் அங்குள்ள தொலைத்தொடர்புகள், இணையச்சேவைகள் என எல்லாமே துண்டிக்கப்பட்டுள்ளன. களத்தில் என்ன நடக்கிறது என்று வெளியுலகுக்குத் தெரியவில்லை. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இந்த மோதலைக் கைவிடுமாறு இருதரப்புகளிடமும் கோரியுள்ளது. ஆனால், ஐ.நாவின் கோரிக்கையையும் மீறி அபீ அகமது போர் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார். அமைதிக்கான நோபல் பரிசை வென்ற அவர் இவ்வாறு ஐ.நாவின் எச்சரிக்கையை மீறிப் படை நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது குறித்து ஊடகங்களில் அதிகம் விமர்சிக்கப்படுகிறது. மியன்மாரின் ஆட்சியாளரான ஆங் சாங் சூகி மீது விழுந்திருந்த கழுகுப் பார்வை இவர் மீதும் விழுந்திருக்கிறது. டீக்ரே மக்கள் இயக்கத்துக்கு எதிராக, ஐந்து லட்சம் பேர் வாழ்ந்து கொண்டிருக்கும் மெக்கெல்லி நகரில் தாக்குதலை நடத்த, எதியோப்பியாவின் இராணுவத்துக்கு அவர் உத்தரவு பிறப்பித்து இருப்பது ஐ.நாவைக் கவலையடையச் செய்துள்ளது. ஆனால், அங்குள்ள மக்களைக் காப்பதற்குத் தான் அக்கறை காட்டுவதாகக் கூறி இருக்கிறார் அவர். அத்தோடு அந்த நகர், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருக்கும் மக்கள், ஆயுதங்களைக் கைவிட்டு வீட்டில் இருக்குமாறும், இராணுவ இலக்குகளி[illegible] வில் இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டு[illegible]




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களத்தில் இறங்கி

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை வயலிலையே செய்து காட்டி, அதின்ர விளைவை அவர்களுக்குக் கொடுத்தால்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவினம். மற்றும்படி விளக்கப்படங்கள் அதுகள் இதுகளைக் காட்டுறதாலை இது சரிவராது'' இவ்வாறு கூறினார்.

**1970**கள் தொடங்கி **28** வருடங்களாக முழங்காவில் பகுதியில் விவசாய விரிவாக்க சேவையாளராகவும் விவசாயப் போதனா ஆசிரியராகவும் இருந்த காலத்தில் முழங்காவில் படித்த வாலிபர் குழாய்க் கிணற்றுத் திட்டமாக முழங்காவில் பிள்ளையார் கோவிலை அண்டிய பிரதேசத்தில உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கைய அறிமுகம் செய்ததாகவும் இறுதியாக வவுனியா எல்லைப் பெருமருதங்குளம் முருகனூரில் **2006**ஆம் ஆண்டில் பண்ணை முகாமையாளராக இருந்து அன்னாசிச் செய்கையைத் தான் அறிமுகப் படுத்தினார் எனவும் குறிப்பிட்டார். விவசாயிகளுடன் எப்போதும் ஒன்றித்திருந்து அவர்களை வழிப்படுத்த வேண்டும் என்ற அவர் தற்போதைய கட்டமைப்புகள் அவ்வாறில்லை என்றும் சொன்னார்.

''முந்தி விவசாயிகளை அணுகக் கூடிய மாதிரி நல்ல வசதியள் இருந்தது என்னெண்டு சொன்னால், முந்தி ஒரு விவசாயப் போதனாசிரியருக்குக் கீழ விவசாய விரிவாக்கச் சேவையாளர்கள் எண்டு கிராம மட்டத்தில ஆக்கள் இருந்தவை. அப்ப விவசாயிகளுக்கும் அவையளுக்கும் திணைக்களத்துக்கும்

இடையில பரஸ்பரத் தொடர்பிருந்தது. பிறகு பிரேமதாசவின்ர ஆட்சிக்காலத்தில எல்லா பயிர்ச்செய்கை உத்தியோகத்தர், விவசாய விரிவாக்க சேவையாளர்கள், விசேட சேவை அலுவலர்கள், எஸ்.எஸ்.ஓ எண்டு சொல்லுறது எல்லாரையும் கிராம அலுவலர்களாக மாற்றிப்போட்டினம்.

கிராம அலுவலர்களின்ர கட்டுப் பாட்டுப் பகுதிகளைக் குறைச்சு,அவர் கமநல சேவைக்கு வாரத்தில ஒரு நாள் போகவேணும், விவசாயிகளைச் சந்திக்க வேணும் விவசாயிகளின்ர பிரச்சினைகளைத் தீர்க்கத் திணைக் களத்துடன் ஜொயின்ரா இருக்கவேணும் எண்டு புதுச் சட்டம் கொண்டு வந்தினம். ஆனால், அது காலப்போக்கில இஞ்சாலை வந்த அசாதாரண சூழ்நிலையால கைவிடப் பட்டிட்டு.

அதேநேரம் தென்னிலங்கையிலையும் அது வெற்றிகரமாக இல்லை. விவசாயப் போதனாசிரியர் மட்டும் தனிய அந்தக் கடமையைச் செய்யேக்குள்ள விவசாயிக்கும் விவசாயத் திணைக்களத்துக்குமான தொடர்பு வந்து நீளமாத்தான் இருக்கும். நெருக்கம் இராது. **1988**ஆம் ஆண்டுக்கு முதல் விவசாயிகளும் விவசாயத் திணைக்களமும் இணைஞ்சிருந்தது. ஏனெண்டு சொன்னால் உத்தியோகத்தர்கள்கூட இருந்தவை. முந்திக் கிட்டடத்தட்ட ஒரு மாவட்டத்திலயே விவசாயப் போதனாசிரியர், விவசாய விரிவாக்கச் சேவையாளர்கள், உதவி விவசாயப் பணிப்பாளர்கள், விவசாயப் பணிப்பாளர் என்று இருந்தது. ஆனால், இப்ப வந்து ஆளணி குறைஞ்சிருக்கேக்க விவசாயிகளிலையும் ஒருசில முன்னோடி விவசாயிகள்தான் விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பில இருக்கினம்'' என்றார்.

அத்தோடு விவசாயிகள் விவசாயத் தரப்பினருடன் இணைந்து செயற்படுவதில் அக்கறை காட்டுவதில்லை என்ற மறுமுகத்தையும் அவர் தொட்டுப்பேசினார்.

''ஆள் தொகை குறைந்தாலும் விவசாயத் திணைக்களம் தன்னுடைய பணிகளை விரிவாக்கியிருக்கு. அவையிட்டயிருந்து தொலைபேசி மூலம் தகவல் எடுக்கலாம், வீடியோக்கள் வெளியீடுகினம், அவர்களைத் தொடர்பு கொள்ளப் பல வழிகள் உள்ளன... ஆனால், அதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுறதில்லை. உதாரணத்துக்குப் பயிருக்குக் கிருமி நாசினி அல்லது களை நாசினி விசிறப் போகினம் என்றால், சந்தைக்குப் போய் வரேக்க மருந்தை வேண்டியாறது. என்ன மருந்து, அதை எந்த அளவுக்கு அடிக்கிறதெண்டு மருந்து விக்கிற கடைக்காரரைக் கேட்டுத் தான் விவசாயிகள் செய்யினமே யொழிய, என்ன அளவில விசிற வேணும், இதாலை என்ன நன்மை, எந்தப் பூச்சி சாகும் எண்ட தெளிவில்லாமலேயே அதைச் செய்யினம். கடைக்காரர் சொல்லுறதை மட்டும் விளங்கிச் செய்யினம். வர்த்தகர்களோடதான் அவர்களுக்குத் தொடர்பிருக்குதே தவிர விவசாயத் திணைக்களத்தோட விவசாயிகள் தொடர்புகொள்ளுறதில்லை. சரியான முறையில செய்தால் செலவும் சுருக்கம். பலனும் கூடவா இருக்கும்''

என்றவவரிடம் இம்முறை மழையை நம்பிய விதைப்பால் விவசாயிகள் பலர் இழப்புகளைச் சந்திக்க நேர்ந்துள்ளதே அது குறித்து அவர்களுக்குத் தங்கள் சார்பில் ஏதாவது விளக்க முண்டா? என்று கேட்டபோது,

''விவசாயப் பணிப்பாளராக விருந்த சுப்பிரமணியம் சொல்லுவார் என்னெண்டால் பத்து வருசத்துக்கு ஒருக்கா அந்த ட்ரெண்ட் மாறும். இந்த முறை ஆவணியில மழை பெய் யத் துவங்கினால், அடுத்த வருசம் ஆவணிக் கடைசியிலதான் பெய்யும். பிறகு புரட்டாதி. இது அப்பிடியே போய்க் கொண்டிருக்கும். இதைக் கவனிச்சு வரவேணும். இந்த வருசம் ஐப்பசியில மட்டும்தான் பெய்திருக்கு. அப்ப அதின்ரை ட்ரெண்ட்டைக் கவனிக்க வேணும். அந்தப் பத்து வருசப் போக்கைக் கவனிச்சு விவசாயிகள் விதைப்பார்களாக இருந்தால்... நட்டத்துக்கு முகங் கொடுக்க வேண்டிவராது. ஆனால், இந்த முறை விவசாயத் திணைக்களம் முதலிலேயே பேப்பரிலை போட்டிருந்தது. முன்னுக்கு விதைக்க வேண்டாம் என்று. இந்த முறை ஐப்பசிக்குப் பின்னுக்குத்தான் மழை யெண்டு சொல்லி... என்ன இருந்தாலும் அந்த மழை ட்ரெண்டைப் பார்த்துச் செய்யவேணும். இதை அனுபவமுள்ள விவசாயிகள் பிடிச்சுக் கொள்ளுவினம். விதைப்பினம். மழை இல்லாமலோ அல்லது போதாமலோ [illegible] இழப்பைத் [illegible] சிறு தானியங்களைச் செய்யலாம். பள்ள நிலங்கள் எண்டபடியா மாரிக்குப் பிறகு தான் சிறுதானியங்களைச் செய்யத் தொடங்க வேணும். தை மாதத்துக்குப் பிறகு அந்த ஈரத்தோட பயறு, உழுந்து போன்ற சிறு தானியங்களைச் செய்யலாம். இந்த முறையெல்லாம் உழுந்துக்கு நல்ல டிமாண்ட் இருக்கு. அதை வரிசையிலையும் செய்யலாம் வீச்சு விதைப்பாகவும் விதைக்கலாம்.

நான் முழங்காவில் ஜெயபுரம் பகுதியில வேலை செய்யேக்குள்ள ஒண்டரை ஏக்கர் காணி மலைநாட்டுத் தமிழ் ஆக்களைக் கொண்டுவந்து குடியேற்றிக் குடுத்தது. அவர்கள் அந்த ஒண்டரை ஏக்கர் காணியிலையும் உழுந்து, கச்சான், சோளம் எல்லாமே வரிசையிலதான் போடுவார்கள். கையாலதான் போடுவார்கள். மானாவாரியாப் போட்டு நல்ல பலன் எடுப்பார்கள். அவர்கள் தங்கட குடும்பக் கூலியோட அதில் நல்ல பலன் பெறுவார்கள். இப்பவும் அதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள். வரிசை விதைப்பால் கூடுதல் பலன் கிடைக்கும்'' என்றார்.

# மட்டிக்கறி...!




கடல் மண்ணுக்குள் புதைந்திருக்கின்ற சிப்பிக்குள் தசை இருப்பது உங்களுக்குத் தெரியுமா...? அந்தத் தசைதான் மட்டி...! சிப்பிக்குள் முத்து இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால், அதைக் கண்டறிவது கடினமாக இருக்கும். இதற்கு மாறாக இந்த மட்டிகளைச் சிப்பிகளுக்குள் இலகுவாகக் கண்டறிய முடியும்.

மூடப்பட்ட சிப்பிச்சோடி ஒன்றுக்குள் தவறாது மட்டி இருக்கும். நீர் மட்டம் குறைந்த, கரையிலிருந்து சில தூரம் வரையில் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்ற சிப்பிகளுக்குள் இந்த மட்டிகள் இருக்கும். சிப்பி என்பது சிறியது. அத்தகைய சிப்பிக்குள் இருக்கின்ற மட்டிகள் எவ்வாறு இருக்கும்? கேள்வியே வேண்டாம் மிகச் சிறியளவில்தான் மட்டி இருக்கும். அத்தோடு ஒரு சிப்பிக்குள் ஒரு மட்டி மாத்திரமே இருப்பதால் உணவுக்குத் (கறி) தேவையான அளவுக்கு அவற்றைச் சேர்ப்பதற்குப் பல சிப்பிச் சோடிகளைச் சேகரிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு சேகரித்த சிப்பிகளைப் பானை ஒன்றுக்குள்ளோ, சட்டி ஒன்றுக்குள்ளோ இட்டுமூடித் தண்ணீர் விட்டு அவிக்கும்போது சிப்பிகள் தானாகத் திறக்கச் செய்யும் - அதற்குள்ளிருக்கின்ற மட்டிகள் வெளித்தெரியும். அவற்றை ஒன்று சேர்த்துப் பாத்திரத்துள் சேர்ப்பதே மட்டிக்கறியின் முதற்கட்டம். அதாவது சிப்பிகளைச் சேகரித்து அவற்றை அவித்து மட்டிகளைப் பெற்ற பின்னரே அதைக் கறியாக்குவதற்குத் தயாராகலாம்...! ஏன் எனில் மட்டிகளைச் சந்தையிலேயோ, வியாபாரிகளிடமோ வாங்க இயலாது. அவர்கள் இதில் ஈடுபாடு காட்டுவதில்லை.

**என்னென்ன பொருள்கள் தேவை...?**

அவித்தெடுக்கப்பட்ட மட்டிகள் - ஒரு கறிக்குத் தேவையான அளவு, தேங்காய்ப் பால் 2 டம்ளர், மரக்கறி எண்ணை 2 மேசைக்கரண்டி, சின்னவெங்காயம் 50கிராம், பச்சை மிளகாய் 50 கிராம், வெந்தயம், சீரகம், உள்ளி என்பன சிறிதளவு, உப்பு, கறிவேப்பிலை, மிளகாய்த்தூள் ஆகியன தேவையான அளவு. கறுவா சிறிய பட்டை ஒன்று, 4 கராம்புகள். தேசிக்காய் பாதி.

**கறி சமைப்பது எவ்வாறு...?**

சட்டி ஒன்றை அடுப்பில் வைத்துச் சிறியளவில் சூடாக்குங்கள். சூடானதும் மரக்கறி எண்ணையை ஊற்றுங்கள். சின்னவெங்காயத்தையும் பச்சைமிளகாயையும் நறுக்கிப்போடுங்கள். வெந்தயம், சீரகம், உள்ளி, கராம்பு, கறுவா ஆகியவற்றை இதனுடன் கலந்து தாழித்துக் கொள்ளுங்கள். இவை வதங்கிய வாசனை வந்ததும் தோங்காய்ப்பாலை விடுங்கள். தொடர்ந்து மிளகாய்த்தூளையும் உப்பையும் தேவையான அளவுக்குப் போட்டுக் கொள்ளுங்கள். இவை நன்றாகக் கொதித்ததும் கறிவேப்பிலையைச் சேர்த்துக் கொள்ளுங்கள். கூடவே அவித்து வைத்திருக்கும் மட்டிகளையும் இட்டுக் கிளறி விடுங்கள். அடுப்பில் இருந்து இறக்கியதும் இறுதியாகத் தேசிப் புளியை விடுங்கள். இப்போது சுவையான மட்டிக்கறி தயார்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சம்பந்தர் கடையடிச் சமா...

"போகிற போக்கில எங்க போய் முடியப்போகுதெண்டு தெரியேல்ல. ஆரு நல்லவன், ஆரு கெட்டவன் எண்டெல்லாம் சொல்ல முடியாமக் கிடக்குது. இதைத் தான் கலிகாலம் எண்டுறதோ..." என்ற சுப்பனின் புறு புறுப்போடு சமா தொடங்கியது.

"போனமுறை முடிச்சுட்டுப் போகேக்க சொல்லுறத்துக்குக் கனக்க இருந்ததெண்டாலும், பெரிய பள்ளிக்கூட விசியம் கொஞ்சம் கதைச்சதால நேரம் நல்லாப் போட்டுதடாப்பா... கனக்கக் கதைக்க வேணும்... நீ சொல்ல வந்ததைச் சொல்லு" எண்டு சுப்பனிடம் வாயைக் குடுத்தன்.

"இல்லையண்ணை! இப்ப கொஞ்ச நாளா எல்லா இடமும் பட்ஜெட் காய்ச்சல்தானே... எல்லா இடமும் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்த கூட்டமைப்புக்காரர் கட்சிக்காரரைக் கட்டாயப்படுத்தினதால ஒரு மாதிரி எங்கட கரவெட்டிச் சபை தப்பிற்றண்ணை.

போன வியாழக்கிழமை கரவெட்டி பிரதேச சபையின்ற பட்ஜெட் பாஸ் பண்ணுப்படுமா இல்லையா எண்டு பரபராப்பா இருந்ததுதானே? அமுல் பேபி அங்கால இங்கால எண்டு கொஞ்சம் காசும் விசிறிப் பாத்தவராம். ஆனா ஒண்டும் சரிவரேல்லப் பாருங்கோ... கூட்டமைப்போட சேர்ந்து ஈ.பி.டி.பியுமா பட்ஜெட்டைப் பாஸ் பண்ண வைச்சிட்டுதாம் அண்ணை... எனக்கு அதுதான் விளங்கேல்ல.. ஆரு நல்லவன், ஆரு கெட்டவன் எண்டெல்லாம் சொல்ல முடியாமக் கிடக்குது...."

"அட தம்பி..! அதில என்னடா கிடக்குது... எல்லாம் டீல்தான் தம்பி.... கூட்டமைப்புக்கு அங்க ஒண்டும் ஈ.பி.டி.பி. முண்டு குடுக்கேல்ல... எங்கடா எப்பா காலை வாருவம் எண்டு திரியுறாங்கள். ஆனா எதிரிக்கு எதிரி நண்பன் எண்ட தத்துவம்தான் இங்க நடந்தது....

கூட்டமைப்போட எப்பவும் ராத்துப்படுறது ஈ.பி.டி.பிக்கு புதுசில்லை. ஆனா.. இப்ப... அரசாங்கத்தோட சேர்ந்து நிக்கிற ஆக்களுக்குள்ள ஆர் அதிகமா விசுவாசம் காட்டுறது எண்டுறதிலதான் கடும் போட்டி. ஏற்கனவே கச்சேரியில இருக்கிற அதிகாரிமாருக்கு இவை இரண்டு பேராலையும் ஒரே தலையிடி... இப்ப இங்கையும் அது தான் பிரச்சினை....."

இருக்கிற கூட்டமைப்புக்காரனைச் செயார்மனா தொடரவிட்டாலும் பரவாயில்லை... சுதந்திரக் கட்சிக்காரன் வர விடக்கூடாது எண்டதுக்காகத்தான் கரவெட்டி சபையில ஈ.பி.டி.பி. பட்ஜெட்டை ஆதரிச்சதாம். இதுக்குள்ள இன்னுமொண்டு நடந்திருக்கு தெரியுமே?

எங்கட கட்சி மெம்பர்மார் எல்லாரும் பட்ஜெட் வாக்களிப்புக்குக் கட்டாயமாப் போகவேணும், போய்ச் சாதகமாத்தான் வாக்களிக்க வேணும் எண்டும் கட்சி "பணிச்சு" கடிதம் அனுப்பியும், ஒரு மெம்பர் வாக்களிப்புக்குப் போகேல்லயாம்... போகாததுக்கு என்ன அக்சன் எண்டு பொறுத்திருந்துதான் பாக்கவேணும்.

பரபரப்பா... பாத்துக்கொண்டிருந்த இரண்டு சபையில ஒண்டு முடிஞ்சுது.... அடுத்தது யாழ்ப்பாணம் மாநகர சபை... அதில என்ன நடக்கப் போகுதோ... அந்த ஆண்டவருக்குத் தான் வெளிச்சம்..

ஆனா உங்களுக்கு ஒண்டு தெரியுமே... எல்லாச் சபையையும் விட மடங்குக் கணக்கில மாநகரத்தில டீல் நடக்குதாம்.... என்ன செய்தாவது பட்ஜெட்டைப் பாஸ் பண்ணிப் போட வேணும் எண்டு தலை கண்டபாட்டுக்கு டீல் எண்டு ரீல் விட்டுக்கொண்டிருக்கிறாராம்.

மற்றப்பக்கத்தால... கூட்டமைப்புக்காரர் கவிழ்ந்து போனால் வீணையை வாசிக்கவேணும் எண்டு சட்டம்பியருக்காகவும் கடுமையான டீல் நகர்த்தப்படுகுதாம். அதுக்குப் புதுவிதமா கணக்கு வேற சொல்லுப்படுகுது.

மாநகர சபையில இருக்கிற கூட்டமைப்புக்காரர் எதிர்த்து வாக்களிக்கக் கூடாதெண்டு கட்சித் தலைமை கடிதம் அனுப்பினதெல்லே... அதுக்காக கட்சியில வாக்களிச்சு சபையில இன்னும் 20 மாதம் இருந்தா... மெம்பர்மாருக்கு எவ்வளவு காசு வருமோ அதைவிட ஒரு லகரம் கூடுதலாத் தாறம்.... பட்ஜெட்டை எதிர்த்து வாக்களிச்சுப் போட்டு, அடுத்த சபையில எங்கட மேயருக்கு வாக்களிக்கவேணும் எண்டு டீல் பேசுப்படுகுதாம்.... எல்லாம் இரகசியமாத்தானே.. செய்தாலென்ன எண்டு மெம்பர்மாருக்கு மண்டையக் கழுவுகினமாம்....

பசுத் தோல் போர்த்திய புலிகள் கனக்கச் சபையில இருக்குதுகளாம்.... இரகசிய வாக்கெடுப்பு எண்டு வந்தா... கவுக்கிறது உறுதி எண்டு கதையடிபடுகுது... பொறுத்திருந்துதான் பாக்கவேணும்.... 2 ஆம் திகதி எல்லாம் தெரியும் தானே? அப்ப [illegible]"

- ஆதிரன்

## கால்பந்தின்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்திற்காகவும் விளையாடினார்.

**உலகக் கோப்பை ஆட்டம்**

மரடோனா ஆர்ஜென்ரீனா சார்பாக 4 உலகக் கோப்பைப் போட்டிகளில் ஆடியிருக்கின்றார். 1982, 1986, 1990, 1994 போட்டிகளில் அவர் ஆடினாலும் 1994ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த போட்டியின்போது மீண்டும் போதைப் பொருள் பயன்படுத்தினார் என்கிற குற்றச்சாட்டில் பாதியிலேயே வெளியேற்றப்பட்டார்.

1986ஆம் ஆண்டு மெக்ஸிக்கோவில் நடந்த உலகக் கோப்பைப் போட்டி தான் அவரது உச்ச ஆதிக்கத்தில் இருந்தது. அந்தப் போட்டியின் காலிறுதியில் இங்கிலாந்து அணியை வெல்வதற்காக அவர் அடித்த 2 கோல்களுமே கால்பந்தாட்ட உலகில் மறக்கப்பட முடியாதவைகள்.

2 - 1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை ஆர்ஜென்ரீனா அந்த ஆட்டத்தில் வென்றது. முதல் கோலைத் தனது தலையால் முட்டியே மரடோனா கோல் கம்பத்திற்குள் நுழைத்தார் என்றே நடுவர் கருதினார். ஆனால். அது மரடோனாவின் கையில் பட்டே கோலானது. ஆட்ட விதிகளின்படி இது மோசடியான ஆட்டம். ஆனால் நடுவர் அதைக் கண்டுபிடிக்கவில்லை என்பதால் அன்றைய தொழில் நுட்பத்தின்படி அது கோலாகவே கொள்ளப்பட்டது. அது தொடர்பாக எழுந்த விமர்சனங்களை எல்லாம் அந்த நேரத்தில் வந்தது எனது கைய்ல்ல அது கடவுளின் கை என்று சொல்லி நழுவிக் கொண்டார் மரடோனா. அதனால் அது கடவுளின் கை கோல் என்று வரலாற்றில் நிலைபெற்றது.

அதே போட்டியில் வெற்றிக்கான அடுத்த கோலையும் மரடோனாவே அடித்தார். இங்கிலாந்தின் நடு மற்றும் பின்கள வீரர்கள் நால்வரை ஏய்த்து, தாண்டி, நெளித்து, சுழித்து 60 மீற்றர்கள் தூரம் பந்தைத் தள்ளி வந்து கோல் காப்பாளரையும் உச்சிக் கொண்டு பந்தைக் கோல் கம்பத்தினுள் செலுத்தினார் மரடோனா. பிபா இணையத் தளம் நடத்திய கருத்துக் கணிப்பில் 20ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த கோலாக அது பதியப்பட்டது. அதுதான் மரடோனாவின் தனித் திறமை. அதை ஈடு செய்யும் ஆட்டத் திறமையுடன் இன்னும் ஒரு வீரன் இந்த மண்ணில் பிறக்கவில்லை.

அந்த உலகக் கிண்ணத்தில் ஆர்ஜென்ரீனா ஆடிய போட்டிகளில் எல்லாம் எதிரணி வீரர்களின் ஒரே இலக்கு மரடோனாவின் கால்களுக்குப் பந்து செல்ல விடுவதில்லை. அல்லது அவரிடம் பந்து சென்றால் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அதனைப் பறித்துவிடுவது என்பதுதான். அதாவது மரடோனாவைச் சுற்றி வளைத்து எப்போதும் மூன்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் இருந்தார்கள். இதனால், பல தடவைகள் மரடோனா மஞ்சள் அட்டை பெறவேண்டியதாக இருந்தது. ஒரு தடவை சிவப்பு அட்டையையும் பெற்றார். ஆனாலும் அதையெல்லாம் மீறி இங்கிலாந்து வீரர்களை உச்சி அந்த உன்னதமான கோலை அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார். தனது 21 வருட கால்பந்தாட்டக் காலத்தில் 490 கழகப் போட்டிகளில் விளையாடி 259 கோல்கள் அடித்திருக்கிறார். ஆர்ஜென்ரீனா அணிக்காக 91 போட்டிகளில் பங்கேற்று 34 கோல்கள் அடித்திருக்கிறார்.

**தீராத விளையாட்டுப் பிள்ளை**

கால்பந்தாட்டத்தில் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்க்கையிலும் மரடோனா விளையாட்டுப் பிள்ளைதான். அவர் தனது நீண்ட நாள் தோழியான கிளாடியா வில்லாபேஃனை 19 வயதில் திருமணம் செய்தார். அவர்களுக்கு டல்மா மற்றும் கியானினா என இரு குழந்தைகள். 25 வருடங்கள் நீடித்த அவர்களது மண வாழ்க்கை 2004இல் முடிவுக்கு வந்தது. இந்த இரு பிள்ளைகள் தவிர மேலும் மூன்று பிள்ளைகள் இருக்கின்றார்கள். அறிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் மேலும் பலர் இருக்கிறார்கள் என்றும் வதந்திகள் இருக்கின்றன. இத்தாலியில் அவருக்கு ஒரு மகன் இருக்கின்றார் என கிறிஸ்டீனா சினாக்ரா என்ற மாடல் பெண் உரிமை கோரினார். 1995இல் இத்தாலிய நீதிமன்றம் அதை உறுதிப்படுத்தினாலும் நீண்ட காலமாக அதை மறுத்து வந்தார் மரடோனா.

ஆனால், முதல் மனைவியை விவாகரத்துச் செய்யும் காலத்தில் இத்தாலியில் தனக்கொரு மகன் இருப்பதை ஏற்றுக்கொண்டார். டியாகோ ஜூனியர் சினாக்ரா என்கிற அந்த மகனும் தொழில்முறை கால்பந்தாட்ட வீரராகவே இருந்து வருகின்றார்.

டியாகோ ஜூனியருக்கு தானே அப்பா என்பதைக்கூட மற்றொரு காதலால் பிறந்த குழந்தையான யானா அவரை இரகசியமாகச் சந்தித்து ஏற்றுக்கொள்ள வைத்ததைத் தொடர்ந்தே ஏற்றுக்கொண்டார் என்று சொல்லப்படுகின்றது. கிளாடியாவுடனான மணவாழ்க்கை தொடர்ந்து கொண்டிருந்த காலத்திலேயே இரவுக் கேளிக்கை விடுதிப் பணியாளரான வலேரியா சபலினுடன் ஏற்பட்ட காதலால் பிறந்தவர் யானா.

டியாகோ ஜூனியரைத் தனது மகன் என்று மரடோனா ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து பல பெண்கள் தமது குழந்தைகளுக்கும் அவரே அப்பா என்று உரிமை கோரத் தொடங்கினர். 2019இல் கியூபாவைச் சேர்ந்த இரு பெண்கள் மூலம் பிறந்த 3 குழந்தைகளுக்குத் தானே அப்பா என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். அந்தக் குழந்தைகளின் பெயர் விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

மரடோனா கொக்கெய்னுக்கு அடிமையாகி இருந்த சமயத்தில் 2000ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை கியூபாவில் சிகிச்சை பெற்றுக்கொண்டார். அந்தக் காலப் பகுதியிலேயே இந்தக் காதல்கள் மலர்ந்தன என்று கருதப்படுகின்றது. கியூபாவில் இருந்த காலத்தில் அந்த நாட்டின் தலைவர் பிடல் காஸ்ட்ரோவுடன் மிக நெருக்கமான நட்பைக் கொண்டிருந்தார் மரடோனா. நாடு திரும்பிய பின்னர் தனது காலில் காஸ்ட்டோவின் முகத்தைப் பச்சை குத்திக்கொண்டார்.

குறைந்தது மேலும் 3 பெண்களாவது தமது குழந்தைகளுக்கும் மரடோனாவே தந்தை என்று உரிமை கோரியிருக்கிறார்கள். ஆனால் இறப்பதற்கு முன்பு வரை அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும் மரடோனாவுக்கும் வரோனிகா ஒஜேடாவுக்கும் இடையிலான காதலால் பிறந்த கடைசி மகனான டியாகோ பெர்னான்டோவுக்கு வயது 7. துன்பியல் என்னவென்றால், பெர்னான்டோ 4 மாதக் கர்ப்பமாக இருக்கும்போதே மரடோனா வரோனிகாவை விட்டுப் பிரிந்து ரோசியோ ஒலிவா என்கிற பெண் மீது மையல் கொண்டிருந்தார்.

மரடோனாவின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்குத் தன்னை அனுமதிக்கவில்லை என்று முன்னாள் மனைவி கிளாடியா தடுத்துவிட்டார் என்று ஒலிவா குற்றஞ்சாட்டியிருக்கிறார். இதற்காக "அவர்கள் அனுபவிப்பார்கள்" என்றும் திட்டியிருக்கிறார்.

இத்தனை குழந்தைகள் இருந்தபோதும் தனது இறப்பின் பின்னர் அவர்களுக்காகத் தான் எதனையும் விட்டுச் செல்லவில்லை என்று ஏற்கனவே மரடோனா தெரிவித்திருக்கிறார். தனது சொத்துக்களை எல்லாம் இறப்பின் பின்னர் அவர் அறக்கட்டளைகளுக்கு எழுதி வைத்திருக்கிறார்.

அவரது இறப்பிற்காக ஆர்ஜென்ரீனா அரசு மூன்று நாள்கள் துக்கதினம் அறிவித்திருந்தது. வெள்ளிக்கிழமை அவரது உடலம் தாங்கிய பேழை அவரது அம்மா மற்றும் அப்பா அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளின் அருகிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 30 கோடிக்கு ஒரு புறாவா!



●பசுபதி தே.பி.ஆனந்த்

ஒரு புறா 30 கோடி ரூபாய்க்கு விற்பனையாகியது என்று கூறி நெஞ்சைப் பதற வைத்தது அந்தச் செய்தி. அப்படி என்னதான் இருக்கின்றது அந்தப் புறாவில்? இத்தனை பணம் கொடுத்து வாங்குவதற்கு?

"எங்களுக்கும்கூட வியப்புத்தான். பொதுவாக ஆண் புறாக்கள் அதிக விலை கொடுத்து வாங்கப்படுவதுண்டு. ஆனால் இரண்டு வதேயான நியூ கிம் என்கிற இந்தப் பெண் புறா இவ்வளவு பெரிய வரலாற்றுச் சாதனையை படைக்கும் என்று நாம் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை" என்கிறார் பீபா (பீஜின் பரடைஸ் என்கிற பெயரின் சுருக்கம்) என்ற இணைய புறா ஏல விற்பனை நிறுவனத்தின் உரிமையாளர் நிக்கோலஸ்.



கடந்த ஆண்டு இதேபோன்றதொரு ஏலத்தில் அர்மான்டோ என்கிற ஆண் புறா விற்கப்பட்ட விலையைவிட (1.5 மில்லியன் அமெ. டொலர்) 40 லட்சம் அமெரிக்க டொலர் அதிகமான பெறுமதிக்கு விற்பனையாகி உள்ளது நியூ கிம்.

சீனாவைச் சேர்ந்த தொழிலதிபர்களான சுப்பர் டூப்பர் மற்றும் கிட்மான் என்கிற இருவருக்கு இடையில் நடந்த போட்டி கடைசியில் இவ்வளவு பெரிய தொகையில் சென்று முடிந்திருக்கின்றது. கடந்த வருடம் அர்மான்டோவை வென்றவரே இந்த நியூ கிம் பெண் புறாவையும் வென்றிருக்கிறார் என்கிறது பீபா. ஆகக் கூடுதலான தொகைக்கு வாங்கப்பட்ட இரு புறாக்களையும் இணை சேர்ப்பதே அந்தத் தொழிலதிபரின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உலகில் அதிகூடிய விலைக்கு விற்கப்பட்ட புறாக்கள் எல்லாமே சீனத் தொழிலதிபர்களால்தான் கடந்த காலங்களில் வாங்கப்பட்டுள்ளன. எனினும் அவர்களின் உண்மையான பெயர்கள் வெளியே தெரியாது. சூப்பர் டூப்பர், கிட்மான் என்பன வெல்லாம் ஏல இணையத் தளத்திற்காக வைக்கப்பட்ட புனைபெயர்கள்தாம்.

இந்தப் புறாக்களை இவ்வளவு விலை கொடுத்து வாங்கி அப்படி என்னதான் செய்வார்கள் என்று அறிய இது பற்றித் தெரிந்த யாரிடமாவது கேட்கலாம் என்று தேடினோம். யாழ்ப்பாணத்திலேயே இதுபோன்ற 'ரேசிங் கோமர்களை' வளர்ப்பதில் தேர்ந்த, இலங்கையைக் குறுக்கறுத்துக் கடந்து ஒரு லட்சம் ரூபாய் பரிசையும் வென்றவர் என்று பெருமையாகச் சொல்லப்படும் அன்ரன் என்பவரைக் கடைசியில் கண்டுபிடித்தோம்.

> 530 கிலோ மீற்றர்கள் தூரத்தைக் கடந்து யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலில் வந்து சம்பியனாகி அன்ரனுக்குப் பெருமை சேர்த்த புறாவின் பெயர் ஆதன்.

திருநெல்வேலியில் வசிக்கும் அன்ரன், இந்தப் புறாக்களின் சிறப்பியல்புகளை விளக்கினார்.

"மனிதனோடு சேர்ந்து வாழும் காலத்தால் முற்பட்ட பறவைகள் என்றால் அது புறாக்கள்தான். மனிதர்களுக்கும் இவற்றுக்குமான தொடர்பு 5 வருடங்களுக்கும் முற்பட்டது என்று சொல்லப்படுகின்றது. புறாக்களில் 300க்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. அவற்றை இரு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். அழகுக்கு வளர்க்கப்படும் புறாக்கள் ஒரு வகை. விளையாட்டுக்காக வளர்க்கப்படுபவை இரண்டாவது வகை.

ரேசிங் கோமர் எனப்படும் பந்தயப் புறாக்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவை. இவற்றை 'பெர்போர்ஃமன்ஸ் பேட்ஸ்' என்று சொல்லுவோம். நீண்ட தூரங்களில் இருந்து தமது கூண்டுகளுக்குத் திரும்பி வரும் இவற்றின் இயல்பே இவற்றின் தனித் தன்மை. அர்மாண்டோ மற்றும் நியூ கிம் எல்லாம் இந்த வகையான புறாக்கள்தான். ஆயிரம் கிலோ மீற்றர்கள் தூரம் தாண்டிக் கொண்டு சென்று விட்டாலும் ஒன்றரை நாள் முதல் சில நாள்களுக்குள் கூண்டுகளுக்குத் திரும்பிவிடும்.

அரசர்கள் காலத்தில் செய்திப் பரிமாற்றத்திற்கும், உலகப் போர்க் காலத்தில் படைத்துறைத் தகவல் பரிமாற்றங்களுக்கும், பின்னர் தபால் போக்குவரத்துக்கும் பயன்படுத்தப்பட்ட இந்த வகைப் புறாக்கள் பின்னர் விளையாட்டுக்காக வளர்க்கப்படத் தொடங்கின. நீண்ட தூரங்களுக்கு எடுத்துச் சென்ற பின்னர் திறந்துவிடப்படும் இந்தப் புறாக்களில் எந்தப் புறா வேகமாகக் கூண்டுக்குத் திரும்புகின்றதோ அதுவே வெற்றியாளர். இந்தப் போட்டிகளை நடத்துவதற்கென கழகங்கள் உள்ளன.

இலங்கையில் ஆகக் கூடுதலான தூரத்திற்கு (430 கி.மீ.) இந்த வகைப் போட்டிகளை நடத்துவதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் பபுகயா என்கிற கழகமும் வடமாகாணம் முழுவதற்குமான போட்டிகளை நடத்துவதற்கு ஒன்றியம் (வடக்கு மாகாண பந்தயப் புறாக் கழகங்களின் ஒன்றியம்) என்கிற அசோசியேசனும் உள்ளன.

பெல்ஜியம் நாடுதான் இந்த வகைப் பந்தயப் புறாக்களுக்குப் புகழ் பெற்றது. கடந்த பல தசாப்தங்களாக தெரிந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்க முறையின் மூலமாக மிகச் சிறந்த பந்தயப் புறாக்களை அவர்கள் உருவாக்கி வந்திருக்கிறார்கள். அதனால்தான் அந்தப் புறாக்களை வாங்கிக் கொள்வதற்கு உலகெங்கும் இருந்து போட்டிபோடுவார்கள். அர்மென்டா மற்றும் நியூ கிம் எல்லாமே பெல்ஜியம் நாட்டுப் புறாக்கள்தான்" என்று நீண்ட விளக்கம் தந்தார் அன்ரன்.

அவர் சொன்னதைப் போலவே நியூ கிம் புறா சாதாரணமாக 200 டொலர் பெறுமதிக்குத்தான் ஏலத்தில் விடப்பட்டது. ஆனால், தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இரு தொழிலதிபர்கள் அந்தப் புறாவை வாங்குவதற்குப் போட்டிபோட்டு 1.2 மில்லியன் டொலர் வரைக்கும் விலையை அதிகரித்தார்கள். அதன் பின்னர் சீனத் தொழிலதிபர்கள் போட்டியிட்டு வரலாற்றுப் பெறுமதியை நிர்ணயித்தார்கள்.

நியூ கிம்முக்கான இந்தத் தொகை அதன் வளர்ப்பாளரான கஸ்டன் வான் டி ஊவர்கூட எதிர்பார்க்காதது. "இந்தத் தொகையை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை, அதுவும் ஒரு பெண் புறாவுக்கு" என்கிறார் அவர். அதற்குக் காரணமும் இருக்கிறது. அர்மண்டா போன்றே அதிக விலைக்கு விற்கப்பட்ட மற்றைய சில புறாக்களான நடீன் மற்றும் போல்ட் போன்றோ நியூ கிம் அதிகளவு போட்டிகளை வென்றதில்லை. இளம் புறாக்களுக்கான பந்தயத்தில் அது சிறந்த பெறுபேறுகளைக் காட்டியதை அடுத்து ஒரு வருடத்துடனேயே அதைப் பந்தயத்தில் ஈடுபடுத்தாமல் மறித்துவிட்டார் அதன் உரிமையாளர்.

கஸ்டன் நீண்ட காலமாகப் பந்தயப் புறாக்களை வளர்த்துப் போட்டிகளில் பங்கேற்றவர். வயது முதிர்வு காரணமாகவும் தனக்குப் பின்னர் தனது பிள்ளைகளில் எவருக்கும் இந்தக் கலையில் விரும்பமின்மை காரணமாகவும் தனது கைவசம் இருக்கும் 450 புறாக்களையும் ஏலத்தில் விற்கின்றார். இதன் மூலம் அவருக்குக் கிடைத்துள்ள மொத்தத் தொகை 5 மில்லியன் டொலர்கள். 92 கோடிக்கும் அதிகமான இலங்கை ரூபாய் பெறுமதி.



"இங்கு அவ்வளவு பெறுமதிக்கெல்லாம் இந்த வகைப் புறாக்கள் விற்கப்படாது" என்கிறார் அன்ரன். "சில ஆயிரங்கள் முதல் ஒரு சில லட்சங்கள் வரை வேண்டுமானால் இங்குள்ள புறாக்களுக்கு விலைகொடுக்கப்படலாம்" என்கிறார் அவர்.

இலங்கையின் அடிப் பாகமான மாத்தறை, டொந்தர, ட்ராகன் மவுத் என்கிற முனையில் இருந்து, வான் வழியில் 430 கிலோ மீற்றர்கள் தூரம், தரை வழியில் 530 கிலோ மீற்றர்கள் தூரத்தைக் கடந்து யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலில் வந்து சம்பியனாகி அன்ரனுக்குப் பெருமை சேர்த்த புறாவின் பெயர் ஆதன்.

அந்தப் புறாவின் பெயரையே தனது கூண்டுப் பெயராகவும் வைத்துள்ளார் அன்ரன். மூன்று வயதுக்குள்ளாகவே ஆதன் உயிரிழந்துவிட்டாலும் அதனது வம்சத்தில் வந்த புறாக்கள் இன்னும் மிகச் சிறப்பாகத் தனது கூண்டுக்குப் பறந்து வருகின்றன என்றும் பெருமையோடு சொல்லிக்கொள்கிறார்.

புறாக்களுக்கு இடையிலான இந்தப் போட்டிகள் இலங்கையில் கடந்த சில வருடங்களாகத்தான் அறிமுகமாகி இருக்கின்றன என்று கூறும் அவர் யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாணத்தில் இந்த விளையாட்டு இப்போதுதான் வளர்ந்து வருகின்றது என்றும் அது மிகப் பெரியளவில் வளர்வதற்கு இன்னும் சில வருடங்கள் எடுக்கும் என்றும் சொல்கிறார்.

"அப்படி ஒரு வளர்ச்சி ஏற்பட்டால், ஒருவேளை எங்களது புறாக்களும் உலகச் சந்தையில் மதிப்பு மிக்க விலைக்குப்போகக்கூடும்" என்கிற அவரது நம்பிக்கை வெற்றிபெற வாழ்த்துக் கூறி விடை பெற்றோம்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியார் வீதியிலுள்ள [illegible] பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.11.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org